[illegible] [illegible]

[illegible] 17 [illegible] 3

17 Sep 1931


JL
ØØ211, N15ΦB
N31. 17. 3.
182513

[redacted]. M. 1190. Sept. 1931 பிரஜோற்பத்திஸு புரட்டாசிமீ

REGD. No. M. 1190.





# ஆனந்த போதினி



# ANANDA BODHINI.

Vol. 17. பொருளடக்கம். No. 3.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | ... 161 |
| 2. | அரும்பொருள் விளக்கம் | ... 162 |
| 3. | நமது கடமை | ... 163 |
| 4. | ஊர்ப்பெயர்களின் உருத்திரிதல் | 170 |
| 5. | ஒரு பெரியாரின் மகிமை | ... 173 |
| 6. | மேனாட்டுத் தத்துவம் | ... 177 |
| 7. | இன்பந்தேடிய இளவரசன் | ... 181 |
| 8. | ஒரு கைம்பெண்ணின் கதை | ... 187 |
| 9. | நாடகம் | ... 191 |
| 10. | நவீன நாகரிக நாடக விநோதம் | 194 |
| 11. | மேனாட்டு விழுச் செல்வம் | ... 204 |
| 12. | சுதந்தரப் பள்ளு | ... 208 |
| 13. | ஏழுமலையின் தத்துவம் | ... 209 |
| 14. | தேசம் விழைவது எதனை? | ... 216 |
| 15. | துருக்கிப்பெண்களின் தற்கால நிலை | 221 |
| 16. | காந்தியடிகளின் சீமைச் செலவு | 225 |
| 17. | சன்மார்க்க போதங்கள் | ... 128 |
| 18. | தமிழ்ப்பாஷைச் சிறப்பு | ... 230 |
| 19. | பரிசு பெற்றவர்களின் விவரம் | ... 233 |
| 20. | நாவல் | ... 235 |
| | பிரபஞ்ச விநோதம், பஞ்சாங்கம் | 239, 240 |









# " ஆனந்தபோதினி "

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—8—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

**ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.**

(1) *சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள்* **பூரணமாகப் பெயரை** *எழுதி யனுப்பவேண்டும்.*

(2) *சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.*

☞ (3) *சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2—அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6-அதாவது 5-அணு சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம்.* **இதைக் கவனிக்கவும்.**

(4) *யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.*

(5) *இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.*

(6) சந்தா நம்பரைக் *குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர்* **ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது** *அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.*

(7) *வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும்.*

| | | | |
|---|---|---|---|
| **Life Subscription** ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |

---


*Telephone* No. 3005. *Telegram* :—"Ananda Bodhini," Madras.

விலாசம்:—நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி"

6, லயன் சின்னதம்பி முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

இனாம்

# இனும்! 6 இனும்!!

தங்களுக்கு தெரிந்த
பொன் வேலை செய்யும்
ஆச்சாரிகள்,
நகை வியாபாரிகள்
காசு கடை வியாபாரிகள்

விலாசம் 6

தெரியப்படுத்தினுல்
அநேக வர்ணங்களில்
அச்சிட்ட போஸ்டு கார்டு
சைசில் கீழ்கண்ட படங்கள்

1. ஸ்ரீ கிருஷ்ணன்
2. விஷ்ணு பூஜை
3. லக்ஷ்மி சரஸ்வதி
4. கணபதி
5. பார்வதி பரமசிவன்
6. ராம பட்டாபிஷேகம்

இனமாய் அனுப்பப்படும்.

**பி. கோபாலசாமி நாயுடு அண்டு சன்ஸ்,**
நகைகள், ஆபரண கற்கள் வியாபாரம்,
பரங்கிமலை போஸ்ட், (மதராஸ்) கோ.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்

அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்

வெளியாயிற்று!

18751B

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள் -

(மூன்றும் பதிப்பு)

அழகிய சீலை கலீகோ வைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் போனந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந் நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளிவிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாரங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன்பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

## இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி சாஸ்திர் ஆராய்ச்சி, தந்திரம், சாமர்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காரனைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உங்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்குகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 4 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

## (சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றும் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கோள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## எமது சொந்தப் பிரசுரங்கள்.

# கைவல்ய நவநீத வசனம்.

## (இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீமான். ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

# இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந் திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம் பொருந்திய செயல்களாயும படிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

**ஞானசெல்வம்பாள் (5-பாகங்கள்) 9 10 0**

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இதுதான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரியதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 2 0 0
ஐந்தாவது பாகம் மாத்திரம் ,, ,, 1 10 0
ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு
ஐந்து பாகமும் சேர்ந்து வாங்கினால் ,, ,, 8 0 0

**பவளத்தீவு 2 பாகம் 3 0 0**

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

# சந்திராபாய்

## அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, டார்படோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனநாகரீகப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2—0—0.

# கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரச மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணாபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

# மதனாம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8

அற்புதமர்மங்கள் அல்லது

**ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0**

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டு விசித்திரமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடைவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

**அமராவதி 2 பாகம் 4 0 0**

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**இரத்தினபுரி இரகசியம் 4 பாகம் 8 4 0**

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

# நெட்டாஜி சரித்திரம்.

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமாக அவனியில் தோன்றி அவதார புருஷராய் விளங்கிய சிவாஜிக்குப் பக்கத் துணையாய் இந் நெட்டாஜி எப்பொழுதும் நின்று மொகலாயக் கொடுங்கோன்மையினின்றும் தேசத்தை விடுதலை செய்து சிவாஜிக்கு நேரிடயிருந்த பல விபத்துக்களையும் தடுத்து, அவருக்குச் சதிசெய்த பாவிகளின் உயிரைப் போக்கி, அஞ்சா நெஞ்சனாய் அநேக ஆபத்துக்களினின்றும் தப்பி, ஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று விளங்கினன். இதில் யுத்த சம்பந்தமான தந்திரங்களும் வீரர்களின் சாமர்த்தியங்களும் வெகுவாக எழுதப்பட்டு தேசபக்தியைப் புகட்டும் விஷயங்கள் நிறைந்திருக்கின்றது. இதன் விலை அணா 10.

# கிராமபோன் சங்கீத கீர்த்தனாம்ருதம்

தற்காலம் கிராமபோன் என்னும் ஸங்கீதக் கருவியில் பாடிவரும் திருச்செந்தூர் ஷண்முக வடிவு, எஸ். வி. சுப்பைய பாகவதர், டி. எம். காதர்பாஷா, எஸ். ஆர். கமலம், மிஸ் கே. ரங்கநாயகி, மதுரை மிஸ் அ. சுந்தரம், திருநெல்வேலி டி. எஸ். ரங்கம்மாள், சேலம் அம்மாகண்ணு, திருவிடைமருதூர் பவானி, சேலம் கோதாவரி, மிஸ் லோகாம்பாள் இன்னும் பல வித்வத் ரத்னங்கள் பாடிய 300 கீர்த்தனைகளை ஒருங்கு சேர்த்து ராகதாளங்களுடன் அச்சிட்டு நேர்த்தியாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. சங்கீதாபிமானிகளுக்கு இது ஓர் பொக்கிஷம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

**301 கீர்த்தனைகள் கொண்ட 1-ம் பாகம் விலை ரூபா 1.**
**246 கீர்த்தனைகள் கொண்ட 2-ம் பாகம் விலை ரூபா 1.**
**211 பெரிய கீர்த்தனைகளுள்ள 3-ம் பாகம் விலை ரூபா 1.**
**226 பெரிய கீர்த்தனைகளுள்ள 4-ம் பாகம் விலை ரூபா 1.**
**210 கீர்த்தனைகள் கொண்ட 5-ம் பாகம் விலை ரூபா 1.**
**195 பெரிய கீர்த்தனைகளுள்ள 6-ம் பாகம் விலை ரூபா 1.**
**ஆறு பாகமும் சேர்ந்தது ஒரே கட்டடம் விலை ரூபா 5—4—0**

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

வெளிவந்துவிட்டது!　　　　விற்பனைக்குத் தயார்!

## பரமார்த்த தரிசனம் என்னும்

# ஸ்ரீமத்பகவத்கீதை வசனம்

(ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.)

வேதோபநிடதங்களாகிற பசுக்களைக்கொண்டு, ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த ரூபியான பகவான், அனாதியாகவே ஆணவ மலத்தில் அழுந்தியுழலும் ஆன்மகோடிகளின் உஜ்ஜீவனத்தின்பொருட்டு, அருச்சுனனாகிற கன்றின் மூலமாக, தேவதாமிர்தத்திற்கொப்பான கீதையாகிற பாலைக் கறந்தருளினர். இப்பெறுதற்கரிய பால் கோரமான ஜனன மரண ரூபமாகிய சமுசார சாகரத்தை அநாயாசமாகக் கடத்தற்குரிய தோணியாகின்றது.

இது, பாரதப் போரில், யுத்தகளத்தில், அருச்சுனன் தன் தாயாதி முதலியோர்களைக் கண்டு, மயக்கங்கொண்டு, தனது க்ஷத்திரிய தருமத்தைக் கைநெகிழவிடுத்தபோது ஸ்ரீ பகவான் அவனுக்கு உண்மை விளங்க உபதேசித்தருளிய சிறந்ததோர் தத்துவநூல்; எல்லாப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு எல்லாராலும் பொன்னேபோற் போற்றப்படுவது; கன்ம, ஞான, பக்தியோகம் முதலியவற்றை விளக்கமாக எடுத்துரைப்பது; பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது. இதன் ஆவசியகத்தைப் பெரிதுங் கருதி ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள், ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் கருத்துக்கிணங்க கோயிலூர் ஸ்ரீமத் பொன்னம்பல சுவாமிகள் செய்தருளிய பாஷியத்தைத் தழுவி, சகலரும் படித்துஜ்ஜீவிக்க, இனிமையான எளிய தமிழ்நடையில் வசன ரூபமாக எழுதி நமது ஆனந்தபோதினியின் வாயிலாகச் சிறிது சிறிதாக வெளியிட்டு வந்தார். அது இப்போது தனிப் புத்தகமாக அச்சிடப்பட்டு விலைக்குத் தயாரா யிருக்கின்றது.

### இதில் அடங்கியுள்ள விஷயங்கள்.

கடவுள் ஸ்துதி, 1. சோக அத்தியாயம், 2. சாங்கியயோக அத்தியாயம், 3. கருமயோக அத்தியாயம், 4. சம்பிரதாய அத்தியாயம், 5. ஞானகரும அத்தியாயம், 6. யோக அத்தியாயம், 7. மாயாரூப அத்தியாயம், 8. எழுவகை வினாவுரைத்த அத்தியாயம், 9. மாயாவிகார அத்தியாயம், 10. விபூதியோக அத்தியாயம், 11. விஸ்வரூப அத்தியாயம், 12. பக்தியோக அத்தியாயம், 13. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாகயோக அத்தியாயம், 14. குணாதீத அத்தியாயம், 15. பிரபஞ்ச அத்தியாயம், 16. தேவாசுர சம்பத்து விபாகயோக அத்தியாயம், 17. குணவிகார அத்தியாயம், 18. சஞ்சேப அத்தியாயம்.

**இதன் விலை ரூபா 1-8-0.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-31 வரை விலை ரூ. 1-4-0.

## "ராதை"

இனிய கதைக் கரும்பு. உலக அனுபவங்கள் நிறைந்தது. எல்லாம் ரசம் நிறைந்த கற்கண்டுத் துண்டுகள். வெகு சொகுசு. பிரபஞ்ச விலாசம் 147 குறிப்புகள் உள்ளது.　　படத்துடன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓம்
பரப்பிரம்மணே நம

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி | பிரஜோற்பத்தி௵ புரட்டாசி௴ ௧௨ | பகுதி |
|---|---|---|
| 17 | 1931௵ செப்டம்பர்௴ 17௳ | 3 |

## கடவுள் வணக்கம்.

பாகமோ பெறவுனைப் பாடவறி யேன்மல
　　பரிபாகம் வரவுமனதில்
பண்புமோ சற்றுமிலை நியமமோ செய்திடப்
　　பாவியேன் பாபரூப
தேகமோ திடமில்லை ஞானமோ கனவினும்
　　சிந்தியேன் பேரின்பமோ
சேரவென் றுற்கவ்வ மனதுமோ மெத்தவும்
　　சிந்திக்கு தென்செய்குவேன்
மோகமோ மதமோ குரோதமோ லோபமோ
　　முற்றுமாற் சரியமோதான்
முறையிட் டெனைக்கொன்று தினியமோ தேடலெனின்
　　மூகவரி வண்டுபோல
மாகமோ டவும்வல்லன் எனையாள வல்லையோ
　　வனமருவு தேவையரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்த மலை
　　வளர்காத லிப்பெணுமையே. (1)

சோதியாய் இருட்பிழம்பைச் சூறையாடும்
சுடரொளியே எனைத்தொடர்ந்து தொடர்ந்தெந்நாளும்
வாதியா நின்றவினைப் பகையைவென்று
வாழ்வேயின் றுனைப்பிரிந்து மயங்குகின்றேன். (2)

கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்ப தெந்நாளோ. (3)

# அரும்பொருள் விளக்கம்

1. இதனால் நிலையற்ற பொருள் வேட்கை மிக்குள்ள தம்மை ஆட்கொண்டருளுமாறு வேண்டுகிறார்.

(இ-ள்) வளம் பொருந்திய தேவைநகர்க் கரசியே! மலையாசனுக்கு இரண்டு கண்மணிபோன் றுதித்த—மலையின்கண் வளரும் காதலிப்பெண் உமையே! உன்னை நயமுறப்பாட அறிந்திலேன். மலபரிபாகம் உண்டாதற்கும் என் மனதில் நற்குணம் சிறிதும் இல்லை. நியமம் செய்யலாம் என்றாலோ பாவியாகிய எனது பாவவடிவ உடலுக்கு வலிமை இல்லை. ஞானத்தைக் கனவிலுங் கருதேன். பேரானந்தத்தைச் சேரவென்றாலோ எனது வஞ்ச மனம் மிகவும் ஆலோசிக்கிறது. நான் என்ன செய்யக்கடவேன்? இந் நிலைமைக்குக் காரணம் மோகமோ, மதமோ, குரோதமோ, லோபமோ, முற்றப்பெற்ற மாற்சரியமோ—இவையனைத்தும் முறியோலையில் எழுதி வாங்கிக் கொண்டு என்னை அடிமையாகக் கொள்ளும். இந்நிலையில் பொருள் சம்பாதிக்க வென்றாலோ, மொய்க்கும் வரிவண்டைப்போல் ஆகாயத்திலுங்கூடப் பறந்தோட வல்லவனா யிருக்கிறேன். இத்தகையனாகிய என்னை ஆட்கொள்ள வல்லையோ? என்க.

பாகம் என்றது சொன்னயம், தொடைநயம், பொருணயம் முதலியவற்றை. மலபரி பாகமாவது ஆன்மாவுக்கு இருவினை யொப்பு வந்தவழி பாசம் விலகுதல். இப்பாகத்திற்கு மனம் சாத்துவிக நிலையிலிருக்க வேண்டுமாகலின் "மனதிற் பண்புமோ சற்றுமில்லை" என்றனர். நியம முதலிய கூடிய யோகத்தில் நிலைபெற அநுசரித்தற்குச் சரீரபலம் முக்கியமாகலின் "தேகமோ திடமில்லை" என்றனர். ஞானம் ஒன்று இருப்பதாக எக்காலத்தும் நினைத்திலேன் என்பார் "ஞானமோ கனவிலுஞ் சிந்தியேன்" என்றார். மோகம், மதம், குரோதம், லோபம், மாற்சரியம் என்றதினால் காமத்தினையும் சேர்த்துக் கொள்ளுக. அறுவகை விகாரங்களிற் கட்டுப்பட்டுச் செல்வத்தின் பொருட்டு எத்திசையும் தேடியலையும் எனக்கு அருள் கிடைக்குமோ என்பார் "மோகமோ............ஆளவல்லையோ" என்றனர்.

2. இதனால் இறைவனைப் பிரிந்து நிற்பதினால் விளையும் தீமையைக் கூறுகின்றார்.

ஒளியாகி இருட்கூட்டத்தைக் கொள்ளைகொள்ளும் பரிசுத்தமான சிதாகாயமே! அடியேனைப்பற்றிப்பற்றி எப்பொழுதும் வருத்தாநின்ற கரும சத்துருவைச் செயித்த பெருவாழ்வே! உன்னைப் பிரிந்து இவ்வுலகில் மயங்காநின்றேன் என்க.

முதல்வன் அருட்பெருஞ்சோதி யாகலின் அவன் முன்னர் இருள் நில்லாதாதலினாலும், அவன் திருவருணோக்கத்தின் முன் வினையனைத்தும் நீங்கிப் போகு மாதலினாலும் "இருட் பிழம்பைச் சூறையாடும் தூவெளியே" எனவும் "வினைப்பகையை வென்ற வாழ்வே" எனவும் கூறினர்.

2. (இ-ள்.) கையில் விளக்கேந்திக்கொண்டு அவ்வெளிச்சத்தின் பின்னே போய்த் தமக்கு வேண்டிய பொருள்களைக் காண்பார்போல் உண்மைஞானமென்னும் விளக்கை ஏந்திக்கொண்டு அதன்வழிச் சென்று உண்மைப் பொருளைத் தரிசிப்பது எக்காலமோ என்றபடி.

ஆனந்தபோதினி

பிரஜோற்பத்தி

௵ புரட்டாசிமீ 1உ

## நமது கடமை.

மக்கட் பிறவி மாண்புடையது. மக்கட்கே பகுத்தறியும் ஆற்றல் உண்டு. ஏனைய உயிர்கட்கு இவ்வறிவு இல்லை. உண்டல், உறங்கல், இன்பம் நுகர்தல் முதலியன எல்லா உயிர்கட்கும் பொது. ஆனால் விலங்கினமுதலியவற்றின் வாழ்க்கை வேறு—மக்கள் வாழ்க்கை வேறு. நன்மை, தீமை, ஒழுக்கம், அன்பு இரக்கம், மானம், ஈனம் முதலிய உணர்ச்சிகள் மக்கட்கே உண்டு. விலங்கு முதலிய ஏனைய உயிர்கட்கு இவ்வுணர்ச்சிகள் இல்லை. அவைகட்கு உண்பதும், உறங்குவதும், இன்ப நுகர்ச்சியுந்தான் நோக்கம். மக்கட்கு இவையே தனி நோக்கம் அல்ல. இவையே-உலகபோகங்களே நோக்கமானால் விலங்குகட்கும் மக்கட்கும் ஒரு சிறிதும் வேற்றுமை இருக்கமுடியாது. மக்கள் தங்கட்குள்ள பகுத்தறிவின் சிறப்பால் உயரிய வாழ்க்கையை-ஆன்மார்த்த வாழ்க்கையை மேற்கொள்ளும் நிலைமையில் இருக்கின்றனர். அன்பு, அருள், ஒழுக்கம், பிறர்நலம் பேணல் முதலிய நறுங்குணங்கள் மக்கள் வாழ்க்கையை மாண்புறச் செய்கின்றன. இக்குணங்களை வளர்ப்பதே சமயங்கள்.

நமது பாதகண்டம் சமயங்களின் பிறப்பிடம். உலகத்திலுள்ள பல்வேறு சமயங்களின் தத்துவங்கள்-உண்மைகளெல்லாம் நம் நாட்டுச் சமயங்களில் அடங்கிக்கிடக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து ஆன்மார்த்த விஷயத்தில் நமது பாரதமாதாவே தலைமை ஸ்தானம் வகிக்கின்றனள் எனலாம். உலகியல் போகமே வாழ்க்கையின் நோக்கமாகக் கருதிக்கொண்டிருக்கும் மேனாட்டாரிடையே ஸ்வாமி விவேகானந்தர் முதலிய மகான்கள் சென்று நமது சமய உண்மைகளை விளக்கி நிலைநாட்டிவிட்டு வந்தமை ஒன்றே நம் ஆன்மார்த்தப் பெருமைக்குத் தக்க சான்றாகும். நம் நாட்டு நாகரிகம் ஆன்மார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்குள்ள வேதங்கள், ஆகமங்கள்,

ஸ்மிருதிகள், புராணேதிகாசங்கள், காவியங்கள், கதைகள், நாடகங்கள் முதலிய எல்லாவற்றிலும் நம் பெரியோர் அநுபவ பூர்வமாய் அறிந்துகொண்ட தத்துவ விளக்கங்களே நிறைந்திருக்கும். மத சம்பந்தமற்ற எக்காரியத்தையும் இந்து சமூகத்தில் காண்டல் அரிது. அஹிம்ஸா தருமமே நம் சமயங்களின் சாரம். எனவே பரஸ்பர அன்பு, சகோதரத்துவம், சமத்துவம் முதலிய சிறந்த குணங்கள் நமது நாட்டில் தழைத்து வளர்ந்தன என்பதில் ஐயம் இல்லை.

என்றும் ஒரே நிலையில் உலகம் நிற்பதில்லை. மாறுதல் அடைவது உலக இயற்கை. எக்காரணம் பற்றியோ நம் சமயங்களிலும் சமூக வாழ்க்கையிலும் நாளாவட்டத்தில் மாசுபடியத் தொடங்கிவிட்டது. சமய உண்மைகள் சாதாரண மக்கட்கு விளங்காமல் போயின. இதனால் மூட நம்பிக்கைகளும், தீய ஒழுக்க வழக்கங்களும் நாட்டில் வளர்ச்சிபெறத் தொடங்கின.

பிற நாடுகளெல்லாம் தீவிர முன்னேற்றம் பெற்றுவரும் இந்நாளில் நமது நாடு மிகவும் பிற்போக்கான இழிநிலையில் இருந்துகொண்டிருக்கிறது. முற்காலத்தில் எந்தச் சமயங்கள் பாரத அன்னைக்குப் பெருமையை அளித்துக்கொண்டிருந்தனவோ அந்தச் சமயங்களின் பேராலேயே தற்காலத்தில் நமது அன்னை சிறுமை நிலையில் வைக்கப்பட்டிருக்கிறாள். ஆங்கிலக் கல்வியின் பயனாக மேனாட்டு ஒழுக்க வழக்கங்கள் நம் மக்கள் மனங்களைக் கவர்ந்து நிற்கின்றன. தாய்மொழிப் பயிற்சியோ, உண்மையான சமய சாஸ்திர ஞானமோ மக்கட்கு இல்லை. இதனால் சாதி சமய வேற்றுமைகள் உரம் பெற்று நிற்கின்றன. பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டு என்ற எண்ணமும், சில பொருளற்ற வழக்க வொழுக்கங்களும் நமது சமூகத்தில் வேரூன்றிக் கிடக்கின்றன. இவற்றின் பயனாகவே தீண்டாமை, பெண்ணடிமை, பாலிய விவாகம் போன்ற தீய வழக்கங்கள் இன்னும் இங்கே குடிகொண்டிருக்கின்றன. ஒரு சிலர் இத்தீய வழக்கங்கட்கெல்லாம் சமயங்களே மூலகாரணம் என்று கருதிச் சமயங்களையே அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்று எழுதியும் பேசியும் வருகின்றனர். இவர்களுடைய நோக்கத்தையும் செய்கையையும் எலிகட்குப் பயந்துகொண்டு வீட்டை எரித்துவிடும் செய்கைக்கே ஒப்பிடவேண்டி யிருக்கிறது.

மனிதனுக்கு இம்மை மறுமைப் பயனை நல்கவல்ல நல்லொழுக்க முறைகள் சமயங்களில் நிறைந்திருக்கின்றன. சமயம் மனிதனுக்குச் சாந்தியை அளிக்கின்றது. சமய உணர்ச்சி இல்லாத மனித வாழ்க்கை விலங்கு வாழ்க்கைக்கே நிகராகும். சமயம் மனிதனிடமுள்ள மிருகத் தன்மையைப் போக்கித் தெய்வத்தன்மையைக் கொடுக்கின்றது. சமயம் மக்கட்குச் சிறந்த பகுத்தறிவின் பயன். இவ்வுண்மை யுணராத பிறர் சமய உணர்ச்சியானது மனிதனிடம் அவன் அறிவு விளக்கம் பெறாமல் காட்டுமிராண்டியாயிருந்த காலத்தில் ஏற்பட்டது என்று பிதற்றுவர். அவர்கள் கூற்று உண்மையானால் அறிவுவிளக்கமற்ற விலங்கினங்கட்குச் சமய உணர்ச்சி இருக்க வேண்டுமே, அங்ஙனம் இருக்கின்றதா என்று கேட்கின்றோம்.

உலகில் சமய உணர்ச்சி இல்லாத நாகரிகநாடு ஒன்றிருப்பதாக எமக்குத் தெரியவில்லை. பொதுவுடைமைக் கொள்கையினர் ஆதிக்கம் செலுத்தும் ருஷியாவில் சமய உணர்ச்சி இல்லை என்று சிலர் கூறலாம். அது தவறு. அவ்விடத்திலும் சமய ஸ்தாபனங்களுண்டு. சமய உணச்சி உள்ள மக்களும் இருக்கின்றனர். ஆனால் ஆதிக்கம் செலுத்தும் பொதுவுடைமையாளர் சமயங்களையும் கடவுளையும் அலக்ஷியம் செய்து வருகின்றனர். அலக்ஷியம் செய்வதோடு கூடியவரை அவ்வுணர்ச்சிகளை யொழிக்கப் பிரசாரமும் செய்துவருகின்றனர். எனினும் அவர்கட்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை. முன்பு சமயத்தின் பேரால் நடைபெற்றுவந்த அக்கிரமங்களே பொதுவுடைமையாளர் சமயவொழிப்புப் பிரசாரம் செய்ய இடந்தந்து விட்டன என்று தெரிய வருகிறது. ஆனால் சமயவொழிப்புப் பிரசாரம் நீடித்து நிற்குமா என்பது பெரிய கேள்வியாயிருக்கிறது. அஃது எவ்விதமாயினும் பொதுவாக உலகமக்கள் எல்லோரும் சமய உணர்ச்சி யுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்னும் உண்மையை மறுக்க முடியாது. உலகத்தில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. மதங்களைத் தழுவும் மக்கள் எண்ணிக்கையைக்கொண்டு இக்காலத்தில் பெரிய மதங்களாக மதிக்கப்படுவன ஒரு சிலவே. இந்துமதம், பௌத்தமதம், இஸ்லாமியமதம், கிறிஸ்தவமதம் முதலியவைகளே இக்காலத்தில் பெருந்தொகையான மக்களால் தழுவப்பெறுகின்றன. ஒவ்வொரு சமயத்திலும் மக்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய பல சிறந்த உண்மைகள் நிறைந்திருக்கின்றன. பல்வேறு சமயங்களும் அடிப்படையான தத்துவங்களில் ஒன்றாகவே விளங்குகின்றன. காலதேச வர்த்தமானங்கட் கேற்ப ஆசார அநுஷ்டானங்கள் மாறுபட்டிருப்பது இயற்கை.

பல ஒழுக்க வழக்கங்கள்—முற்காலத்தில் அவை என்ன நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டனவோ—இக்காலத்தில் பொருளற்றவைகளாகி நிலவுகின்றன. நமது இந்து மதத்தின் பேரால் வழங்கப்படும் சில பொருளற்ற வழக்க வொழுக்கங்களைப் போலவே இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் முதலிய சமங்களிலும் போலி வழக்கங்கள் நிறைந்திருக்கின்றன. அத்தகைய தீய—விபரீத வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தொலைத்து விடவேண்டும் என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகின்றோம். ஆனால் சமயங்களையே அடியோடு ஒழித்து விடவேண்டும் என்று கருதுவது அறிவுடைமை யாகுமா? என்று சிந்தித்துப் பார்க்குமாறு அறிஞர்களை வேண்டுகின்றோம்.

நமது நாட்டில் சமயம்—மொழிகளைத் தக்க முறையில் சீர்திருத்தம் செய்து வளர்க்க யாரும் முன் வாராதது வருந்தத்தக்க விஷயமாகும். தென்னாட்டில் சைவ—வைணவ—அத்துவைத மடங்கள் ஏராளமாக இருக்கின்றன. இம்மடங்கள் தம் கடமைகளைச் சிறந்த முறையில் செய்யத் தவறிய காரணத்தாலேயே நாட்டில் பல விபரீதக் கொள்கைகள் இடம் பெறலாயின. மடாதிபதிகள் எல்லோரும் மஹாராஜாக்களாக விளங்குகின்றனர். போகத்தில் பூலோக இந்திரர்களாகப் பொலிகின்றனர். அவர்கள் தாங்கள் துறவிகள் என்பதை அறவே மறந்து விட்டனர். தங்கள் வாழ்நாளை ஆடம்பரக் களியாடல்களில் கழிக்கவே அவர்கள்முனைந்து நிற்கின்றனர். நம் முன்னோர் நன்னோக்கங்கொண்டு சமய வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் கொடுத்த மானியப் பொருள்கள்—ஆண்டுதோறும் பல லக்ஷக்கணக்காக வரும் வருவாய்கள் கோர்ட்டு வழக்கு கட்கும், வக்கீல்கட்கும், உத்தியோகஸ்தர்களின் விருந்துபசரிப்பு கட்கும் கொள்ளை போகின்றன. பரிசுத்த மடங்களில் கொலை கட்கும் பஞ்சமில்லை. இம்மடாதிபதிக ளெல்லாரும் ஏன் தங்கள் கடமைகளைச் செய்ய முன்வரலாகாது என்று கேட்கின்றோம்? சமயம் அழிகிறது! மொழி அழிகிறது! ஆலயங்கள் அழி நிலையில் இருக்கின்றன! இவைகளை நன்முறையில்—காலத்திற் கேற்பச் சீர்திருத்தி அமைப்பதைத் தவிர இவர்கட்கு வேறுவேலை என்ன என்பது விளங்கவில்லையே. பிற மதத்தினர் தங்கள் சமயங்களையும், மொழிகளையும் எவ்வாறு சீர்திருத்தி வளர்த்துவருகின்றனர் என்னும் உண்மையை நாம் கண்கூடாகக்கண்டு வருகின்றோம். கிறிஸ்தவ சமயத்தினர்—பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து வந்தவர்கள் நமது நாட்டில் என்ன செய்து வருகின்றனர் என்பது நம் மடாதிபதிகள் அறியார்களா? ஏன் அவர்களைப்போல் இவர்களும் கல்விச்சாலைகளை ஏற்படுத்தக்கூடாது? நம்மடாதிபதிகட்குப் பொருளில்லையா? பொதுஜன ஆதரவில்லையா? எல்லாம் உண்டு. ஆனால் மனந்தான் இல்லை.

கிறிஸ்தவ சமயத்தினர் தங்கள் மதக்கொள்கைகளைப் பரவச் செய்யும் முறை சாலச் சிறந்ததாகும். எத்தனை பிரசாரகர்கள்! எத்தனை புது நூல்கள்! எத்தனை துண்டுப் பிரசுரங்கள்! தங்கள் முயற்சியில் அவர்கள் ஒருநாளும் சோர்வடைவதே கிடையாது. ஏராளமான பொருளைக் கண்ணை மூடிக்கொண்டு செலவழிக்கின்றனர்! இதனால் தான் இவர்களுடைய சமயம் உலக சமயமாகத் திகழ்கிறது. நம் மடாதிபதிகளும் இம்முறைகளில் நூற்றில் ஒரு பங்கையேனும் கைக்கொள்ள முயன்றால் எவ்வளவோ நலம் விளையுமே. இனியேனும் அவ்வாறு செய்ய முந்துவார்களா?

நமது நாட்டில் இப்பொழுது அரசியல் கிளர்ச்சியானது மக்கள் மனங்களைக் கவர்ந்து நிற்கின்றது. உலகில் முதன்மை ஸ்தானம்



வகிக்கும் ஜனநாயகத்துவ வேட்கை நமது நாட்டிலும் தீவிரமாய்ப் பரவி வருகிறது. காங்கிரஸ் மகாசபை காந்தியடிகளின் வாயிலாக அஹிம்ஸா தரும நெறிபற்றி நாட்டு விடுதலைக்கு உழைத்துவருகிறது. அடிமை விடுதலைக்குப் பிற நாடுகள் கைக்கொண்ட முறை வேறு; காந்தியடிகள் மேற்கொண்டுள்ள முறை வேறு. பிற நாடுகள் ஆயுத பலத்தை—மிருக பலத்தை ஆதாரவாகக் கொண்டன. காந்தியடிகள் ஆன்ம சக்தியை—அஹிம்ஸா தருமத்தை ஆதாரவாகக் கொண்டிருக்கிறார். காந்தியடிகளின் போர் முறை இதுகாறும் உலகங் கண்டறியாத புது முறையாகும். காந்தியடிகளின் ஆன்மசக்தி சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனதையும் மாற்றிவிட்டது. இப்பொழுது காந்தியடிகள் இந்தியாவின் தனிப் பெருந் தலைவராக லண்டன் மகாநாட்டுக்குச் சென்றிருக்கிறார். உலகமே காந்தியடிகளை இமை கொட்டாமல் நோக்கிக் கொண்டிருக்கிறது. வெற்றி தோல்விகளைப் பற்றி இப்பொழுது சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டியது அநாவசியம். எவ்வாறாயினும் ஆகுக.

நமது நாடு வறுமை, பிணி, அறியாமைகளில் மூழ்கி, அந்நிய ஆதிக்கத்தில் சீரழிந்து நிற்கும் இவ்வேளையில்—நாட்டின் போக்கறிந்து, அதற்கியையக் காந்தியடிகளும், காங்கிரஸும் விடுதலைத் தொண்டாற்றிவரும் இவ்வரிய சந்தர்ப்பத்தில், ஒரு சிலர் சாதி சமயப் பூசல்களைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்க முனைந்து நிற்கின்றனர். காந்தியடிகளும் காங்கிரஸும் நாட்டுக்குப் பெருங்கேடு விளைத்து வருவதாகப் பறைசாற்றி வருகின்றனர். இதுவும் ஒரு கலிகாலக் கூத்து என்பதைத் தவிர வேறு என்ன கூறமுடியும்? நாட்டு விடுதலைக்குமுன் சமூக விடுதலைதான் வேண்டும் என்பது அவர்களது வாதம். இவர்கள் விரும்பும் சமூக விடுதலை எளிதில் சித்திக்கத்தக்க நன்முறை எது என்று சிந்தித்தார்களா என்று அறிய விரும்புகின்றோம். சமூக விடுதலைக்கு நமது நாடு அடிமையில் ஆழ்ந்திருப்பது ஒரு பெரும் முட்டுக்கட்டை என்பதை ஏன் இவர்கள் உணரவில்லை? சமூகத்திலுள்ள ஊழல்கள் ஒழியவேண்டும், சமூகம் அவைகளினின்றும் விடுதலைபெற வேண்டும் என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் அரசியல் விடுதலை சமூக விடுதலைக்கு ஆக்கம் அளிப்பதால் அதன் பொருட்டும் நாம் தீவிரமாய்த் தாமதமின்றி வேலை செய்யவேண்டும். இவ்விரு விடுதலைகளும் பரஸ்பரம் ஒன்றையொன்று பற்றியே நிற்கின்றன. ஒன்றை விட்டுவிட்டு ஒன்றைச் சாதித்துவிட முடியாது.

காங்கிரஸும் காந்தியடிகளும் வகுத்துள்ள திட்டம் தேசியமயமாக விளங்குகிறது. அத்திட்டத்தில் சாதி சமய வேற்றுமைகட்கு இடமில்லை. தீண்டாமை இல்லை. எல்லாரும் இந்தியர்; எல்லாரும் ஒரு தாயின் மக்கள் என்ற உயரிய நோக்கமே அத்திட்டத்தில் முதன்மை பெற்றிருக்கிறது. காங்கிரஸ் கோலியுள்ள நிர்மாணத் திட்டம் ஏக

காலத்தில் சமூக விடுதலையையும் நாட்டு விடுதலையையும் அளிக்கவல்லது என்பதே எமது திடமான எண்ணமாகும். இந்து முஸ்லிம் வேற்றுமைகளை ஒழிக்கக் காந்தியடிகள் காட்டிவரும் ஊக்கம் எல்லாருக்கும் தெரிந்ததே. தீண்டாமைப் பேயை நாட்டைவிட்டோட்ட நமது அடிகள் அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட்டு வருகிறார். முன்னர், ஒரு தாழ்த்தப்பட்ட சகோதரருக்கு வாந்திபேதி கண்டபோது, நமது உலகம்போற்றும் உத்தமர் மூன்று நாள் இரவுபகல் அவரருகே நீங்காமலிருந்து உதவிபுரிந்த செய்தி ஒன்றே அவர் தீண்டாமை விலக்கில் வைத்துள்ள ஆர்வத்தை இனிது விளக்கும். நிற்க, ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த பெண்ணையும் தம் அருமைச் சுவீகார புத்திரியாக வளர்த்து வருகிறார். இவையெல்லாம் சமூக விடுதலை முயற்சிகள் ஆகாவோ என்று கேட்கின்றோம். ஒவ்வொரு முக்கியமான கூட்டத்திலும் அவர் தீண்டாமை விலக்கைப்பற்றி பேசியே வருகிறார். பத்திரிகையிலும் அடிக்கடி எழுதி வருகிறார். இதுமாத்திரமா? பாலிய விவாகம் கூடாது, விதவா விவாகம் வேண்டும் என்று எத்தனையோ முறை எடுத்துக் காட்டியிருக்கிறார். நம் நாட்டுத் "தீவிர சமூக சீர்திருத்தவாதி"கட்கு இவையெல்லாம் சீர்திருத்தங்களாகத் தோன்றுவதில்லை. காந்தி வேண்டாம், காங்கிரஸ் வேண்டாம், சமயம் வேண்டாம் என்று மேடைகளில் வாய்ப்பந்தல் போடுவதுதான் இவர்களது சமூக சீர்திருத்தமா என்று கேட்கின்றோம். யாரேனும் திரிகாண சுத்தியாய் சமூகத் தொண்டாற்றிக்கொண்டு அரசியல் விவகாரங்களில் தலையிடாமலிருந்தால் அவர்களைப்பற்றி யாரும் குறை கூறமாட்டார்கள். வடநாட்டிலும் தென்னாட்டிலும் சமூக விடுதலையில் மட்டும் நாட்டங்கொண்ட பல ஸ்தாபனங்களிருக்கின்றன. அவை இயன்றவரை தத்தமக்குத் தோன்றிய முறையில் தொண்டாற்றிவருகின்றன. இவ்வாறே நம் நாட்டுத் "தீவிர சமூக சீர்திருத்தவாதிக"ளும் ஏன் சேவை செய்யக்கூடாது என்று தெரியவில்லை. நாட்டிலுள்ள அறிஞர்களின், பொது ஜனங்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டு என்ன சீர்திருத்தம் செய்துவிடமுடியும் என்று அவர்களைச் சற்றே சிந்தித்துப் பார்க்குமாறு வேண்டுகின்றோம்.


சமூகத்தில் உள்ள குற்றங் குறைகளை நியாயமான வழியில் சீர்திருத்த முயல்வதே அறிஞர்கட்கு அழகு. அம்முறை சமயங்களை அழிக்கவேண்டும் என்று ஓயாது பேசுவதும் எழுதுவதும் அல்ல. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்ற கொள்கையைப் பின்பற்றிச் சீர்திருத்த ஸ்தாபனங்களை ஆங்காங்கு ஏற்படுத்தி நல்லமுறையில் உண்மை உணர்ச்சியுடன் பிரசாரம் புரியத் தொடங்க வேண்டும். பொதுஜனங்களின் நன்மதிப்பைப் பெறவேண்டும். முன்பின் யோசியாமல் எடுத்த எடுப்பில் எல்லாரையும் கண்ணைமூடிக்கொண்டு தாக்குவது, எல்லாவற்றையும் ஒழித்துவிடுவதாக வாய்வீரம் பேசுவது சீர்திருத்தமாகா. இத்தகைய மனப்பான்மை உடையவர்க



ளால் ஒரு காரியமும் ஆகாது என்பதும் திண்ணம். இவ்வுண்மையை அவர்களது தற்காலச் சோர்வு நிலைமையே நன்கு விளக்கும் என்று நம்புகின்றோம். "தீவிர சீர்திருத்த" இயக்கத்தைச் சேர்ந்த பலர் தங்கள் தங்கள் சுய காரியங்களைச் சாதித்துக்கொண்டவுடன் பேசாமல் அடங்கிவிட்ட உண்மையை எல்லாரும் அறிந்தே இருக்கிறார்கள். இன்னும் தங்கட்கு உண்மையில் அவ்வியக்கக் கொள்கைகளில் பற்றும் அநுதாபமும் இல்லாமலிருந்தும், தங்கள் சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு அதில் பட்டும் படாமல் இருந்தவர்களும் உண்டு.

சகோதரர்களே! நமது இந்து சமயமும் தத்துவங்களும் பழம் பெருமைவாய்ந்தவை, இவ்வுண்மையை மேனாட்டாரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அன்பு, அருள், அறம், சகோதரத்துவம், சமத்துவம் முதலிய தருமங்களை அஸ்திவாரமாகக் கொண்டதே இந்து சமயம். வைணவ சித்தாந்தம் சமரசத்தைப் போதிக்கின்றது. சைவ சித்தாந்தம் சமரசத்தைப் போதிக்கின்றது. அத்துவைத சமயம் சமரசத்தைப் போதிக்கின்றது. இவைகளைப்போலவே பௌத்த மதமும் ஜைன மதமும் சமரசத்தைப் போதிக்கின்றன. ஸ்ரீ ராமாநுஜர் கோபுரத்தின்மீதிருந்து பஞ்சமர் முதலிய எல்லாருக்கும் ரகஸியார்த்தத்தை உபதேசித்தருளியதும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பலர் நாயன்மாராக இன்றும் வணங்கப்படுவதும், ஸ்ரீ சங்கரர் பஞ்சமனை வணங்கியதும் எவ்வுண்மையை வெளிப்படுத்துகின்றன? இந்து மதத்தின் சமரஸத் தன்மையை வெளிப்படுத்தவில்லையா என்று கேட்கின்றோம்? வைணவம், சைவம், அத்துவைதம், பௌத்தம், ஜைனம் முதலிய மதங்களெல்லாம் சேர்ந்ததே இந்து சமயம். இந்து சமயத்தில் மேற்கூறிய வெவ்வேறு சமயங்களின் தத்துவங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன. ஆதலால் உலகத்திற்கே சாந்தி அளிக்கவல்ல இந்து சமயத்தை அழித்துவிட நீங்கள் விரும்புகின்றீர்களா? இடைக்காலத்தில் எப்படியோ வந்து நுழைந்துவிட்ட மாசுகளைப் போக்க முயல்வதே அறிவுடைமையாகும். காலத்துக்கேற்பத் தகுந்த சீர்திருத்தங்களைச் செய்ய யாரும் பின்வாங்கமாட்டார் என்பதில் ஐயமில்லை. ஆனால் எல்லாவற்றையும் அழித்தொழிக்க வேண்டுமென்றால் யாரே விரும்புவர்? எந்நாட்டிலும் அத்தகைய முயற்சி பயன் அளித்ததாகத் தெரியவில்லை. மடாதிபதிகளே! அறிஞர்களே! உங்கட்கு இஃதோர் அரிய சந்தர்ப்பம்! இச் சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடாதீர்கள்! உங்கள் கடமைகளைச் செய்ய இன்றே முன்வாருங்கள். காந்தியடிகளின் வழிநின்று நாட்டு நலத்திற்கும் சமூக நலத்திற்கும் ஆக்கந் தேடுங்கள்! எல்லாம்வல்ல திருவருள் முன்னின்று காப்பதாக.

ஓம் தத் ஸத்.




# ஊர்ப்பெயர்களின் உருத்திரிதல்

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ. பி. எல்.)

இவ்வுலகில் விளங்கும் தொன்னாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற இந்திய நாட்டின் தென்பால் அமைந்த தமிழ் நாட்டில் தொன்று தொட்டுப் பைந்தமிழ் மொழியே பரவியிருந்த தென்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இந்நாட்டைத் தமிழகம் என்று முற்காலத்து மக்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். இத்தமிழகத்தில் அடுக்கடுக்காக ஓங்கி உயர்ந்த அழகிய மலைகளும், ஐந்திணை நெறி அளாவிச் செல்லும் ஆறுகளும், சீர்வளம் மிகுந்த ஊர்களும் நலமுறத் திகழ்கின்றன. இத்தகைய மலைகளையும் ஆறுகளையும், தமிழ்ப் பேர்களாலேயே நம் முன்னோர் வழங்கினர் என்பது சொல்லாமலே அமையும். அருந்தமிழ்ப் பெயர் பெற்ற ஆறும் ஊரும் பிற்காலத்தில் பெயர் மாறி நிற்கும் நிலையினை ஆராய்ந்தறிதல் சரித்திர அறிஞர்க்கு ஆராவின்பம் அளிப்பதாகும். சென்னையிலிருந்து செங்கோட்டை செல்லும் இருப்புப் பாதையில் அமைந்த சில ஊர்களின் பெயரை இக்கட்டுரையில் ஆராய்வோம். எழும்பூர் நிலயத்தினின்றும் கிளம்பி, சிதம்பரம் வருமளவும் இருப்புப் பாதையிலமைந்த சிற்றூர்களும் பேரூர்களும் பெரும்பாலும் தமிழ்ப் பேருடையனவாகவே தோன்றுகின்றன. சிற்றம்பலம் என்று தமிழ் மொழியிலும், சிதம்பரம் என்று வட மொழியிலும் வழங்கப் பெறுகின்ற தில்லை மூதூர், தென்னாட்டுத் திருப்பதிகளுள் சிறந்த தொன்றாக அன்றுதொட்டு இன்றுகாறும் விளங்குகின்றது. இவ்வூரைக் கடந்து செல்லும் பொழுது, நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரைத் தோற்றுவித்த சீகாழி தோன்றுவதாகும். பன்னிரு பெயர்கள் பண்பாயமைந்து, பாடல்பெற்ற பழம்பதிகளுள் ஒன்றாகப் பாராட்டப்படும் இவ்வூரின் பெயர் "சியாழி" என்று ரயில் வண்டி நிலயத்திற் பொறிக்கப்பட்டிருத்தல் தமிழ் மொழியிற் பற்றுடைய மாந்தர்க்கு மிக்க வெறுப்பைத் தருவதாகும். நற்றமிழ் வல்ல ஞானக்கதிரோனைப் பெற்றெடுக்கும் பெருமைசான்ற தலத்தின் பெயரைத் திருத்தமாக வரையாது, சிதைத்து வழங்கும் சிறுமையைக் கண்டு அறிவுடையோர் சிந்தை தளர்வர். இனி இவ்வூரைக் கடந்து சென்றால் மாயவரம் என்னும் மணி நகர் தோன்றும். அப் பெயரினை நோக்கும் பொழுது மாய, வரம்பெற்ற காரணத்தால் மாயவரம் என்று இவ்வூர் வழங்கலாயிற்றோ வென்று மதிநலமில்லா மாந்தர்

பராஜ்யம் எவ்வளவு சிறந்ததாயினும் சுயராஜ்யத்திற்கு ஈடாகாது.



மயங்குவார்கள். மயிலாடு துறை என்னும் அழகிய பழந்தமிழ்ப் பெயர்வாய்ந்த இவ்வூர், மாயவரம் என்று மாறிய வரலாறு அறிந்து மகிழத்தக்கதாகும். "பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்களிசைபாட காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழிகாவேரி" என்று இளங்கோ வடிகளாற் புகழ்ப்பெற்ற பொன்னியாற்றங் கரையில், ஓகை மயில்கள் தோகை விரித்தாடும் செழுஞ் சோலைகள் சூழ்ந்திருந்த சிற்றூரை, மயிலாடுதுறை யென்று பழந் தமிழ்மக்கள் வழங்கிய முறை சாலப் பொருத்தமுடையதாகும். மயில் என்னும் தென் சொல்லுக்கு நேரான வடசொல், மயூர மாதலால் மயிலாடுதுறை, மயூரம் என்று மாறிப் பின்னர் மாயூரமாயிற்று. மயூரமென்னுஞ் சொல்லின் சுவையறியும் மதுகையற்ற ரயிலோர் அதனை மாயவரமாக மாற்றினார்கள். இனி இவ்வூரையுங் கடந்து சென்றால், கும்பகோணம் என்னும் ஊர் குறுக்கிடுவதாகும். இவ்வூர் பழந்தமிழ்ச் சாசனங்களிலும், பழம் பனுவல்களிலும், குடமூக்கு என்று வழங்கப்படுதலை அறிவுடையோர் அறிகுவர். பழந் தமிழ்ப் போர்க்களங்களுள் ஒன்றாகவும் இவ்வூர் விளங்குகின்றது. குடமூக் கென்னுந் தமிழ்ப் பெயர் கும்பகோணம் என்று எக்காலத்தில் மாற்றமடைந்ததோ அறியோம். கும்பகோணம் என்பது குடமூக்கின் நேர் மொழிபெயர்ப்பாகவே தோன்றுகின்றது. வடமொழிக் கும்பமும் தமிழ்க் குடமும் ஒன்றேயென்பதும் வடமொழிக் கோணமும் தமிழ் மூக்கும் ஒன்றே யென்பதும், இரு மொழியும் உணர்ந்த அறிஞர்க்கு இனிது விளங்கும். இத்தகைய மாற்றம் இன்னும் பல ஊர்ப் பெயர்களில் இனிது விளங்கக் காணலாம். பொன்னி நாடென்று பழந்தமிழ் மக்களால் புகழப்பெற்ற திருநாட்டில் அமைந்த திருமறைக்காடு வேதாரணியமாய் விளங்குகின்றது. திருவிடைமருதூர் மத்தியார்ச்சுனமாய் மிளிர்கின்றது. திருவெண்காடு, சுவேதாரணியமாய் ஒளிர்கின்றது. திருவையாறு பஞ்சநதமாய்த் திகழ்கின்றது. இன்னும் நடுநாட்டிலமைந்த திருமுதுகுன்றம் விருத்தாசலமாய் விளங்குகின்றது. அண்ணாமலை அருணாசலமாய் அமர்ந்திருக்கின்றது. இவ்வாறு பழம் பதிகள் பெயர் மாறி வழங்கும் பான்மையை ஆராய்ந்தறிதல் மொழி நூல் வல்லார்க்கு முற்றிய இன்பம் அளிப்பதாகும். இந்நாட்டில் தலப் புராணம் எழுதப்போந்த புலவர்கள், பல வூர்களின் பெயரை வடமொழியாக்கி வழங்கத் தலைப்பட்டார்களென்று கருதுதல் தவறாகாது. இப்பொழுதும் சில ஊர்ப் பெயர்கள் இவ்வாறு மாறிக்கொண்டிருத்தலை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். தில்லையம்பதியின் எல்லையில் அமைந்த ஆடூர் என்னும் சிற்றூர், புராணம் இயற்றும் புலவர் வசப்பட்டு, கீர்த்தனபுரியாக நிமிரப் பார்க்கின்றது. ஆடுகள் மலிந்திருந்த காரணத்தால் இவ்வூர் ஆடூர் என்று ஆதியிற் பெயர்பெற்றிருத்தல் கூடும். "இடையன் பால் சொரி" யென்று இதன் அண்மையிலுள்ள மற்றோர் ஊரை நோக்கும் பொழுது இக்கருத்து இன்னும் வலியுறுவதாகும்.

இனி, இவ்வாராய்ச்சியை விடுத்து, கும்பகோணத்திற்கப்பாற் செல்வோம். சோழ மன்னர் ஆட்சியில் சில காலம் தலைநகராக அமைந்திருந்த தஞ்சையையும திரிச்சியையும் கடந்து சென்றால் கொடைக்கானல் ரோடென்னும் பெயரமைந்த நிலயம் புலப்படும். கொடைக்கானல் என்னுந் தமிழ்ச்

இந்தியாவில் அந்நிய ஆட்சியினால் விளைந்த கேடுகளில் முக்கியமானது என்னவென்றால் நாட்டு மக்களின் கைத்தொழில் நாசம் அடைந்ததே.

சொல்லோடு "ரோடு" என்னும் ஆங்கிலப் பதத்தை இணைத்து அந்நிலயத்திற்கு பெயரமைத்த முறை வியப்பைத் தருவதாகும். கொடைக்கானற் சாலை யென்று கூறின் அச்சொற்றொடர் செந்தமிழ்ச் சுவை யறியுஞ் செவிகளில் செவ்விய இன்பம் பயக்குமன்றோ? இச்சாலையைக் கடந்து சென்றால் அதிராச் சிறப்பின் மதுரை மூதூர் தோன்றுவதாகும். புலவர் பாடும் புகழமைந்த மதுரைமா நகரம் அன்று தொட்டு இன்றுகாறும் பெயர் மாறாது பிறங்கும் பெற்றியை நினையும் பொழுது தமிழ் மக்கள் நெஞ்சம் நிமிர்வதாகும். புலவர் நாவிற் பொருந்திய இப்பழம் பதியைக் கடந்து சென்றால் அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும் குன்றென்று செஞ்சொற் கவிஞராய நக்கீராற் சிறப்பிக்கப்பெற்ற திருப்பரங்குன்றம் தலைதூக்கித் தோன்றும் கொஞ்சித் தமிழ் பகர்ந்த குமரன் உறையும் குன்றினைக் கடந்து சென்றால், பல பட்டிகள் அடுக்கடுக்காயமைந்திருக்கக் காணலாம். சில ஆண்டுகட்கு முன்னர் விருதுப்பட்டியாய் விளங்கிய சிற்றூர் செல்வச் செழுமையாலும் வாணிகப் பெருக்காலும் வளர்ந்தோங்கி, விருதுநகர் என்னும் பேர்பெற்று விளங்குகின்றது. நலம்பெற்ற சிற்றூர்கள் நகரங்களாகுமென்னும் உண்மைக்கு இவ்வூரே சிறந்த சான்றாகும்.


## 'ஆனந்தபோதினி' வாரப் பத்திரிகை.

நமது 'ஆனந்தபோதினி' வாரப் பதிப்பின் மூன்றாவதாண்டு பிறந்துவிட்டது. 16 பக்கங்களுடன் வெளியான நமது பத்திரிகை இவ்வாண்டு முதல் 20 பக்கங்களுடன் வெளியாகின்றது. நம் தேசமக்கள் அரசியல், சமயம், சமூகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் தக்க அறிவும், அபிவிருத்தியும் பெறுவதற்காகவே பற்பல அறிஞர்களின் அரிய கட்டுரைகள் அதில் வெளியாகின்றன. நம் நாட்டிலும், உலகில் இதர தேசங்களிலும் நடைபெறும் எல்லாச் செய்திகளும் திரட்டி வெளியிடப்படுகின்றன. தினசரிப் பத்திரிகை படிக்கவில்லையே என்னும் கவலையின்றி உலக விஷயம் முழுவதையும் நமது வாரப் பத்திரிகையினின்றும் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியடையலாம். இதன் வருஷ சந்தா உள் நாட்டுக்கு ரூபா மூன்றுதான். வெளிநாடுகளுக்கு ரூபா நான்கு. உடனே எழுதிக்கொள்ளுங்கள்.

மானேஜர்,
'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
சௌகார்பேட்டை, மதராஸ்.


# ஒரு பெரியாரின் மகிமை

(வீ. சங்கா ஐயர்.)

தென்னிந்தியாவில் இராமநாதபுரம் ஸமஸ்தானத்தை ஆண்டுவரும் சேதுபதி மஹாராஜவின் அதிகாரத்திற் குட்பட்ட திருவாடானை தாலுகாவைச் சேர்ந்ததும், தொண்டி என்னும் கடற்கரைப் பட்டினத்திற்குச் சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ளதுமான நம்புதாளை என்னும் கிராமத்தில் சிற்சொரூபராய் விளங்குகிறார் பக்கீர் மஸ்தான் என்னும் மஹான். இவர் பிதா நம்புதாளை கிராமத்தில் ஒரு முஸ்லிம். அவர் பெயர் நவீனார் மரைக்காயர். தாயார் சபுரம்மாள் பீபி. இளமையில் கல்வி நன்கு கற்றிருக்கிறார். பிறகு தம் ஊரார்களுடன் சிறிதுகாலம் மீன்பிடிக்குந் தொழிலில் பிரவேசித்திருந்தார். அப்பொழுதும் தம் ஞாபகத்தை முழுவதும் ஆதியந்தமற்ற சர்வாந்தர்யாமியான பரம்பொருளிடமே செலுத்தி வந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதன் பிறகு இவர் மயானத்தில் ஒரு பெரும் குழி வெட்டி அதிலிருந்து மூன்று வருஷ காலம் ஆகாரம், நித்திரை, உஷ்ணம், குளிர், மழை முதலியவைகள் ஒன்றையும் கவனியாமல், இயற்கையையும், இந்திரியங்களையும் ஜயித்துத் தவம் செய்தார். பிறகு வெளியேவந்து, ஒரு வருஷகாலம் மௌன விரதத்தை அநுஷ்டித்தார். இப்பொழுது இம்மஹானுடைய மகிமையைக் கேட்டிராதவர் தமிழ் நாட்டில் ஒருவருமே இரார் என்று நான் நினைக்கிறேன்.

இவரிடமிருக்கும் மருந்து உலகத்தில் மானிடரைக் கஷ்டப்படுத்துகிற சகலவிதமான வியாதிகளையும் தீர்க்கிறது என்பதில் ஒருவருமே சந்தேகப்படவேண்டியதில்லை. மருந்து பெறப் பணச் செலவு இல்லை. சன்னிதானத்துக்குச் செல்லவேண்டும். செல்லும்பொழுது, பரிசுத்தமாகவும் நம்பிக்கையாகவும் ஒரு பாத்திரத்தில் தீர்த்தம் கொண்டுபோகவேண்டும். அந்தத் தீர்த்தத்தில் தாம் வாயால் ஏதோ மந்திரோச்சாரணத்துடன் ஊதுகிறார். அந்த மஹானால் இப்படி ஜபித்துக்கொடுக்கப்பட்ட தீர்த்தத்தை இரவில் தூங்கப்போகும்போது கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்ளவேண்டும்.

தீர்த்தம் சாப்பிடுவதால் முக்கியமாகச் சகல வியாதிகளும் தீர்ந்துவிடுகின்றன. ஆறாத புண்கள் ஆறி விடுகின்றன. ஒற்றைத் தலைவலி, தேட்கடி, பூரான்கடி, வண்டுக்கடி, பாம்புக்கடி முதலிய சகல விஷங்களும், மேகம், திமிர், குஷ்டம், குன்மம், வயிற்றுவலி முதலிய பெரும் வியாதிகளும், தீர்த்தத்தை உள்ளே சாப்பிடுவதாலும் வெளியில் தடவுவதாலும் குணமடைகின்றன என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

குழந்தை இல்லாத ஸ்திரீகளுக்கு இந்த மஹான் எலுமிச்சம்பழத்தை

---

அனைவருக்கு மன்றித் தங்களுக்கு மட்டுமே சுதந்தரம் விரும்புவர் கடைப்பட்ட அடிமைகளே யாவர்.

ஓதிக் கொடுக்கிறார். ஜபித்துத் தரப்பட்ட தீர்த்தத்தோடு அந்த எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து ஏழு நாள் தினந்தோறும் படுக்குமுன் இரவு சாப்பிட்டுவர கருப்பத்திலிருக்கும் எல்லாவித விஷக் கிருமிகளும் நசித்துக் கருப்பாசயம் சுத்தமாகிப் பெண்கள் கருப்பமாகிறார்கள் என்று கூறப்படுகிறது. எந்த ஸ்திரீக்கு ஜபித்து எலுமிச்சம் பழத்தைக் கொடுத்தாரோ அந்தம்மாளைத் தவிர வேறொருவரும் இந்த தீர்த்தத்தோடு கலந்த எலுமிச்சம் பழச்சாற்றைச் சாப்பிடக்கூடாது.

நான் இவ்வூரிலிருந்து புறப்பட்டு ஜூலை மீ 12-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ராமநாதபுரம் போய்ச் சேர்ந்தேன். அங்கிருந்து சில பேர்களுடன் மறுநாள் காலை சுமார் 8-மணிக்கு ஒரு ஸ்பெஷல் மோட்டார்கார் ஒன்று அமர்த்திக்கொண்டு நம்புதாளைக்குப் புறப்பட்டோம். வண்டியில் பெண்கள் உட்பட 8 பேர்களிருந்தோம். உப்பூர் தாண்டினதும் சுமார் இரண்டு மைல் அகலமுள்ள ஒரு சிறு ஆற்றைக் கண்டோம். அதில் ஜலமே கிடையாது அது மணலாறே. எங்களில் ஐவர் கீழே இறங்கி மோட்டார் வண்டியைத் தள்ளி வெகு பாடுபட்டுச் சுமார் அரைமணி நேரத்தில் ஆற்றைத் தாண்டினோம். 11-மணிக்கு நம்புதாளை அடைந்தோம். ஸமுத்திரஸ்நானம் செய்து தீர்த்தத்துடன் மஹானுடைய தரிசனத்தை நாடி 12-மணி வரையிலும் காத்திருந்தோம். தீர்த்தத்தை ஜபித்து பெற்றுக்கொண்டு அவ்வூரைவிட்டு 12-மணிக்குப் புறப்பட்டோம். சுமார் 1-மணிக்கு மேற்படி மணலாற்றை யடைந்தோம். முன்போல் நாங்கள் கீழே இறங்கி மோட்டாரைத் தள்ளித் தள்ளிப் பார்த்தோம். மணல் அக்கினி மயமாக இருந்தது. வெகு பாடுபட்டுக் கால் பர்லாங்கு வந்துவிட்டோம். கால் கீழே வைக்க முடியவில்லை. என்ன செய்வது என்று தயங்கிக் காரில் ஏறி உட்கார்ந்துவிட்டோம். எங்கள் கார் சொந்தக்காரரும் கூடவே வந்திருந்தார். திடீரென்று அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது. என்னிடம் கொஞ்சம் தீர்த்தம் கேட்டார். நான் கொடுத்தேன். அதை என்ஜின்மீது அந்த மஹான் பெயரைச்சொல்லித் தெளித்தார். டிரைவரிடம் சொல்லி மோட்டாரை விடும்படி கட்டளையிட்டார். அந்த மஹான் பெருமையை என்னென்று கூறுவது! ஆச்சரியம் ஆச்சரியமே! மோட்டார் அந்த மணல் நதியை ஒரு நிமிஷ நேரத்திற்குள் தாண்டி அக்கரை சென்றுவிட்டது. நாங்களும் மூன்று மணிக்கு முன்னாடியே இராமநாதபுரம் வந்து சேர்ந்தோம். மாலை 4-மணி ஷட்டிலுக்கு அங்கிருந்து புறப்பட்டுவிட்டோம்.

என் சொந்தக்காரனாகிய ஒரு பையனுக்கு வயது 28. 22-வது வயதில் விவாஹம் நடந்தது. 23-வது வயதில் புத்தி சுவாதீன மில்லாமலாகிவிட்டான். அவன் பெற்றோர்களும் மாமனாரும் பல ஔஷதங்கள் கொடுத்துப் பார்த்தார்கள். குணமானபாடில்லை. மணிமந்திர ஔஷதங்கள் பல பிரயோகித்துப் பார்த்தனர். குணமானபாடில்லை. மனைவி பெரியவளாகி இப்பொழுது 4 வருஷங்களாகின்றன. இம்மஹானிடத்தில் இவ்வருஷம் ஆனி மாதம் 1-ந் தேதி யன்று அழைத்துச் சென்றார்கள். 6-ந் தேதிக்குள் பூராவும் சொஸ்தமாகி 12-ந் தேதி சாந்திமுகூர்த்தம் நடைபெற்றுச் சதிபதிகள் க்ஷேமமாக இருக்கிறார்கள். இதை நான் கண்குளிரப் பார்த்து ஆனந்தித்தேன்.

---

இந்தியர்களின் சராசரி வருமானம் ஒருநாளைக்குத் தலைக்கு 1—அணா 7-பைசாதான்.



என் சொந்தக்காரரில் இன்னொருவர் 16 வருஷகாலமாகத் தீரா வயிற்று வலியால் கஷ்டப்பட்டுவந்தவர் இம்மஹானுடைய தீர்த்தப் பிரசாதத்தால் இப்பொழுது ஸௌக்கியமாக இருக்கிறார்.

இவ்வூரில் ஒருவர் பெரும் வியாதியால் கைகால் விரல்கள் சுருங்கி நடக்க முடியாமலும் ஆகாரமில்லாமலுமிருந்தவர் இப்பொழுது நன்றாகச் சாப்பிடுகிறார். கொஞ்ச தூரம் நடக்கவும் சக்தியுண்டாயிருக்கிறது. தினமும் இம்மஹானுடைய தரிசனத்துக்காக வரும் கூட்டமொன்றே இதற்கு அத்தாக்ஷி. காரைக்குடியிலிருக்கும் ஒரு செட்டியாருடைய ஒரு தீரா வியாதி இம்மஹானுடைய தீர்த்தத்தால் தீர்ந்துவிட்டது என்பது செட்டி நாடு பூராவும் தெரிந்த விஷயமே.

ஆகையால் கடவுள் எங்கும் இருக்கிறார். அவருக்கு ஜாதிமத பேதமோ பணக்காரன் ஏழை என்ற வித்தியாசமோ கிடையாது. நான் ஒரு ஹிந்து. இம்மகானோ மூஸ்லிம். எல்லா ஜாதியிலும், எம்மதத்திலும் கடவுளின் திருவருள் பிரகாசிக்கும். நந்தனார் ஜாதியில் பறையர். அவர் அடைந்த கதி என்ன? ஆகையால் பெரியோர் தரிசனம் நன்மையையே விளைக்கும்.

அனேகர் இம்மஹானைத் தரிசித்துத் தீர்த்தம் பெற்றுச் சென்றிருக்கின்றனர். எனக்குத் தெரிந்ததும் ஸ்வானுபவமானதையும் நான் இங்கு எழுதியிருக்கிறேன்.

## கிளிப்பாட்டு.

ஜலசுத்தி செய்யவே ஜன்மித்த மீன்களை
வலைகொளல் ஏதுக்கடி—கிளியே
வயிற்றிடல் ஏதுக்கடி.

சிறுமீன் பெரு மீனென்று செப்பிக் கொண்டுண்பார்க்குப்
பெருமைதா னேதுக்கடி—கிளியே
பெருமைதா னேதுக்கடி.

தூக்கும் துர் நாற்ற மீனைத் துவட்டிப் புசிப்பார்க்கு
மூக்குத்தா னேதுக்கடி—கிளியே
மூக்குத்தா னேதுக்கடி.


—லோகோபகாரி.

---

சுதந்தர ஜப்பானின் முதன் மந்திரியின் மாதச் சம்பளம் ரூ. 1500 தான். உலகிலேயே பணம் பெருத்த தேசமான அமெரிக்காவில் மந்திரிகளின் மாதச் சம்பளம் ரூ. 3000-தான். ஆனால் ஏழை இந்தியாவில் மாகாண மந்திரிகட்கு மாதச் சம்பளம் ரூ. 5000.

# “காபி கிளப்” கரண்டி நாகரிகம்

## ஒரு ரூபாய் தக்ஷிணை கொடுத்த கதை




ஒரு நாட்டுப்புறப் பெரிய மனிதர் சென்னை காபி கிளப்பில் நுழைகிறார். என்ன வேண்டும் என்பது கேட்கத் தெரியாமல் பக்கத்திலுள்ள நாகரிகர் சாப்பிடுவதைச் சுட்டிக் காட்டுகிறார். மற்ற சம்பவங்களை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்—பார்க்கலாம் உங்கள் சமர்த்தை.

# மேனாட்டுத் தத்துவம்

(கி. பாலசுப்பிரமணியம், M. A.)

(128-ம் பக்கத் தொடர்ச்சி.)

டேகார்டு உலகத்தை இரண்டாகப் பிரித்து இவ்விரண்டிற்கும் சம்பந்தத்தை ஏற்படுத்துவது கடவுளின் தொழிலென்றார். ஸ்பினோட்ஜா உலகத்தையே கடவுளின் ஓர் அம்சமாகப் பாவித்தார். இரண்டும் இரண்டு விதமாக இருக்கின்றன. உலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டாலும் இரண்டுக்கும் சம்பந்தம் இல்லாமற் போகுமா? மனமும் ஜடமும் குணத்தில் வித்தியாசப்பட்டிருந்தாலும் இரண்டும் ஒரே உலகத்திலிருப்பதால் வேறு சம்பந்தமில்லாமற்போனாலும் ஒரே உலக வாசிகள் என்ற சம்பந்தமிருக்கவில்லையா? இரண்டுபேர் விரோதிகள் என்று சொல்வதே ஒருவித சம்பந்தத்தை உண்டாக்கி விடுகிறது. ஆகையால் மனமும் ஜடமும் அவ்வளவாக முற்றிலும் வித்தியாசமுள்ளவை யல்ல.

ஸ்பினோட்ஜா இதைச் சற்றே அறிந்திருந்தாலும் இவைகளைக் கடவுளின் குணங்களாக எடுத்துக்கொண்டு விட்டதால் வேறுவித சம்பந்தத்தை ஏற்படுத்திவிட்டார். இதற்குக் காரணம் டேகார்டும் ஸ்பினோட்ஜாவும் ஜடத்தை விஸ்தீர்ணமுள்ளதும் பிரிவு அற்றதுமாகக் கருதினார்கள். ஜடப்பொருள் அசைவற்றது மனம் எங்கும் சஞ்சரிக்கக் கூடியது என்று கருதியதால் ஜடப்பொருள் மனத்தோடு கலக்கமுடியாது என்று நினைக்கவேண்டி வந்தது.

இப்பொழுது, ஜடத்தை விஸ்தீர்ண முள்ளதாகக் கருதாமல் அனேக அணுக்களாகச் சிந்தித்தால் இவ்வணுக்கள் அசைந்து சஞ்சரிக்கக் கூடியனவென்று சொல்வதில் தப்பில்லை. உலகம் அகன்ற ஒரே வஸ்து என்றால்தான் சங்கடம். ஆனால் அனேக அணுக்களாக எடுத்துக்கொண்டால் அவை அசையவும் கூடும். மேலும், வெறும் சலனம் மாத்திரம் அவைகளின் குணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்திருக்கிறேன். அதற்கென்ன அர்த்தம்? வேறொருவரும் இந்த நாற்காலியில் உட்காரமுடியாது என்று தாத்பரியம். என்னைத் தள்ளிவிட்டால் வேறொருவர் வந்து உட்காரலாம். ஆனால் என்னைத் தள்ளுவதற்கு அவர் பலத்தை உபயோகிக்கவேண்டும். நான் எழுந்திருக்கப் பிரியப்படாவிட்டால் நான் என் சக்தியைச் செலுத்தி இடத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டும். என் எதிரில் ஒரு புத்தகம் இருக்கிறதென்பதற்கு அப் புத்தகம் வேறொரு பொருளையும் அங்கு இருக்கவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

---

உலகத்தின் அந்தரங்க ரகசியம் அறிவொன்றினால்மட்டுமே அறிந்துவிட முடியாது. நண்பன் மனத்துள் பார்ப்பதுபோல் பார்த்தால் மட்டுமே அறிய முடியும்.

இன்னொரு விஷயம், ஒரு மரத்தை எடுத்துக்கொள்வோம். அதில் எத்தனையோ பாகங்கள் இருக்கின்றன. தண்டும், இலைகளும், காய்களும், பூக்களும், நரம்புகளும் இருக்கின்றன. ஒரு காயை எடுத்துப் பூதக்கண்ணாடியால் பார்ப்போமாயின் அம்மரத்தின் குணாதிசயங்களை அதிலும் காணலாமென்று சொல்கிறார்கள். அதேமாதிரி உலகத்தின் குணங்களை அதின் ஒவ்வொரு பாகத்திலும் காணலாம். அப்படியானால் ஜடமும் மனமும் உலகத்தின் அம்சங்களாகையால், ஒவ்வொரு பாகத்திலும் இவ்விரண்டும் அடங்கியிருக்க வேண்டுமல்லவா? உலகம் ஒரு வஸ்துவாக இராமல் அனேக அணுக்களாக எடுத்துக் கொள்ளுவோமானால் ஒவ்வொரு அணுவிலும் மனமும் ஜடமும் குடிகொண்டே யிருக்கவேண்டும். ஆனால் ஜடம் என்பதற்கு அர்த்தம் சக்தியென்று மேலே சொல்லப்பட்டது. மனமும் சக்திதானே. ஆகையால், மனமும் ஜடம் சக்தியாக விருப்பதால் இரண்டிற்கும் அப்படிப்பட்ட விரோதமில்லை. சில அணுக்களில் ஜடம் அதிகமாக விருக்கும், மனம் கொஞ்சமாக விருக்கும். சிலவற்றில் ஜடமும் மனமும் சமபாகமா யிருக்கும், சிலவற்றில் ஜடம் கொஞ்சமும் மனம் அதிகமாயு மிருக்கும்.

இன்னொன்று. மனம் என்பது வெறும் சித்து, அறிவு, ஞானம் என்று மூந்திய தத்துவ சாஸ்திரிகள் நினைத்தனர். இதைச் சற்று ஆராய்வோம். இங்கே நான் எழுதிக்கொண் டிருக்கிறேன். எழுதும்போது எழுத்தின்மேல் என்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்திக்கொண் டிருக்கிறேன். இங்கே என் மனம் முழுவதும் வேலை செய்கிறது. ஆனால் என் கையில் எழுதுகோலைப் பிடித்திருக்கிறேன் அல்லவா? அது கையில் படுவதால் அதுவும் சற்று என் மனத்தில் தங்கியிருக்கிறது. நான் உட்கார்ந்திருக்கும் நாற்காலியினால் என் மனம் சற்று அசைக்கப்படுகிறது. என் அறையிலிருக்கும் கடிகாரத்தின் ஒலியும் சற்றே என் காதில் பட்டுக்கொண் டிருப்பதால் மனம் அதையும் கவனிக்கவேண்டி வருகிறது. வீதியில் எத்தனையோ சத்தங்கள் உண்டாகின்றன. அவைகளையும் கவனிக்கவேண்டி யிருக்கிறது. சில விஷயங்கள் நமது புலன்களில் படாமலே மனத்தி லிருந்துகொண்டிருக்கின்றன. 9 மணிக்கு இன்னது செய்யவேண்டுமென்பது நமது மனதில் இருக்கிறது. காந்தியடிகள் வட்டமேஜை மகாநாட்டிற்குப் போவதும் மனதில் இருக்கிறது. ஸர். ஸி. வி. ராமனின் நூதனஆராய்ச்சியும் மனதில் இருக்கிறது. இப்படியாகச் சில விஷயங்கள் மனதில் அதிகக் கூர்மையாகவும், குறைவாகவும் சதா இருந்துகொண்டே யிருக்கின்றன. இதை ஸ்பினோட்ஜாவிற்குப் பின்வந்த முக்கிய ஞானியாகிய லைப்னிட்ஜ் (Leibniz) என்பவர் சமுத்திரத்தின் இரைச்சலுக்கு ஒப்பிட்டிருக்கிறார். ஒவ்வொரு அலையும் சிறிது சத்தம் செய்கிறது. ஒவ்வொரு நீர்த்துளியும் சற்று சத்தம் செய்கிறது. இந்தச் சத்தமெல்லாம் சேர்ந்தே பேரிரைச்சல் உண்டாகிறது. சிறிய துளிகள் சத்தஞ் செய்யாதிருப்பின் பெரிய சப்தம் உண்டாகாது. ஆகவே மனம் என்று சொல்லப்படுவது அனேக சிறிய விஷயங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டே உண்டாவது. ஒரு வஸ்திரத்தில் எத்தனையோ வர்ணமுள்ள நூல்களைச் சேர்க்கிறார்கள். ஒவ்வொரு வர்ணமும் மற்றொன்றில் புகுந்து மறைந்து விடுகிறது.

---

நம் செயலால் தேடிக்கொள்ளும் ஸ்நேகிதர்களை விட அதிகப் பகைவர்களை நம்மொழியால் தேடிக்கொள்கின்றோம்.



இதைப்போல் ஒவ்வொரு அணுவிலும் மனமும் ஜடமும் சஞ்சரிப்பதோடு சிலவற்றில் ஜடம் அதிகமாகவும் சிலவற்றில் மனம் அதிகமாகவும் இருக்கிறதென்று கண்டோம். இவ்வணுக்கள் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்த்தால் வெகு சிறிய மனமுள்ள அணுவிலிருந்து வெகு ஜாஸ்தியான அணுவிற்குக் கோவை ஜோடித்து விடலாம். ஒரு பொருட்காட்சி சாலைக்குச் செல்கிறோம். அங்கே 10000-வருஷங்களுக்கு முன் மனிதர் செய்த கல் பாத்திரங்கள் இருக்கின்றன. அவைகளிலும் தண்ணீரை வைத்துக்கொள்ளலாம். 5000-வருஷங்களுக்குமுன் செய்த பாத்திரங்களையும் உபயோகித்து வந்தார்கள். ஆனால் பின்னே செய்யப்பட்டவை முன் சொன்னவற்றைவிட நேர்த்தியாகவே காண்கின்றன. இவைகளைவிட ஆயிரம் வருஷங்கள் முன் செய்தவை நேர்த்தியாக விருக்கின்றன. இவைகளைவிட நூறு வருஷங்களுக்கு முன் செய்தவையும் இவைகளைவிடப் பத்து வருஷங்களுக்கு முன் செய்தவையும் இவைகளைவிட ஐந்து வருஷங்களுக்குமுன் செய்தவையும் இவைகளைவிட நேற்றுச் செய்யப்பட்டவையும் வெகு அழகாக இருக்கின்றன. இவைகளிலெல்லாம் மண்ணும் வேலைப்பாடுமே இருக்கின்றன. ஆனால் நாள் ஆக ஆக வேலைப்பாட்டின் பெருமை விளங்குகிறது. அதுபோல் சில அணுக்களைவிடச் சில அணுக்களில் மனத்தின் அம்சம் அதிகமாக விருக்கிறது. ஆனால் இவ்வணுக்கள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை யல்ல. இதை லைப்னிட்ஜ் சாளரமற்ற மானட் (Windowless monad) என்று கூறுகிறார். ஒவ்வொரு மானட்டின் அம்சமும் சக்தி, சிலவற்றில் ஜடசக்தி அதிகம், சிலவற்றில் மனோசக்தி அதிகம், ஒவ்வொரு அணுவும் தானாகவே விருத்தி யடைகிறது. செடி, கொடி, மிருகம் மனிதன் இவையெல்லாம் தாமே வளரவில்லையா? கடவுளா வளர்க்கிறார்? அறியாமையால் எதையும் கடவுளே செய்கிறார் என்கிறோம். நற்கிருத்தியம் துற்கிருத்தியம் யாவும் கடவுள் செய்து விட்டால் நாம் என்ன பொம்மைகளா? நமது தேசத்தில் பெரும்பான்மையோர் இவ்விஷயத்தைப்பற்றி யோசனை செய்வதில்லை. கடவுளே நம்மை ஆட்டிவைப்பவர் என்றும் நாம் வெறும் விளையாட்டுச் சாமான்கள் என்றும் கருதுவதில் வாஸ்தவமாகவே மகிழ்ச்சி யுண்டாகிறது. நமது பாரத்தை யெடுத்து விட்டதுபோலவே தோன்றுகிறது. ஆனால் வெறும் மகிழ்ச்சிக்காக உண்மையைக் கருதாமலிருக்க முடியுமா? கடவுள் நம்மை ஆட்டிவைப்பாராயின் பாவம் புண்ணியம் யாவும் அவருடைய பொறுப்பல்லவா? நாம் பாவமாவது புண்ணியமாவது செய்தோமென்று வருந்தவும் வேண்டாம் புகழ்ந்து கொள்ளவும் வேண்டாம். இது தவறு. ஒவ்வொரு விஷயத்தையும் கடவுள் செய்தால் நமக்குச் சித்தங் கொடுத்து, அறிவு கொடுத்து எதற்காக வைத்திருக்கிறார்? அவர் செய்வதையெல்லாம் சரியா, தப்பாவென்று பார்ப்பதற்காகவா?

லைப்னிட்ஜ் இவ்விஷயத்தை யறிந்து ஒவ்வோர் அணுவும் தானே வளருகிறது என்றும் அன்னியவஸ்துவின் ஆக்கினைக்குட்பட்டதன்று என்றும் சொல்லி யிருக்கிறார். அப்படி ஆக்கினைக்குட்பட் டிருந்தாலும் அவ்வஸ்துவின் கட்டளையை நிறைவேற்றச் சக்தியிருந்தால்தானே அதை நிறைவேற்ற முடியும்? அப்படி நிறைவேற்றச் சக்தி யுண்டாயின் அவ்வணுவிற்கே அக்காரியத்தைச் செய்துமுடிக்க வேண்டுமென்று கிளர்ச்சி யுண்டாகாதா? அப்படி

---

நம்மைத் திருத்திக்கொள்வதினும் விரைவாக உலகைத் திருத்திவிட முடியாது.

அதற்கே கிளர்ச்சி யுண்டாகுமாயின் வேறு அன்னிய வஸ்து எதற்கு? கீதையில் அர்ச்சுனனை விளித்துப் பகவான் "ஏ குந்தி புத்திரா! உன்னுடைய இயற்கை காரணமாகவே, அஞ்ஞானத்தால் எதைச் செய்யே னென்கிறாயோ அதை நீயே செய்து முடிப்பாய்" என்கிறார். இதைப்போன்றது அணுவின் விருத்தியும்.

சரி, ஆனால் இவ்வணுக்கள் எல்லாம் சம்பந்த மில்லாமலிருக்க முடியாதே! மேலே சொன்னவாறே, எப்போதும் உலகத்தில் வசிக்கும் அணுக்களோ சம்பந்தமற்றிரா. இச்சம்பந்தத்தை லேப்னிட்ஜ் "பூர்விக ஒற்றுமை" (Pre-established Harmony) என்று கூறினர். ஒவ்வொரு அணுவும் தனித்தனியாக இருப்பினும் எல்லா அணுக்களும் ஒரே காரணத்தை யொட்டியே யிருக்கின்றன. இவ்வுலகத்தைப்பற்றி யோசிக்குங்கால் ஒரு பலனுக்காக ஏற்பட்டிருக்கிறதென்றுதான் நினைக்கவேண்டி யிருக்கிறது. இப்பலன் யாதாயினும் ஒவ்வோர் அணுவும் இப்பலனையே முன்னேற்றுகிறது. ஆகவே இவைகளுக்குள் ஒற்றுமை யுண்டென்று சொல்லலாம். ஒவ்வோர் அணுவும் பளிங்குபோல் மற்ற அணுக்களின் வாழ்க்கையைப் பிரதிபிம்பிக்கிறது. டெனிஸன் என்னும் பெரிய ஆங்கில கவி புஷ்பத்தை வர்ணிக்கும்போது, "ஏ சிறுபுஷ்பமே, உன்னைக் கொய்து கையில் வைத்துப் பார்க்கிறேன். ஆயினும் உன்னை நன்கறியக் கூடுமாகில், இவ்வுலகத்தையும் கடவுளையு மறிந்தவனாவேன்" என்கிறார். அப்படியே ஓரணுவை யறியின் உலகத்தின் அமைப்பையே அறிந்தவராவோம். சங்கீதத்தில் விதவிதமான வாத்தியங்களை வைத்துக்கொண்டிருப்பினும் எல்லோரும் பாடும்போது ஒற்றுமை யிருப்பதுபோல் இவ்வணுக்களின் விருத்தியிலும் ஒற்றுமை யுளது.

லேப்னிட்ஜின் தத்துவத்தின்படி மனிதனின் மனதுக்கும் தேகத்திற்கும் எப்படி ஒற்றுமை உண்டு என்பதைக் கவனிப்போம். இரண்டு கடியாரங்களிருக்கின்றன. இவ்விரண்டும் ஒரே மணி காட்டுவது எவ்வாறு? இரண்டையும் ஒன்றோடொன்று இணைத்து விடலாம். இரண்டையும் ஒரே வேலையாளிடம் கொடுத்து அடிக்கடி திருப்பிக் கொண்டிருக்கச் சொல்லலாம். மூன்றாவது முதலில் செய்யும்போதே இரண்டையும் ஒரே மணிகாட்டும்படி நியமிக்கலாம். இம்மூன்றும் முறையே மனதுக்கும் தேகத்திற்குமுள்ள சம்பந்தத்தை நிரூபிக்கிறது. ஒரே பலனை முன்னேற்றுவதற்காக உண்டான அணுக்களாகையால் ஆதியிலிருந்தே இரண்டும் கடவுளே ஏற்படுத்திய சம்பந்தம்போல் ஒற்றுமையுடன் நடைபெறுகின்றன.

ஒரு வகுப்பில் 50-பிள்ளைகள் படிக்கிறார்கள். உபாத்தியாயர் எல்லோருக்கும் ஒரே பாடம் கற்பிக்கிறார். ஆனால் அதைக் கிரஹிப்பதில் ஒவ்வொருவன் ஒவ்வொரு மாதிரியாகச் செய்கிறான். எல்லோரும் அவரவர்களுடைய புத்திக்கூர்மை, கிரஹிக்கும் சக்தி, மற்ற அனுகூல பிரதிகூலங்கள் முதலியவற்றை யொட்டியே பலன் பெறுகிறார்கள். அதேமாதிரி கடவுளின் ஸ்வரூபமென்பது ஒன்றே. இது ஆதாரமாகக் கொண்டு வளருவது அணுவின் சக்தியினால்தான். அணு தன் இயற்கையால் கட்டுப்பட்டதென்றாலும் தன்னுடைய சக்தியை உபயோகிப்பதில் பந்தமற்றிருக்கிறது. (தொடரும்.)

---

சான்றோர் சந்திரனைப்போல் தம் நற்குணத்தையே உலகுக்குக் காட்டுகின்றனர்.

# இன்பந்தேடிய இளவரசன்.

(T. S. குழந்தைவேலன், திருவானைக்கா.)

இன்பமே என்வாழ்வில் இருக்க எண்ணுகிறேன். இந்த என் எண்ணம் ஈடேறுமா? எந்த வகையிலேனும் இன்பமேகாண ஆவலுறுகிறேன். அந்த என் ஆவல் அழியாது நிற்குமா? இன்பவாழ்க்கையை எட்டிப் பிடித்திட என்மனம் தாவுகிறது. தாவியநெஞ்சம் தடைபெறுமா? இவ்வுலகில் இன்பமென்னும் இனியபொருள் எங்குளது? அதை எனக்கு அன்புடன் காட்டுவீர்களா? இன்பமே துய்த்த எவரேனும் என் கண்முன் எதிர்ப்பட வொண்ணாதா? இன்பவழி இதுதானென்று காட்டுவாரில்லையா? ஓ! இன்ப மனிதர்களே! இன்பவுலகில் இன்பமாளிகை எங்கே யிருக்கிறது? இந்த ஏழையை அழைத்துச்சென்று அங்குள்ள இன்பத்தேனை அள்ளிப்பருகி ஆனந்த மடையச் செய்யுங்கள். இந்த உதவி செய்வீர்களா? இன்பம் எங்கே யிருக்கிறது?

***

நான் அபிஸினிய சக்கரவர்த்தி மைந்தன். என் பெயர் ராஸிலஸ். நான் என் தந்தையால் பள்ளத்தாக்கொன்றில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தேன். அது இயற்கையழகும் இன்பப்பொருளும் எங்கும் நிறைந்துள்ள இடம். நாற்றிசையும் மலையினின்று விழும் மலையருவி யுண்டு. மலைச்சாரெல்லாம் மரச்செறிவு. ஆற்றங்கரை யெல்லாம் அழகிய பூந்திரள். அடிக்கிறகாற்றில் செடிகளின் தழை, கிளை சிறிது அசைய, இலவங்கம், ஏலம், கர்ப்பூரம், சாதிக்காய், தக்கோலம் முதலிய வாசனைத் திரவியங்கள் மலையினின்று பலபலவென்று விழும். புல்பூண்டு மேய்பவைகளும், தழைகுழை கடிப்பவையுமான நானாசாதி விலங்குகள் அச்சமற்று உலாவித்திரியும். ஆட்டுமந்தைகளும், கன்று காலிகளும் திரளாய்க்கூடி மேயும் பசும்புறங்காடு ஒரு பக்கம்; மான், மரை, முயல் முதலிய விலங்குகள் மகிழ்ச்சியாய்த் துள்ளிக்குதித்து வேகமாய்ப் பாயும் காட்டிடை வெளிநிலம் ஒருபக்கம்; மலையில் வெள்ளாட்டுக்குட்டிகள் உல்லாசமாய்த் துள்ளி விளையாடும்; வஞ்சமனமுள்ள வானரங்கள் மரக்கிளைகளில் மகிழ்ச்சியாய்க் குதித்துத்திரியும்; மந்தகுணமுள்ள மதயானை கிளைபடர்ந்த மாநிழலில் படுத்திருக்கும். மனிதருக்கு இகத்தில் இயற்கையான நற்பேறனைத்தும் அங்கு திரண்டிருந்தன. இவைகள் எனக்கு எவ்வித இன்பத்தையும்

---

மனித வாழ்வில் அழகுடையவை ஆசைகளே. ஆனால் அவைகளுக்கு அறிவில்லை. அற்பமாகவேனும் அறிவுடையதே தலைசிறந்தது. அதுதான் அன்பு எனப்படும். அவற்றுள் அறிவில் சிறந்தது ஒன்றுண்டு, அதற்குப் பெயர் பொருளாசை, அது அஞ்சத்தக்கபடி அழகற்றதாகும்.

ளாட்டக் காணேனே! இதோ அவ்விடத்தினின்றும் வெளிப்பட முயலுகிறேன். இன்பம் எங்கே யிருக்கிறது?

***

மனிதரியற்கை யொன்றும், மற்றுள்ள உயிர்க்கோடிகள் இயற்கை யொன்றுமாக வேறுபடும் காரணமென்ன? என்னருகில் திரியும் விலங்கினம் அனைத்திற்கும் எனக்குள்ள உடல் துன்பங்களுண்டு. பசிக்கும் பொழுது, அவை பசி யடங்கப் புல்மேயும்; தாகமெடுக்கும் பொழுது தாகந்தீரத் தண்ணீர் குடிக்கும்; இவ்வாறு பசிதாகம் தீரவும், அவை நிறைமனங்கொண்டு நித்திரை செய்யும். அயர்ந்து தூங்கி விழித்து எழுந்த பின்னும் உண்டாகும் பசிதாகத்தை மேற்சொல்லியபடி தீர்த்துப் பதைப்புறு திருக்கும். அவ்விலங்கைப்போல் எனக்குப் பசிதாகம் முதலிய உடல் துன்பங்கள் சோறு தண்ணீரால் தீர்ந்த பின்னும் என்பதைப்புத் தீருகிறதில்லை. பசிதாக முதலிய குறைகளால் விலங்கும் வருந்துகிறது; நானும் வருந்துகிறேன். அக்குறை தீரவும் விலங்குக்கு மனநிறைவு உண்டாகிறது; எனக்கோ அது இல்லை. பசிதீர உண்டு, மீண்டும் பசிக்கிறவரையில் என்மனம் குறு விசாரப்படுகிறது. பொழுது போகாமல் அலுப்புண்டாகிறது. சோறு தண்ணீரில் விருப்புண்டாகும்படி பசிதாகம் மிஞ்சவேண்டுமென்று விரும்புகிறேன். பறவைகள் காய், கனி, தானியாதிகளைக் கொத்திப் பொறுக்கி இரைகொள்ளி நிறையத் தின்றபின், சோலைகளுக்குப் பறந்துபோய் மரக்கொம்புகளிற் படிந்து களிகூர்ந்து கூவும். அவை கூவும் அடுக்கொலி அன்று ஒருவிதம், இன்று ஒரு விதமல்ல. விகற்பமின்றி என்றும் ஒரே விதமாயிருக்கும். நானும் கின்னரர் பாடகரை வரவழைத்து வீணாகானம் பண்ணுவித்து சங்கீத காலட்சேபம் செய்விப்பதுண்டு. எனினும் நேற்று எனக்கு இன்பமளித்த பண்ணை, இன்றும் கேட்டால் அலுப்பு உண்டாகாமற் போகாது. நாளைக்குங்கேட்டால், பின்னும் அலுப்புப் பெருகும். அதற்குரிய போகம் தெவிட்டாத ஞானேந்திரியபலம் எனக்கில்லை. போகம் தெவிட்டினும் என்மனம் இன்பம் அறியா திருக்கின்றது. இந்த விடத்தில் ஏற்கும் நுகர்ச்சியில்லாத நுட்பமான ஆறுவது இந்திரியம் ஏதோ மனிதருக்குண்டு. இது உண்மை. பின்னும் சற்றுத் தெளிவாய்ச் சொல்லுகிறேன்: ஐந்து இந்திரியங்களுக்கும் அமையாத ஆசை ஏதோ இருக்கின்றது. அவ்வாசை தீர்ந்தே ஆனந்தம் பிறக்கவேண்டும். அவ்வானந்தத்தை யடையவே இன்ப பூமியைவிட்டு வெளிவர முயல்கிறேன். எனக்குச் சொல்லுகிறீர்களா? இன்பம் எங்கே யிருக்கிறது?

***

நானோ அரசகுமாரன். எனக்கென்ன குறையென்கிறீர்களோ? குறை யொன்றும் எனக்கில்லாதிருப்பதும், இருந்தால் அது இன்னதென்று அறியாதிருப்பதுமே என் மனக்குறைக்கு நிமித்தமாம். நெஞ்சறிய எனக்கு ஏதுங் குறையிருந்தால், அதைத்தீர்க்க ஆசையுண்டாகும். அவ்வாசை முயற்சியைத் தரும். முயற்சி பிறந்தால், ஆதித்தன் அஸ்தகிரி சேர நெடும்பொழுது செல்லுகிறதே யென்று என்மனம் பதைக்காது. நித்திரை யொழிந்து அறிவு

'எந்தக் கட்சி அபிப்பிராயத்தையும் தழுவுவதில்லை' என்று யாரேனும் கூறினால் உடனே அவரைத் தைரியமாய் "இவர் சீர்திருத்தம் விரும்பாத கட்சியைச் சேர்ந்தவர்" என்று கூறிவிடலாம்,



தெளிந்து பொழுது விடியவும், நான் பிரலாபிக்க நிமித்த மிராது. வெள்ளாட்டுக்குட்டி செம்மறியாட்டுக் குட்டிகள் ஒன்றையொன்று தொடர்ந்து ஓடுவதைப் பார்க்கும்பொழுது, அவ்வாறு தொடர எனக்கும் யாதாயினும் விஷய மிருக்குமானால் ஆனந்தம் உண்டாகுமேயென்று என் இதயம் நினைக்கின்றது. வேண்டுவன யாவும் குறையாதிருப்பதனால், யாதொரு விகற்பமுமின்றி, நேற்றையதினம் இன்றையதினம் போலும், சென்ற நாழிகை செல்கின்ற நாழிகைபோலும் இருக்கின்றன. பின்னும் சொல்வில், எனக்கு ஒருநாளல்ல, ஒருநாழிகை ஓராண்டுபோல் நீடித்து நிற்கிறது. என் சிறு பருவத்தில் ஒருநாள் ஒருநாழிகை போலக் குறுகி விரைவிற் கழிந்தது. உலகப் பரப்பு ஒரு விநோதமாகத் தோன்றியது. விநாடிக்கு விநாடி முன் காணாத புதுமைகளைக் கண்டேன். நாளென்பதை அவ்வண்ணம் குறுகத் தோற்றுவிக்கும் உபாயமேதும் அறிந்தாற் சொல்லுங்கள்! எனக்கு இப்பொழுதே போகம் தெவிட்டுகிறது. விரும்பத்தக்க புதிய விஷயம் எதையேனும் காட்டுங்கள்! இவ்வித குறைபுள்ள எண்ணமே அந்நிறைவான பூமியை வெறுக்கச் செய்தது. இப்பொழுதேனுஞ் சொல்லுங்கள் நான் தேடும் இன்பம் எங்கே யிருக்கிறது?

***

பேதைமையுள்ள இளம்பருவமும், பலம் ஒடுங்கும் முதிர்பருவமும் மனிதர் வாழ்நாட் கணக்கிற்சேரா. ஒன்றைச் சிந்தித்து நல்லது கெட்டது தெரியும் சக்தி வாலிபருக்குண்டாக வெகுநாட் செல்லுகின்றது. ஆடவருக்குச் செய்திறம் விரையில் ஒழிந்து போகிறது. தப்பறப் புத்தி பூர்வமாய் மதிப்பிட்டால் மனிதருக்குப் பருவம் ஆக நாற்பது. இதில் இருபத்துநான்கில் ஒரு பாகமாகிய இருபது மாதத்தை வீணே சிந்தனையிற் போக்கினேன். போனகாலமுன்னது. அது என் வசத்திலிருந்ததற் கையமில்லை யல்லவா? இனி வரும் இருபது மாதம் எனக்கு வசமாகுமென உறுதிசொல்ல மாட்டுவார் யார்? ஒருவருமில்லையே? இனியேனும் நான் இன்பமா யிருக்க லாகாதா? அவ்வெண்ணம் என் மனதி லெழுந்தது பிழையாகுமா? ஆகாதே. சீக்கிரஞ் சொல்லுங்கள். இன்பம் எங்கே யிருக்கிறது?

***

இதோ நான் இன்பபூமியாகிய பள்ளத்தாக்கினின்றும் வெளிவந்து விட்டேன்! ஆ! என்னென்ன காட்சிகளைக் காண்கின்றேன்! வாகனத்திற் செல்லும் வகையான பலபெரிய மனிதர்களையும், தள்ளாடும் நடையும் தலைநடுக்கமுமுள்ள கிழவர்களையும் ஒரே சமயத்தில் பார்க்கிறேன்! இதென்ன விந்தை! இப்படியும் உலகத்திலுண்டா? அதோ அண்ணாந்து பார்க்கும்படியான அத்தனை பெரிய மாடிவீடொன்று எனக்குத் தெரிகிறது! இவற்றையெல்லாம் நான் இன்பபூமியில் காண்பதெவ்வாறு? இதென்ன! மாடிவீட்டுக்கருகில் இடிந்த குட்டிச்சுவர் நிற்கிறதே! உலகம் இப்படித்தானோ? ஆ! மனிதர் எவ்வளவு சுறுசுறுப்பாக வாழ்க்கைப்போரை நிகழ்த்துகிறார்கள்! எல்லோரும் இன்பமாகத்தானே வாழ்கிறார்கள்! அதோ ஒரு தனவந்தர் வாடிய

அறிவின் உதவியின்றி உணர்ச்சி மூலம் நம்பப்படுபவைகளுக்குத் தவறான காரணங் கண்டுபிடிப்பதே தத்துவ சாஸ்திரம். ஆனால் அக்காரணம் காண்பதும் ஒரு உணர்ச்சியே.

முகத்துடன் செல்லுகிறாரே! ஏன்? அடடா! இந்த ஏழைக்குடியானவன் எவ்வளவு இன்பமாய் வேலை செய்கிறான்? உலகமே ஒரு விநோதக் காட்சி சாலையா யிருக்கிறதே! இதில் நான்தேடும் பொருள் கிட்டுமா? இன்பம் எங்கே யிருக்கிறது?

***

பாலியந்தான் மனமகிழ்ந்து இனிதிருக்கும் காலம். விரும்பும் எதையும் அனுபவித்துக் களிகூர்வதும், ஒன்றுதீர ஒன்றாகப் போகங்களில் ஓயாமல் நாள்கழிப்பதுமே மணியமா யிருக்கும். அல்லவா? எனவே வாலிபருடன் தோழமை கொண்டேன், ஐயோ! நானென்ன சொல்லுவேன்! என் கொஞ்ச நாட்களிலேயே அலுத்து விட்டதே! வாலிபர்கள் உல்லாசத்திற்கு விஷயமில்லை. அவர்கள் நகைப்புக்குக் காரணமில்லை. அவர்கள் இன்பம் ஸ்தூல இன்பம்; விஷய இன்பம். விவேகம் அதிற் கலக்கவில்லை. அவர்கள் நடை மாறுபாடானது. ஒழுங்கும், விதிகளும் அவர்களுக்குப் பரிகாசம். ஆனால் அதிகாரி முகங்கடுத்தால், அவர்கள் மனம் குன்றிப்போய் விடும். அறிவுடையோரைக்கண்டால், அவர்கள் நாணி விறைத்துப் போவார்கள். நிபந்தனை ஏதுவுமின்றி நடப்பதும், நெறிகுறியின்றி நேர்ந்தபடி சலிப்பதும் களிப்பதும் பகுத்தறிவுள்ள மனிதருக்குத் தகுதி யாகுமா? மனோசுகமானது அச்சமும் ஐயமுமற்று உறுதியும் நிலையுமுள்ளதா யிருக்கவேண்டுமே! இவர்களிடம், இத்தகைய இன்பமில்லையே! என்செய்வேன்? எங்கு தேடுவேன்? இன்பம் எங்கே யிருக்கிறது?

***

“புலன் வென்றவன் அதன்பின் அச்சத்திற்கு அடிமையாகான்; ஆசை அவனைப் பேயாட்டம் ஆட்டி அலைக்காது; அழுக்காற்றால் அவன் துர்ப்பலன் ஆகான்; சினத்தீ அவன் இதயத்தில் பற்றாது; நெஞ்சிளைத்து, அவன் ஆண்மை குன்றாது; துக்கங் குடிகொண்டு அவன் மனவுறுதி அழியாது. கடும்புயல் அடிக்கிறதென்றும், காற்றடித்து ஓய்ந்ததென்றும் காலபேதம் பாராமல் எத்தேசகாலமும் ஏக கதியாய் ஆகாய மண்டலத்தில் செல்லும் ஆதித்தனைப் போல், அவன் சந்தடியுள்ள ஜனத்திரளிடையில் சஞ்சரிக்கும் பொழுதும், தன்னந்தனியே இருக்கும் பொழுதும் சாந்தசித்தனாக நடப்பான்” என்று ஒரு பண்டிதர் பிரசங்கஞ் செய்தார். அவ்வித்தகர், காணும் எவரும் பேணிப் பணியத்தகும் பெரியார்; சிறந்த இங்கிதர்; மொழிவதை அறமொழிபவர். இவர் முடிவாக “கெட்ட எண்ணங்களும், சினமும் எள்ளளவும் உடம்பில் ஏற்படாவண்ணம் பொறையென்னும் வைர மூடியை தரித்துக் கொள்ள வேண்டும். இதுவே இன்பம்” என்று சொன்னார். இதைக் கேட்டதும், ஆ! இவரே நாம் நாடிவந்த பொருளைத் தேடிக் காண்பிக்கவல்ல தீரரெனத் தீர்மானித்தேன். அதனால் அவரைக் காண்பதற்கு மறுநாள் சென்றேன். நான் கண்டதென்ன? அப்பண்டிதர் தன் ஒரே மகள் இரவு இறந்து விட்டாளென்று அழுது கொண்டிருந்தார்! அவர் என்னைக்கண்டதும் “கேளும், மனிதர் உற விருந்தும் உதவாமற் போகுஞ் சமயம் பார்த்து வந்தீர். என் ஏகபுத்திரி இறந்து போனாள். அவளிறக்க, என் ஆசை யனைத்தும் அழிந்து போயின,”

---

எண்ணம் இயற்கைப்படி எழுகின்றது, பேச்சு கற்பித்தபடி பிறக்கின்றது, செயல் வழக்கப்படி நிகழ்கின்றது.



என்று புலம்பினார். “ஐயா, சாவைக்குறித்து அறிவுடையோர் தட்டுக்கெட்டுத் தடுமாறுவது இயற்கை யல்லவே, ஆறிலுஞ்சாவு, நூறிலுஞ்சாவு. அது எப்பொழுதும் நம்மைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. இன்று நமக்கு இறப்பு வரினும் வருமென்று மனிதர் யாவரும் அன்றன்று நினைத்துக்கொள்வ தல்லவா கடன்?” என்று நான் தெரிவித்தேன். அதற்கவர், “அப்பா, உற்றாரைப் பிரிவோர்க்கு உறும்துயர் அறியாதவன் போலப் பேசுகிறாயே” என்றார். நான் விடாமல், “பின்னை நீங்கள் மிக வலியுறுத்தி யுணர்த்திய கற்பனைகளை மறந்து விட்டீர்களா? துன்பமெனும் மாற்றான் பிடித்துக் கொள்ளாவண்ணம் மனக்கோட்டையை அரண்செய்ய அறிவு மன்னனுக்கு ஆண்மை யில்லையா? புறப்பொருளெல்லாம் மாறுவதியற்கை. உண்மையும் அறிவும் எந்த வேளையிலும் அணுவளவேனும் மாறாதிருக்கும். இதை அறியுங்கள்” என்றேன். அவர், “உண்மையாலும் அறிவாலும் எனக்கு என்ன பயனுண்டாம்? இறந்து போன என்மகள் இனித் திரும்பி வாராளென்று எனக்கு அவைகள் சொல்லும் இதன்றி, இப்பொழுது அவைகளால் எனக்கு என்ன சுகம்?” என மொழிந்தார். இதன் பின் அவரிடம் எனக்கென்ன வேலை? ஏமாற்றந்தானே நான் கண்டது? இன்பம் எங்கே யிருக்கிறது?

***

இடையர் வாழ்க்கையில் இன்ப மிருக்குமென்று எண்ணினேன். இடையர்குலம் கள்ளமற்றது, கலகமற்றது எனப் பாடல்களில் படித்திருந்ததும் இச்சமயம் என் ஞாபகத்தில் எழுந்தன. இடையர்க்குரிய எளிய வாழ்வே இன்ப வாழ்வென்று கண்டறிந்து நாம் நாடியபொருள் கைகூடிற்றென்று மகிழ்ந்து மனநிறைவு பெறுவோமென்று நிச்சயித்தேன். உடனே ஓரிடையன் இல்லத்திற்குச் சென்றேன். ஆ! அவன் என்னைக் கண்டதும் எவ்வளவு பரிவுடன் வரவேற்று உபசரித்தான்! நான் செல்வவந்தன் ஒருவன் வீட்டுக்குச் சென்றிருந்தால் இவ்வளவு உபசாரத்தை எதிர்பார்க்க முடியாதென்று எனக்குத் தெரியும். நிற்க, இடையனின் இன்பதுன்பங்களைப்பற்றி அறிய ஆவல் கொண்டேன். “ஐயா, உங்கள் குடியியற்கையின் சுகதுக்கங்களைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?” என்று வினவினேன். அவனோ முரட்டிடையன்; ஒன்றுமறியாதவன். இன்பதுன்பங்களின் தன்மை இதுதானென்று கண்டறியும் வல்லமை அவனிடமில்லை. ஆகவே, கேட்டகேள்விக்கு அவன் ஏதோ வாயில் வந்ததை உளறினான். ஆயினும் நான் கண்டுகொண்டதென்ன? பழத்திலுள் புழுப்போல பலவித குறையெண்ணங்கள் அவர்கள் இதயத்தை அரித்துப் பழுதுபடுத்தின. தாங்கள் மெய்வருந்தி உழைக்க, அவ்வுழைப்பால் விளையும் ஊதியத்தை நிறைசெல்வமுள்ள சீமான்கள் அநுபவித்துச் சுகித்திருக்கிறார்களென்று நினைத்து, அவர்களுக்குத் தம்மில் உயர்ந்தோர் மீது காரணமின்றிச் சினமிருந்திருந்தது. என்ன விந்தை! எங்குச் சென்றாலும் பாழும் துன்பப் பேய் தொடர்ந்துகொண்டிருக்கிறது? இன்பம் எங்கே இருக்கிறது?

***

எளிய இடையரிடம் இன்பமில்லையெனில் பெரிய செல்வனிடமேனும் இன்பமிராதா? இதோ அழகிய இல்லம்! இதனுள் வசிப்பவர் இன்பந்துய்க்கும்

---

துக்கமாயிருக்க ஒருநாளும் நியாயம் கிடையாது.

வள்ளலாகவே யிருக்கவேண்டும். உள்ளே நுழைகிறேன். ஆ! அதோ அவ்வள்ளல் எத்துணை இன்முகங்காட்டி எதிர்கொண்டு வரவேற்கிறார்! இவரே இன்பக் களஞ்சியம்! என் கவலை யொழிந்தது! இன்பக்கோட்டையை எட்டிப் பிடித்து விட்டேன். இப்பொழுதாவது என் முயற்சியில் வெற்றி கண்டேனே! அடடா! இதுவென்ன ஏமாற்றம்! அவர் நெஞ்சிலும் குறையிருக்கிறதென்று சொல்லுகிறார்? "எனது நிலைமை இன்பமுடையதென உங்களுக்குத் தோற்றுகிறது போலும். ஆனால் அது உண்மையல்ல. கண்மாயந்தான். என் செல்வத்தால் உயிருக்குத் தீங்கேற்படுகிறது. என் பொருட் செல்வத்தைக் குறித்துப் பலர் எனக்குச் சத்துருக்களானார்கள். அவர்கள் பகைமைகொள்ள நான் எதுவும் செய்தவனல்லன். இது வரையில் எனக்கு அவர்களால் தீங்கொன்றும் நேரிடாமல் துணைநின்றவர்கள் என் நண்பர்கள். என்றாலும் நான் அவர்களை முற்றும் நம்பமுடியாது. இன்று எனக்கு உதவிபுரியும் அவர்கள் நாளை எதிரியுடன் கூடி என் சொத்தைச் சூறையிடுவித்துத் தாமும் ஒருபங்கு வாங்கி அநுபவித்தாலும் அநுபவிப்பார்கள். அதனால் எனது சொத்து முழுவதையும் தூரதேசத்திற்கு அனுப்பி விட்டேன். சத்துருபயம் உண்டாகும் அந்த விநாடியே அத்தேசத்துக்கோடித் தப்பி விடுவேன். அப்புறம் சத்துருக்கள் இச்சிங்கார மாளிகையைக் கைக்கொண்டு உண்டாட்டுக் களியாட்டுச்செய்து நான் நாட்டுவித்த உத்தியானங்களின் பயனைத் துய்ப்பார்கள்" என்பதைக் கேட்டு என் காது புளித்தது. ஒருவிநாடியும் அங்கு நில்லாது ஓடிவந்து விட்டேன். இவ்வளவு பெரிய வுலகில் நிலைத்த ஒரு இன்பங் கிடையாதா? அட தொந்தரவே; எட்டாப் பழத்துக்குக் கொட்டாவிவிட்டுத் திரிகிறேனே! எங்ஙனமாயினுஞ் சரி, முயற்சியைத் தளர்த்த நான் விரும்பவில்லை. இதோ என் மனம் முனைந்து விட்டது. இன்பம் எங்கே யிருக்கிறது!

## ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

*இடையூறு பெரியோரிடம் ஊக்கத்தை எழுப்பும், அவர்கள் அதனோடு சண்டையிட்டு ஜயம்பெற முயல்வர். இடையூறும் தம் இன்பத்தில் ஒரு அம்சமே என்று கருதாதவருடைய மனம் மிகத் தாழ்ந்ததாகவே இருக்கவேண்டும்.*

லைப் இன்ஷியூரென்ஸ் பகுதி

## ஒரு கைம்பெண்ணின் கதை

(இன்ஷியூரென்ஸ்.)

என் பெயர் மஹாலக்ஷ்மி. பெயர்தான் அப்படி. அதிர்ஷ்டத்தில் மூதேவியைவிடக் கேடு. ஒருகால் என்னை ஏளனஞ் செய்ய என் பெற்றோர் அப்படிப் பெயரிட்டார்கள் போலும்! எனக்கிப்போது வயது இருபத்துமூன்று. ஆறுமாதத்திற்கு முன் என் புருஷனை யிழந்தேன். என் தகப்பனாருக்கு மூன்று பெண்களும் இரண்டு பிள்ளைகளும் பிறந்திருக்கின்றன. அவருக்கு வயதாகிவிட்டது. அவருக்கு உபகாரச் சம்பளம் மாதம் நாற்பது ரூபாய் வருகின்றது. எனக்குப் பன்னிரண்டு வயதில் விவாகம் முடித்தார்கள். என்னுடைய புருஷன் வீட்டார் பரம ஏழைகள். என் புருஷன் பி. ஏ. படித்து சர்க்கார் உத்தியோகத்தில் நாற்பத்தைந்து ரூபாய் சம்பாதித்துக்கொண்டிருந்தார். நாங்கள் சென்னையிலேயே வசித்துக்கொண்டிருந்தோம். அந்தச் சம்பளத்தில் எங்களுடைய இரண்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்வது கஷ்டமாகவே யிருந்தது. பிதிரார்ஜிதமும் கிடையாது. சுயார்ஜிதமு மிகுதியாக இல்லை. அன்றன்றைய போது கழிவதே கடினம். எனக்கு நகைகள் அதிகம் கிடையா. தகப்பனார் செய்து போட்ட காப்பு, கம்மல், மூக்குத்திருகு முதலிய கர்நாடக நகைகள் தவிர வேறு கிடையாது. சென்ற வருஷம் என் புருஷனுக்குத் திடீரென்று டைபாயிட் ஜுரம் கண்டது. அதில் இறந்துவிடுவாரென்றே தீர்மானித்து விட்டோம். அப்போது பிழைத்தார். ஆனால் ஆறுமாதங்களுக்கு முன் இரண்டு நாள் ஜுரமாகக் கிடந்து உயிர்விட்டார். அவர் ஆறுமாதம் நோயாளியாகக் கிடந்தபோது சம்பளமும் அரைச் சம்பளம்தான் வந்தது. சிகிச்சைச் செலவும் அதிகம். அவர் இறந்தவுடன் அவருடைய ஆபீஸில் நூறு ரூபாய் கிடைத்தது. அதை வைத்தியருக்குக் கொடுத்துவிட்டேன். என் நகைகளை விற்று சில்லறைக் கடன்களைத் தீர்த்தேன். இப்போது என்னையும் என் குழந்தைகளையும் பராமரிப்பவர் எவருமில்லை. என் தந்தை—பாவம்! எங்களுக்குக் கஷ்டத்தோடு அன்னமிட்டு வருகிறார். அவருடைய உபகாரச் சம்பளம் எந்த மூலைக்கு? துக்கத்தையும் துன்பத்தையும் வெளிக்குக் காட்டாமல் இருக்கிறார். எனக்கு வெகு கஷ்டமாக விருக்கிறது. இத்தனை வயதானவள், ஒரு குடும்பத்திற்குத் தலைவியாயிருந்தவள், இப்போது ஒன்றுக்கும் உதவாமல் இழவர் பெறும் வருமானத்தில் காலக்ஷேபம் செய்யவேண்டி யிருக்கிறதைப்பற்றி நினைக்க நினைக்கத் துக்கம் வருகிறது. எனக்குப் படிப்புமில்லை. இருந்தால் பெண்பாடசாலையில் உபாத்தினி உத்தியோகம் பார்த்து ஏதாவது சம்பாதிக்கலாம். அதற்கு மில்லாமலிருக்கிறது. மேனாடுகளில் நூல்களைக்கொண்டு

*பெரிய விஷயத்திற்காக உயிர் துறப்பவர் ஒருநாளும் தோற்றவராகார்.*

பல பொருள்கள் பின்னிவிற்று அனேக ஸ்திரீகள் பிழைத்திருக்கிறார்கள் என்று யாரோ சொல்லக் கேள்வி. அதற்கும் நமது தேசத்தில் வழியில்லை. என்னுடைய குழந்தைகளை எப்படி முன்னுக்குக் கொண்டுவருவது? எனக்கு இன்னுமொரு வருத்தம். இரண்டு வருஷங்களுக்கு முன் என் புருஷன் இன்ஷியூர் செய்வதாகச் சொன்னார். இத்தனை வருஷங்களுக்கு வருஷத்திற்கு இவ்வளவென்று சந்தா செலுத்திவந்தால் குறித்த காலத்திற்குப் பிறகு மொத்தமாகத் தொகை கிடைக்கும் என்றும், மத்தியில் எப்போது இறந்துவிட்டாலும் அதே மொத்தத் தொகை கிடைக்கும் என்றும் சொன்னார். நான் அப்படியெல்லாம் பணம் சேர்க்கவேண்டாமென்றும், அவர் இறந்து ஒரு காரியமுமாக வேண்டியதில்லையென்றும், அப்படியெல்லாம் அவர் இறந்துபோக மாட்டாரென்றும் சொல்லித் தடுத்தேன். டைபாயிட் ஜுரம் கண்டு பிழைத்த பின் அவருக்கு என்ன தோன்றிற்றோ, மறுபடியும் இன்ஷியூர் செய்ய உத்தேசித்து என் வார்த்தையையுங் கேளாமல் ஏற்பாடுகள் செய்தார். அந்தோ கம்பெனியார் அவரைத் தக்கவரல்லர் என்று தள்ளிவிட்டார்கள். தேக ஸ்திதியைப் பொறுத்தே அவர்கள் அங்கீகரிப்பார்களாம். சிறிதேனும் பழுது இருந்தாலும் தள்ளிவிடுவார்களாம். ஆஹா! இப்போது அவரை என் முதலில் தடுத்தேன் என்று வருந்துகிறேன். என்னுடைய கஷ்டகாலம் அவரை என் பேச்சைக் கேட்கத் தூண்டிற்று. திக்கற்றவருக்குத் தெய்வம் துணையாம். தெய்வம் மனிதருக்கு உதவி செய்வது தகுந்த சமயத்தில் புத்தி கொடுப்பது தான். அப்புத்தியை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டால் யார் குற்றம்? தெய்வத்தைக் குறைகூறி யென்னவாகும்? மற்ற ஸ்திரீகளாவது என்னுடைய கஷ்டத்தைக் கருதி தம்முடைய புருஷர்களை வற்புறுத்தியேனும் இன்ஷியூர் செய்யச் சொல்வார்கள் என்பதே என்னுடைய கோரிக்கை. அதைச் செய்வதால் பத்து வருஷம் பொறுத்து இறப்பவர் பத்து மாதத்தில் இறக்கமாட்டார். எத்தனையோபேர் சந்தா ஆயுள் முடியக் கட்டித் தொகையைப் பூராவாகத் தாமே பெற்றுச் சுகமாயிருக்கிறார்களாம். என் சகோதரிகளே! ஒன்றுக்கும் அஞ்சாமல், இத்திவ்ய முறையை யனுசரிக்க முன் வாருங்கள். பிறருடைய அனுபவம் நமக்கு வெளிச்சத்தைக் காட்டட்டும். என்னுடைய எளிய நிலை பிறருக்கு வேண்டாமென்றே இதை எடுத்துச் சொல்லலானேன்.

சகுனம் முதலிய கொள்கைகள் நமது தேசத்தில் அதிகமாக வழங்கி வருகின்றன. வெளியில் போவதற்கு முன் நல்ல சகுனம் பார்த்துச் செல்கிறோம். விதவையாவது, பூனைக்குட்டியாவது எதிர்ப்பட்டால் வேலை நடக்காதென்று நம்புகிறோம். காலில் அடிபட்டால் சற்றே உட்கார்ந்துவிட்டுப் போகிறோம். இவ்விஷயத்தில் மேனாட்டாரும் நம்மைப்போலவே யிருக்கின்றார்கள். போகும்போது குதிரை லாடங் கிடைத்தால் நல்ல சகுனமென்றும், ஏணியின் கீழ் சென்றால் ஏதேனும் விபத்து நேரிடும் என்றும், பதின்மூன்றாந் தேதி ஒரு வேலையுஞ் செய்யக்கூடாதென்றும், கண்ணாடி விழுந்து உடைந்தால் ஏதேனும் விபத்து நேருமென்றும் நினைக்கிறார்கள். ஆர்க்டிக் மஹா சமுத்திரத்தில் சீல் என்னும் நீர் மிருகத்தை வேட்டையாடுவது வழக்கம். ஒரு முறை பலவிடங்களில் தேடியும் ஒரு சீலும் கிடைக்கவில்லையாம். கரைக்கு வந்து செம்படவர்கள் ஒருநாயைக் கொன்று பசியைத் தீர்த்துக் கொண்டார்

உலகம் உதவக்கூடியதற்கு அதிகமாக உலக வாழ்வினின்றும் எதிர்பாராதே.



களாம். நாயின் எலும்பு ஒன்று படகில் விழுந்ததாம். பிறகு வேட்டையாடிய போது அபரிமிதமான சீல்கள் கிடைத்ததாம். செம்படவர்கள் யோசித்தார்கள். என்ன விந்தை! காலை யெல்லாம் தேடித்திரிந்தோம் ஒரு சீல் கிடைக்கவில்லை! இப்போது இத்தனை கிடைத்திருப்பதற்கு என்ன காரணம்! இந்த நாயின் எலும்புதான் காரணமாக விருக்கவேண்டும்! என்று தீர்மானித்து அது முதல் நாயின் எலும்பைத் தவறாது எடுத்துச் சென்றார்களாம்! நாயின் எலும்புக்கும் சீல் வேட்டைக்கும் என்ன சம்பந்தம்? இதேபோல் நாம் ஒரு காரியத்தை யுத்தேசித்துப் போகும்போது பூனை குறுக்கே ஓடுவதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? சிலர், சம்பந்தமில்லாவிட்டால் அந்தச் சமயத்தில் ஏன் அந்தப் பூனை போகவேண்டும் என்பார்கள். சரி, அப்படி அந்தப் பூனை ஓடியதால் நாம் வேலைக்குப் போகாமல் திரும்பிவிடுவதில்லை. அதைப் பாராட்டாமல் போகிறோம். போய் காரியம் ஆய்விட்டால் பூனை போனதுகூட மறந்துவிடுகிறது. காரியம் கெட்டுவிட்டால் அப்போது பூனை குறுக்கே ஓடினது ஞாபகம் வருகிறது! ஒரு தினம் நாம் நினைத்தபடி ஒன்று நடக்கவில்லையென்றால், உடனே ஏன் நடக்கவில்லை? காலையில் ஒரு விதவை நம் கண்ணில் தென்பட்டாளே! அதுதான் காரணம் என்று தீர்மானிக்கிறோம். குட்டிச்சுவரில் தேன் கொட்டினால் வேறெங்கேயாவது விஷமேறுமா? நாம் ஏன் இதைச் சற்று யோசிக்கலாகாது? இவ்விஷயங்களுக்கு அர்த்தமே கிடையாது. இருந்தும் எத்தனையோ மக்கள், எவ்வளவு உலக அனுபவமிருந்தும் இவைகளை ஒரு பொருட்டாக மதிக்கிறார்கள்.

லைப் இன்ஷியூரென்ஸைப்பற்றியும் இம்மாதிரி தப்பபிப்பிராயம் மனிதருக்கு ஏற்பட்டிருக்கிறது. இன்ஷியூர் செய்தால் இறந்துவிடுவர் என்று நினைக்கும் மனிதர் அனேகர். பணம் சேர்க்கும் முறையாம் இது ஆட்கொல்லி யாகுமா வென்று யோசிப்பதில்லை. இன்ஷியூரென்ஸை ஏன் ஆட்கொல்லி யென்று சொல்கிறார்கள்? பணம் ஆட்கொல்லியா? ஆயின் சீட்டுகளில் பணம் சேர்க்கிறார்களே அது தவறில்லையா? பணத்தை நிதிகளில் சேர்க்கிறார்களே அது தவறில்லையா? வீடுகள் வாங்குவது தவறில்லையா? வண்டிகள் வாங்குவது தவறில்லையா? பணத்தைப் பெட்டியில் பூட்டிவைப்பது தவறில்லையா? இவையெல்லாம் தவறில்லையெனின் இன்ஷியூரென்ஸுக்குப் பணம் சேர்ப்பது தவறாகுமா? இரண்டாவது, இன்ஷியூரென்ஸில் ஜனசமுதாயம் ஏற்படுகிறது. ஜனங்கள் அனேகர் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்ய முனைவது சகஜம். பொதுக்கூட்டம் கூடுவது தவறாகுமா? கோவாபரேடிவ் சங்கங்களில் ஜனங்கள் சேருவது தவறாகுமா? ராஜ்யத்தின் நடப்பு ஜனங்களில்லாவிட்டால் முடியாது. ராஜ்யம் தவறாகுமா? சட்டசபைக்கு தேர்தல் நடக்க ஜனங்கள் வோட்டு கொடுக்கிறார்கள். இது தவறாகுமா? கலியாணங்களில் ஜனங்கள் சேருகிறார்கள். இது தவறா? இவையெல்லாம் சரி யென்றால் இன்ஷியூரென்ஸில் சேரும் ஜனக்கூட்டம் மாத்திரம் ஏன் தவறு? பாங்கில் போடும் பணத்தை எப்போது வேண்டுமானாலும் எடுத்துவிடலாம். இன்ஷியூரென்ஸில் கூட அப்படி வேண்டும்போது பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்துகொள்ளலாம். 10-வருஷம் பொறுத்து வேண்டுமா, 15-வருஷம் பொறுத்துப் பெறவேண்டுமோ? எப்போது வேண்டுமானால் அப்

“இயற்கை” எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிடுகின்றது. ஆனால் நீ அவையின்றி வாழக் கற்றுக்கொள்ள மறந்துவிடாதே.

போது பெற்றுக்கொள்ளலாம். இன்னொரு விஷயம். மத்தியில் இறந்துவிட்டால் நாம் கட்டியது கட்ட உத்தேசித்தது எல்லாம் கிடைக்கும். பாங்கிலோ கட்டியது மாத்திரம் கிடைக்கும். சிலர், அப்படி அக்கிரமமாகச் சொத்து வேண்டாம். இன்னொருவர் வயிறு எரிய நாம் பணம் பெறுவதா என்பார்கள். இன்னொருவர் யாரு மங்கில்லை. எல்லாம் பொதுப் பணம். அந்த இன்னொருவர் இறந்துவிட்டால் அவர் உத்தேசித்த தொகை அவருடைய குடும்பத்திற்குக் கிடைக்கிறது. அவருடைய வயிறு எரிவானேன்? குதிரைப் பந்தயத்திலாவது லாட்டரி சீட்டிலாவது ஒரு மனிதன் லாபம் பெற்றால் அப்போது மற்றவருக்கு மனம் பதைக்கும். எல்லோருடைய பணத்தையும் எடுத்து ஒருவனுக்குக் கொடுத்தால் அப்போது வருத்தம். எவருக்கும் தமது பணம் போகாதென்று தெரிந்தபின் வருத்தம் ஏன்? இன்ஷியூரென்ஸை "இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்" என்று சொல்லவேண்டும். குறித்த காலம் ஜீவித்திருந்தால் கட்டின தொகை கட்டாயமாய்க் கிடைக்கின்றது. இறந்துவிட்டாலும் தொகை குடும்பத்திற்குப் போகிறது. நாம் குடும்பத்தில் ஓர் அங்கத்தினனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் குடும்பத்திற்குக் கஷ்டமில்லை. இதைவிட வேறு என்ன வேண்டும்? நமக்குப்பின் பணமேன் என்பாரும் இருக்கின்றனர், நமக்குப் பின் குடும்பம் கஷ்டப்படாமலிருக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லையேல் நாம் இருக்கும்போதுதான் அதை ரக்ஷிக்கப் பிரயத்தனப்படுவானேன்? அதுவும், இறந்தால் சனிவிட்டது என்று எண்ணமுண்டாகும். அப்படியுண்டானால் சீக்கிரம் இறக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாவது சகஜமே. அப்போதும் குடும்பத்தைப் பாதுகாக்கப் போவதில்லை, இப்போதும் பாதுகாப்பதில் அசிரத்தை. அதற்கு மானிடப் பிறவி யெடுத்துத்தான் என்ன பிரயோஜனம்? இப்போது குடும்பத்தைச் செவ்வனே பார்த்துக்கொள்ளாவிட்டால் ஊரார் ஏசுவார்களென்ற பயம் சிலருக்கு உண்டு. ஆகையால் ஊராருக்காவது பயந்து குடும்பத்தை ரக்ஷிப்பார்கள். இறந்துவிட்டால் அதிகமாகத் தூற்றுவார்கள் என்பதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும். குடும்பம் சந்தியில் நிற்பதற்காக, மனைவி மக்கள் கதறும் கோலத்தைக் கண்ணுற்ற அனைவரும் இறந்தவரைத் திட்டுவார்கள். இறந்தபின் அவதூறு பேசாதே யென்று ஆங்கிலமொழி யொன்றுண்டு. அதன்படி, கியாதியே பெற நினைப்போர் குடும்பத்திற்குத் தம் கடைமையைச் சரிவர முடித்துவைப்பது இன்றியமையாததாகும்.

[குறிப்பு:—லைப் அஷ்யூரென்ஸைப் பற்றி விவரமாக அறிய விரும்புவோர் "ஆனந்தபோதினி" வாரப்பதிப்பில் வெளியாகும் கட்டுரைகளைப் படிக்கவும். இவ்விஷயத்தில் ஏதேனும் சந்தேகம் தோன்றினால் ஆசிரியருக்கு எழுதலாம். தக்க பதில் அளிக்கப்படும்.]

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

# நாடகம்.

டர்பன் சரஸ்வதி சபைத் தலைவர். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.

'நாடகம்' என்ற சொல்லைக்கேட்ட துணையானே சிலர் அருவருப்புக் கொள்ளுவதையும், வேறு சிலர் அலட்சியஞ் செய்வதையும், மற்றும் சிலர் கேவலமாக நினைப்பதையும் நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம். ஆனால் உண்மை வழி நோக்கினால், நாடகம் புறம்பழித்தொதுக்கப்படவேண்டிய சிறுமை யுடையதா? அல்லது பாராட்டிப் போற்றக் கூடிய பெருமையுடையதா? என்பது நன்னெஞ்சுடைய அறிவாளர் எல்லோருக்கும் இனிது புலப்படும். எண்ணரிய பிறவிதனுள் பெருதற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்றதன் பயன் என்னையோவெனின்: அறம்பொருளின்பமாகிய மூன்றினால் அடையக்கூடிய இம்மைப் பயன்களை யடைந்து, மறுமையில் வீடுபெறுதலைக் கூடும்படியான முயற்சியை இம்மையிற் செய்தல் ஒன்றேயாம். அங்ஙனம் முயற்சி இம்மையிற் செய்வதற்கு மக்களினுடைய அறியாமை தேய்ந்து அறிவு விரிந்து விளங்க வேண்டுவது மிகவும் இன்றியமையாத தொன்றாம். அறம் பொருளின்பம் வீடாதிய புருடார்த்தங்களை அடைதற்கு அறிவு விருத்தி வேண்டுமெனக் கூறுவதெற்றுக்கோ வெனின், கூறுவம். உலகத்திலே பெருமை என்றும், சிறுமை என்றும், ஒளி யென்றும், இருள் என்றும், உயர் வென்றும், தாழ்வென்றும், ஒன்றனோ டொன்று பெரிதும் முரண்பட்ட இருநிலைக ளிருக்கக் காண்கிறோம். அதுபோலவே பொருள்களுள் மெய்ப் பொருள்க ளென்றும், பொய்ப் பொருள்க ளென்றும் இரண்டு பிரிவுக ளிருக்கின்றன. இவைகளுள், பொய்ப் பொருள் இதுவெனத் தெரிந்து அதை யொழிக்கவும், மெய்ப்பொருள் இதுவெனத் தெரிந்து அதைத் தழுவவும் நாம் முயற்சித்தல் வேண்டும். ஏனெனில், மெய்ப்பொருள் தெரிந்தாலன்றி நாம் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி அவரைத் தலைக்கூடுதல் சாத்தியமாகாது. அங்ஙனம் மெய்ப்பொருளறிதற்கு அறிவே சிறந்த கருவியாக விருக்கிறது.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்—மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும் ஆசிரியர் திருவள்ளுவனார் இரண்டுமுறை வலியுறுத்திக் கூறியதே மேற்கூறிய உண்மையைப் புலப்படுத்தப் போதிய சான்றாமென்க.

இனி அறிவு என்பது ஒவ்வொரு ஆன்மாவினிடத்தும் இயற்கையாகவே அமைந்து கிடக்கிறது. ஆனால், பயிரைச் செழுமையாக வளர வொட்டாமல் களை மூடிக் கொண்டிருத்தல்போல ஆன்ம அறிவை ஆணவ மென்னும் அறியாமை மலம் மூடிக்கொண் டிருக்கின்றது. களையைக் களைந்துவிட்டால் பயிர் செழித்து வளருவதுபோல் ஆன்ம அறிவை மூடிக்கொண்டிருக்கும் அறியாமையாகிய ஆணவ மலத்தின் ஆற்றலை அறவே ஒழித்துவிட்டால்

இயற்கையாகவே ஆன்மாவினிடம் அமைந்து கிடக்கும் அறிவானது விரிந்து பிரகாசிக்கும். அவ்விதம் திகழ்வதே அறிவு விருத்தி என்று சொல்லப்படும்.

இனி, அவ்வறிவு திகழுமாறு யாங்ஙனமெனின், ஆன்றோரா லியற்றப்பட்ட நலம்படு நூல்கள் பலவற்றையும் நுணுகி ஆராய்வதனாலும், பேரறிவுடைய நன்மக்களுடன் அரிய விஷயங்களைப்பற்றி அளவளாவி வருவதனாலும் அறிவு விரிந்து திகழு மென்க.

இனி, ஒரு விஷயத்தின் உண்மைப் பொருள் தேர்தற்கு மூன்று வகையான பிரமாணங்கள் நம்முடைய ஆன்றோர் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. நூலாராய்வோரும், அறிவு விருத்தியை விரும்புவோரும், உண்மைப் பொருள்தேர அவாவுறுவோரும் அம்மூன்று பிரமாணங்களையும் அனுஷ்டிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாத தாகும். அம்மூன்று பிரமாணங்களாவன:—(1) ஆகமப் பிரமாணம், (2) அனுமானப்பிரமாணம் (3) பிரத்தியட்சப் பிரமாணம். இவைகளை முறையே சுருதி, யுக்தி, அனுபவ மென்றும் கூறுவார்கள். இம்மூன்ற னுள்ளும் ஆகமப் பிரமாணம் பல நூற் பொருளையும் ஒருங்கறிந்த அறிவாளர்களாலும், அனுமானப் பிரமாணம் நூலறிவோடு கூடிய இயற்கை நுண்ணறிவுடையோர்களாலும் கொள்ளப்படுவனவே யன்றிச் சாமானிய மக்களால் கொள்ளப்படுவனவாகா. ஏனெனில், சாமானிய ஜனங்கள் இவ்விரண்டு பிரமாணங்களாலும் பொருள் நிச்சயம் செய்தல் சாத்தியமாகாது. மேலும், இவ் விரு பிரமாணங்களாலும் கொள்ளப்படும் விஷயங்கள் ஒருவருடைய கொள்கைக்கும் மற்றொருவருடைய கொள்கைக்கும் மாறுபட்டிருப்பினு மிருக்கலாம். மற்று, பிரத்தியட்சப் பிரமாணமோ எல்லோராலும் அங்கீகரிக்கத் தக்கதாயும், சாமானிய ஜனங்களுக்கும் புலப்படக் கூடியதாயும் இருப்பதாகும். இந்த மூன்று பிரமாணங்களுள் பிரத்தியட்சப் பிரமாணமே மிகவும், சிறப்புடைத் தென்பது இதனால் புலப்படுகின்றதன்றோ? இவ்வுண்மை உணர்ந்தே நம் செந்தமிழ் மொழியை முதன் முதல் பாகுபடுத்திய அகத்தியமா முனிவர், இயற் றமிழென்றும், இசைத் தமிழென்றும், நாடகத் தமிழென்றும் முப்பிரிவாகத் தமிழைப் பிரித்து இலக்கணஞ் செய்வாராயினர். இம் மூன்றுள் ஒன்றாகிய நாடகத்தமிழின்கட் படுவதாம் பிரத்தியட்சப் பிரமாணம். நிற்க, நாடகத் தமிழைச் சரியானபடி கற்பதற்த தமிழ்ப் பாஷையின் இயல்பினை அறிந்துகொள்ள வேண்டுவது மிகவும் இன்றியமையா தாதலால் இயற்றமிழை முதலிலும், இசைத் தமிழ் நாடகத்தின் ஓர் அங்கமாக விருத்தலால் அதனை இரண்டாவதாகவும் கூறிக் கடைசியில் நாடகத் தமிழை உரைத்தார்.

ஆகவே, நாடகம் மக்களின் அறிவு விருத்திக்கு அவசியம் வேண்டற்பாலதாம் என்றும், இதுபற்றியே நாடகத் தமிழ் என்று அகத்தியர் தனியாக எடுத்துக்கொண்டு அதற்கு இலக்கணஞ் செய்வா ராயினர் என்றும், நம்மனோரிற் சிலர் கருதுகிறபடி நாடகம் புறம் பழிக்கப்படுதற்கும், கேவலமாக நினைக்கப்படுதற்கும் உரியதாகாமல் எல்லோராலும் போற்றக்கூடிய மாட்சிமையுடையதாக இருக்கிறதென்றும் ஏற்படுகிறது.

இனி, நாடகம் என்பதைப்பற்றிச் சிறிது கூறுவாம். பொருள்கள் இருவகைப்படும். அகத்தைச் சார்ந்துவரும் பொருளெல்லாம் அகப் பொருளென்றும், புறத்தைச் சார்ந்து வரும் பொருளெல்லாம் புறப் பொருளென்றும் கூறப்படும். மக்களின் அகத்தே நிகழும் நிகழ்ச்சிகளெல்லாம் புறத்தே அவர்



களுடைய சரீரத்தில் புலப்பட்டுத் தோன்றும் இயல்புடையனவாம். இது பற்றியே,

> "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
> கடுத்தது காட்டு முகம்."

என்று ஆசிரியர் திருவள்ளுவனாரும் கூறுவாராயினர். அங்ஙனம் அகத்தே நிகழும் நிகழ்ச்சிக்குத் தகப் புறத்தே காணப்படும் மெய்ப்பாடுகளை, வீரம், அச்சம், இழிவு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சாந்தம் என்னும் நவரசங்களும் பொருந்த சபையோர்களுக்கு நடித்துக்காட்டுதலே நாடகமாம். அங்ஙனம் நடித்துக் காட்டுதலினாலே ஜனங்களுக்குப் பலவகையான நீதிகள் புலப்படுவதோடு, ஒவ்வொன்றையும் பிரத்தியட்சத்தில் அப்போதுதான் பார்ப்பதுபோல் அவர்களுக்குத் தோன்றுவதால் தாங்கள்கண்ட காட்சியை அடிக்கடி நினைவுகூர்வார்கள். அவ்விதம் நினைவு கூரும்போதெல்லாம் அந் நாடகத்தால் புலப்பட்ட நீதிகளும் அவர்கள் மனத்தில் உடன் நிகழும். இவ்விதம் அடிக்கடி நிகழுவதால் மக்களின் அறிவு விரிந்து திகழவும், அவர்கள் நல்ல வழியிற் செல்லவும் ஏதுவுண்டாகும். இவ் வுண்மை யெல்லாம் உணர்ந்தே தமிழ் முதுமக்கள் பண்டைக் காலத்திலே நாடக மாடுதலை மிகவும் போற்றி வந்தார்கள். இன்னும் வடமொழியில் தலையாய புலவரெனக் கொண்டாடப்படும் காளிதாசர், "சாகுந்தலம்", "குமார சம்பவம்" முதலான நாடகக் காப்பியங்கள் இயற்றி யிருப்பதையும், ஆங்கிலபாஷா விற்பன்னரான ஷேக்ஸ்பியர் என்னும் மகா கவிஞர் எண்ணிறந்த நாடகங்கள் இயற்றியிருப்பதையும் உலகம் கொண்டாடுகிறதே!

இப்படியெல்லாம் நாடகத்தின் மாட்சியும், பெருமையும் ஒரு புறமமைந்து கிடக்க, அதனைக் கேவலமாயும், அருவருப்பாகவும் ஜனங்கள் கருதக் காரணமென்ன? இக்காலத்திலுள்ள சில போலி நாடக பாத்திரர்கள் நாடக இலக்கணப்படி நாடகம் நடத்தாமல், அவ் விலக்கணத்தினின்றும் வழுவித் தமக்குத் தோன்றியவா றெல்லாம் நடத்துவதன்றோ காரணம்? இங்ஙனம் இவர்கள் நாடகம் நடத்துவதால் அந் நாடகத்தைக் காணச் செல்லும், பாமர ஜனங்களை காமம், குடியாதிய படுகுழிகளில் விழச் செய்வதுடன் நாடகத்திற்கே அகௌரவத்தையும், இழிவையும் உண்டாக்கித் தங்களைப் பிறர் கேவலமாக நினைக்கும்படியாகவுஞ் செய்து கொள்ளுகிறார்கள். நாடக அலங்காரம் சிறிதும் இன்றிப் புராண இதிகாசத்தில் கூறப்படும் கதை வரலாற்றினுக்கு மாறாக எத்தனை நாடகக்காரர்கள் இக்காலத்தில் நாடகம் நடத்தி வருகிறார்கள்! பயனற்றதும், நீதியைப் போதிக்காததுமான நாடகத்தைக் காமாந்தகரமான ஆபாசப் பாடல்களால் நிரப்பி நடத்திக்காட்டும் நாடகதாரிகளுக்குக் கணக்குண்டோ! இவர்கள் நாடகத்தைச் சென்று பார்த்து எத்தனை வாலிபர்கள் மோசம் போனார்கள். இன்னும் எவ்வளவுபேர் மோசம் போய்க்கொண்டிருக்கிறார்கள்! கற்பினை அணிகலமாகக்கொண்டு வாழவேண்டிய எத்தனை பேதை மகளிர் தங்கள் ஒழுக்கக் தவறி நாசப்படுகுழியில் வீழ்ந்தார்கள்! அம்மம்ம! இவ்வளவு கெடுதிகளுக்குங் காரணமென்ன? நாடகக்காரர்கள் ஒழுங்கு தவறி நாடகம் நடத்துவதல்லவோ காரணம்? ஒழுங்காக முறைப்படி நாடகத்தை நடத்தினால் கெடுதல் உண்டாகச் சிறிதும் வழியே இல்லையன்றோ? அதனால் எவ்வளவோ நன்மை யுண்டாக மார்க்கமிருக்கிறது.

இனியேனும், நாடக அமைதிப்படி நாடகங்கள் முறையாக நடைபெற்று வருமென்றே எதிர்பார்க்கக் கூடுமோ?

# நவீன நாகரிக நாடக விநோதம்

(ஆரியூர் வ. பதுமநாப பிள்ளை)

நாடகம் குறுமுனிவர் வளர்த்த முத்தமிழுள் ஒன்று. இன்றைய தமிழ்நாட்டில் அது எந்நிலை உற்றிருக்கின்றது? காட்சி வாயிலாகக் களிப்பூட்டும் நாடகம், முத் தமிழுள் மூன்றாவதாக ஆன்றோரால் குறிக்கப்பட்டுளது. இயலும் இசையும்—அதாவது வசனமும் பாட்டும் கலந்து நாடகம் எழுந்தது. முன்னோரது சரித்திரங்களுள் மக்களுக்கு நற்புத்தி, கற்பிப்பனவற்றை நடித்துக் காட்டுவதே நாடகம் எனப்படும். இயல் இசை எனும் ஏனைய இரு தமிழ்களைப்போல் நாடகத் தமிழுக்குரிய நூல்களாகப் பண்டைக்காலத்தில் இயற்றப்பட்டவை எவையும் இக்காலத்தில் கிடைக்காமையாலும், தமிழ் மொழியில் தற்சமயம் இருந்துவரும் சிற்சில நாடகங்களும் இரண்டொரு நூற்றாண்டுகளுக்குள்ளாக இயற்றப்பட்டவை யாதலாலும், 'நாடகம்' என்பதே வடமொழி யாதலாலும் ஆரியர்கள் இத்தென் தமிழ்நாட்டில் புகுந்து இங்கிருந்தோருடன் கலந்து பழகிய பின்னரே, நாடகம் இந்நாட்டில் செழிக்கலாயிற்று என்பர் ஒரு சாரார். 'முத்தமிழும் நான் மறையும் ஆனான் கண்டாய்!'—எனச் சைவப் பெரியார் பாடிச் சென்றிருப்பதற் கிணங்க, நாடகத் தமிழ் என்ற ஒன்று இன்றேல், அதை முத்தமிழ்களுள் ஒன்றாக முன்னோர் மொழிந்திரார் என்றும், வடமொழிக் கலப்புச் சிறிதுமின்றி இலக்கியங்களனைத்தும் தனித் தமிழிலேயே இயற்றப்பட்ட பண்டைக்காலத்தில் நாடகம், 'கூத்து' எனும் செந்தமிழ்ச் சொல்லால் குறிக்கப்பட்டு வந்திருக்கின்றது என்றும், இடைக் காலத்தில் நாடகத்துறையில் சில கயவர்கள் செயலால் கிளர்ந்தெழுந்த சிற்றின்பக் கிளர்ச்சியின் பயனாக அத்துறையை அறிவிற் சிறந்தோர் கவனியாதொழிந்தமையால் அது கேவல நிலையை அடைந்துவிட்டதென்றும் கூறுவர் மற்றொரு சாரார். இவ் விருவரது கூற்றுகளுள், பின்னவர் கூற்றே ஆதரித்தற்கு உரியது.

"கூத்தாட்டவைக் குழாத்தற்றே செல்வம்; போக்கும் அது விளிந்தற்று" என்று திருவள்ளுவரும், "நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து நான் நடுவே—வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்"—என மாணிக்கவாசகரும் 'நாடகம்' அல்லது 'கூத்து' எனும் சொல்லை எடுத்தாண்டிருத்தலாலும், சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பழந் தமிழ் நூல்களில் காணப்படும் சில ஆதாரங்களாலும், 'நாடகம்' நந்தமிழ் நாட்டில் தொன்று

பேரெண்ணங்கள்—உயர்ந்த உணர்ச்சிகள்—சிறந்த செயல்கள் இவை உடையவனே முழுதும் வாழ்பவன். அதாவது வாழ்வின் முழு இன்பமும் துய்ப்பவன்.



தொட்டு நடைபெற்று வந்திருப்பதே எனும் உண்மை தெளியக் கிடக்கின்றது. மேலும், சைவ வைணவ சமயத் திருப்பதிகள் எல்லாவற்றிலும் தலைமை பூண்டு—அடைமொழி எதுவுமின்றி 'கோயில்' என்ற அளவிலேயே குறிக்கப் படுவன, தில்லை, திருவரங்கம் எனும் இரு திருப்பதிகளாகும். தில்லையில் திகழும் தெய்வம் ஆனந்தத் திருக்கூத்து ஆடி நிற்பதுகொண்டு 'நடேசன்' எனவும், மெய்யன்பர்கள் ஆடிப் பாடி ஆனந்திக்குமாறு ஆண்டவனது திருவருள் நர்த்தனம் செய்கின்ற இடமாதலின், பெரிய பெருமாள் திருக்கோயில் கொண்டு விளங்குவது 'திரு அரங்கம்' எனவும் இன்றும் போற்றப்பட்டு வருவது கவனிக்கத்தக்கது.

நூலாராய்ச்சியில் தலைப்பட்டுப் பலதிற உண்மைகளையும் உணர்ந்துகொள்ளப்போதிய ஓய்வு வாய்க்கப்பெறாதவர்களும், நூலாராய்ச்சியில் தலைப்படப் போதிய கல்வி யறிவில்லாதவர்களும் நன்முறையில் நடத்தப்படும் நாடகங்களைக் காண்பதால் நலங்கள் பல பெறுதல் கூடும். பாமர மக்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்தி அவர்களை நல்வழிப்படுத்த நாடகங்கள் பெருந்துணை செய்வனவாகும். தற்காலத்தில் கிராமங்கள்தோறும் அடிக்கடி நடைபெற்றுவரும் 'தெருக்கூத்துகள்' என்பன, 'நாடகங்கள்' என்று கூறப்படுவதற்குச் சிறிதும் தகுந்தனவாகா. நல்ல நாடகங்களுக்கு இருக்கவேண்டிய லட்சணங்களுள், சிறிதளவும் அத் தெருக்கூத்துகளில் கிடையா. அவற்றைக் காண்போரது அகங்களில் சிற்றின்பக் கிளர்ச்சி முதலியன விளையுமே யல்லது, அவற்றால் அன்னோர் எத்தகைய நற்பயனையும் எய்தார். இசை யின்பத்துக்கும் தெருக்கூத்துகட்கும், இமயமலைக்கும் இராமேசுவரத்துக்கும் இடையிலுள்ள தூரம் தான்! கர்ணனந்தமான பாடல்களுக்குப்பதிலாக கர்ண கடூரமான பேரிரைச்சல்தான்! அவற்றிலுள்ள பேரிழிவுகளை எடுத்து விளக்கித் திருத்த முயல்வது பயன்படாத வேலையாதலின், தற்காலத்தில் அறிஞர்களது நன்மதிப்பை ஓரளவு பெற்றுள்ள 'டிராமாக்கள்' எனப்படும் நவீன நாகரிக நாடகங்களில் காணப்படும் குறைகளை எடுத்து விளக்கித் திருத்த முயல்வது நற்பயன் நல்கக் கூடுமென எண்ணுவதால், இக் கட்டுரை எழுத முன்வந்தேன்.

மேல்நாட்டு நாகரிகம் இந்நாட்டில் பரவத்தொடங்கிய காலந்தொட்டு, அந்நாட்டு நாகரிக முறைகளைப் பின்பற்றி இந்நாட்டு நாடகங்களைச் சீர்திருத்த முன்வருவோர் பலராயினர். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்'—எனும் கொள்கையுடையவர்களாகவும் 'பகவத் பக்தி'யைச் சிறிதளவும் பொருட்படுத்தாதவர்களாகவும், ஆடம்பர வாழ்வையே விரும்பி நிற்பவர்களாகவும் இருந்துவரும் மேல்நாட்டாரால் நடத்தப்படும் நாடகமுறைகள், அவர்களுக்கு நேர்மாறான நிலையினராய இந்நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியன வல்ல. அந்நாட்டு நாகரிகம் வேறு: இந்நாட்டு நாகரிகம் வேறு. இரண்டின் நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்பனவாகும். ஆதலின், தமிழ்நாடக முன்னேற்றத்திற்குப் பாடுபட முன்வருவோர், மேல்நாட்டு நாடக முறைகளில் மோகம்கொள்வது கூடாது. அத்தகைய சீர்திருத்தத்தால் விளை

ஒருநாளும் திருப்தி செய்யமுடியாத மூன்று ஆசைகள் உள:—(1) இன்னும் வேண்டும் என்னும் செல்வர் ஆசை (2) வேறு ஏதேனும் வேண்டும் என்னும் நோயாளி ஆசை (3) வேறு எங்கேனும் போகவேண்டும் என்னும் யாத்திரிகன் ஆசை.

யக்கூடியன விபரீத பயன்களேயாம். இனி, தற்கால நாகரிக நாடகங்களில் காணப்படும் குறைகளை ஆராய்வோம்.

முதலில், படிப்போர் பரிகசிக்கக் கூடியவாறு எழுதப்பட்டுவரும் ஆடம்பர நாடக விளம்பரங்களை எடுத்துக்கொள்வோம்.

இன்றிரவு! இன்றியமையாத இன்பகரமான நன்றிரவு!!

அன்பர்களுக்கு ஆனந்தமூட்டும் நாடகத் திருவிழா!

வந்துவிட்டனர்! யார் வந்துவிட்டனர்!! வந்துவிட்டனர்!!!

தென்னிந்திய நாடகமேடை திரிமூர்த்திகளின் தோற்றம்!

வாருங்கள்! வந்து பாருங்கள்!! களி கூருங்கள்!!!! ஆசீர் தாருங்கள்!!!!

சென்னை கோல்டன் கம்பெனியார்

விழுப்புரம் கணபதி விலாச தியேட்டரில்

''சத்தியவான் சாவித்திரி''

எனும் சரித்திரத்தை அதிஅற்புத சீன்களுடன் வெகு விமரிசையாக

நடித்துக் காட்டுவார்கள்.

நாடகப் பிரிய நண்பர்களின் சந்தோஷத்தை முன்னிட்டு ஏராளமாக பொருட் செலவுசெய்து ஸ்பெஷலாக ஒரே நாடகத்திற்குமட்டும் வரவழைத்திருக்கும் ஜலப்பிரதேச மெங்கும் ஜயக்கொடி நாட்டி மகாராஜாக்கள் ஜமீன்தார்கள் பிரபுக்கள் முதலியவர்களால் அனேகம் பொன் வெள்ளி மெடல்கள் சன்மானிக்கப்பெற்ற உலகப் பிரசித்திபெற்ற

கிராமபோன் பிளேட் கவாய்

மிஸ்டர். தண்டபாணி செட்டியார்—கலியுக எமதர்மன்.

குயிலைப் பழிக்கும் குரல்வாய்ந்த அபிநய சிங்கார அமிர்த வசன கந்தர்வ கானலோல தென்னிந்திய நாடகமேடை இளவரசி இங்க்லீஷ் ப்யூட்டி—

மிஸ். கோகிலாம்பாள்—சிங்கார சாவித்திரி

சாதுர்ய சம்வாத சமத்கார கோகிலகான மிஸ். மந்தாரம்பாள்—பின் சாவித்திரி

சபாரஞ்சித சாதுர்ய வசனலங்கார சங்கீத வித்வசிரோமணி தென்னிந்திய நாடகமேடை இளவரசரான மாஸ்டர் கோவிந்தசாமி நாயுடு—சத்தியவான்.

உலகப் பிரசித்திபெற்ற இந்திய சார்லி சாப்ளியன்

மாஸ்டர். முத்துசாமி—மாடவ்யன்.

சுகசாரீர சங்கீத விற்பன்ன மிஸ்டர். ரத்தினசாமி—ஆர்மோனியம்.

கோடை இடி மிஸ்டர். பாலு—தபேலா.

நாடகங் காண கொட்டகையில் முன்னிடம் தேடுங்கள்.

* * * *

---

பிறர் துன்பத்தினும் பிறர் இன்பத்தினும் அனுதாபம் காட்டக்கூடிய அளவே நாம் அறநெறியில் முன்னேறுவதாகக் கூறமுடியும்.



''நரகலோகம் அடைந்து எமதர்மன் எதிரில் நிற்கும் காலத்தில் பார்த்துக்கொள்ளலாம், இப்பொழுதே 'பாவம்' 'பாவம்' என்று பயந்து சாவானேன்''—என்று இறுமாந்திருப்பவர்களே! உங்களை அடக்க படாடோப பயங்கர 'கலியுக எமதர்மன்' நாடகமேடையில் தோன்றி யிருக்கிறான்; எச்சரிக்கை! எச்சரிக்கை!! கந்தர்வ லோகத்திற்குப் பறந்து சென்று கந்தர்வகானம் கேட்டு ஆனந்தம் அடைவோமா என்று கனவு காண்பவர்கள், கேவலம் நான்கணா செலவழித்து டிக்கட் பெற்றால், சிரமமின்றி நாடகக் கொட்டகையிலேயே சாக்ஷாத் கந்தர்வ கீதானந்தத்தை அனுபவிக்கலாமே! 'இந்திய அழகு' போதாதென்று இங்கிலாந்திலிருந்து பெற்று வந்திருக்கும் 'இங்க்லீஷ் ப்யூட்டி'யைக் கண்டு களிக்கத் தவறலாமா! காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டாமா! சென்னை மாகாணத்திலுள்ள முக்கிய நகரங்களையே சரிவர பார்த்தறியாத 'இந்திய சார்லி சாப்ளின்' மாஸ்டர். முத்துசாமி—உலகப் பிரசித்தி பெற்ற கீர்த்தி உடையவரானது எவ்விதமோ?

* * * *

இனி 'பிரமிப்பை உண்டாக்கும்படி பிரத்தியட்சமாய் பிரகாசிக்கும் அற்புதம் மிக்க சீன்கள்'—என்று நோட்டீஸ்களில் குறிப்பிட்டவைகளைப்பற்றி கவனிப்போம்.

''வத்ஸலா கல்யாணம்'' எனும் நாடகம் ஒன்றைச் சமீபத்தில் யான் காணநேர்ந்தது. சகுனிமாமாவோடு துரியோதனன் அந்தரங்கமாக ஆலோசனை செய்யும் காட்சியில், சென்னை ஹைகோர்ட்டு கட்டடமும் மின்சார விளக்குக் கம்பங்களும் லைட் ஹவுஸும் வரையப்பட்டுள்ள தெருப்படுதா விடப்பட்டிருந்தது. அந்தரங்கமாக ஆலோசனை செய்யப்படும் இடம், பலர் சஞ்சரிக்கும் நடுத்தெருவே போலும்! பலராமன் அரண்மனைக் காட்சியில் நவீன நாகரிகம் முதிர்ந்த பிரபுக்கள் வீட்டிலிருப்பன போல—நிர்வாணமான பலவித 'லேடி'களின் உருவச் சிலைகளும் படங்களும் வரையப்பட்டுள்ள திரைவிடப்பட்டிருந்தது! அவற்றை எழுதுவித்த கம்பெனியாருக்கு, ஆங்கிலேய லேடிகள் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்னரே இந்தியாவுக்கு வந்துவிட்டனரென்பது அபிப்பிராயம் போலும்! மற்றொரு காட்சியில், மேடைக்கு நடுவில் அடர்ந்த காட்டுப்படுதா விட்டிருக்க, பக்கப் படுதாக்களில் பாதி மரங்களின் திரைகளும் பாதி தர்பார் சீனுக்குரிய தூண்களின் திரைகளுமாக விளங்கின! நடுக்காட்டில், தர்பார் மண்டபத்திற்குரிய தூண்கள் எவ்விதம் ஏற்பட்டனவோ தெரியவில்லை! இதுபோன்ற 'சீன்கள்' எத்தனை எத்தனையோ? ஒன்றுக்கொன்று முரண்பட்ட இத்தகைய விபரீதமான காட்சிகள் காண்பிக்கப்படுவது விரைவில் அகற்றப்பட வேண்டும். அவற்றை 'அற்ப விஷயங்கள்' என எண்ணிவிடக்கூடாது. அற்ப விஷயங்களே பெருந் தவறுகளாகிப் பலரும் பரிகசிக்கக்கூடியனவாக மாறிவிடும். ஆதலின், இவ்விஷயத்தில் தென்னிந்திய நாடகக் கம்பெனியார் அனைவரும் தக்க கவனம் எடுத்துக்கொண்டு, படுதாக்கள் பக்கத்திரைகள் ஆசனங்கள் முதலியவற்றை அவ்வக் காட்சிகளுக்குப் பொருந்தும் முறையில் ஏற்பாடு செய்வார்களாக.

---

ஆராய்ச்சியால் விளையும் ஆனந்தம் வேண்டுமா? அப்படியானால் நெஞ்சு நுண்ணிய விஷயங்களில் முற்றிலும் லயித்துப் போவதால் உண்டாகும் ஆனந்தத்தை அது கொள்ளை கொண்டுவிடும்.

தற்கால நாகரிக நாடகங்களில் தோன்றும் நடிகர்கள் உடை உடுத்தும் விதம், பெரிதும் இரங்கத்தக்க நிலையிலிருக்கின்றது. உதாரணமாக, ஒரு வருஷம் இரண்டு வருஷங்கள் அல்ல—முப்பது வருஷங்களாக—ஒவ்வொரு மாதத்திலும் ஒரு முறையாவது தவறாது 'இராமபிரானாக' நடித்துவரும் பிரசித்தி பெற்ற பெரிய ஆக்டர் ஒருவர்; அவர் நடிக்கும் கம்பெனியின் தலைவரும் அவரே! நாட்டைவிட்டுக் காட்டுக்குப் புறப்படும் காட்சியில், இராமபிரான் வேடம் பூண்டு தோன்றிய அப் பிரபல நடிகர், கால்களில் சரிகை வைத்துத் தைத்த வெல்வெட் ஜோடுகளும், முழங்கால்வரையில் பளபளவென்று மின்னும் சரிகை தைத்த மஞ்சள் பட்டுக் கால்சட்டையும், கைகளில் இரண்டு ஜதை கொலுசுகளும், மெல்லிய தங்க வளையல்களும், முழங்கைகளில் வங்கிகளும், மார்பில் சிவப்பு வைரம் முதலிய கற்கள் பதிக்கப்பெற்ற நகைகளும், கழுத்தில் முத்துமாலைகளும், செவிகளில் வைரக் கடுக்கன்களும் அணிந்து கல்யாணப் பந்தலில் காதலிக்குத் தாலிகட்டத் தயாராக வந்துநிற்கும் புது மாப்பிள்ளையே போல் மேடைமீது தோன்றினார். போதாக் குறைக்கு தலைமயிரைத் தைலமிட்டு ஒழுங்காகச் சீவி 'கிருஷ்ணன் கொண்டை'யாக முடித்து மல்லிகை மலர்ச் சரங்களாலும் அக்கொண்டையை அழகாக சுற்றிக் கட்டிக்கொண்டிருந்தார்! இராமபிரான் தன்னை அவ்வளவு சிங்காரித்துக்கொண்டு சீதையிடம் விடைபெறச் செல்வதானால் அவருக்கு அயோத்தியைவிட்டு ஆரணியம் செல்ல மனம் வருமா? பதினான்கு வருஷங்கள் அடவியில் அம்மஞ்சள் பட்டை அழுக்குப்படாமல் காப்பாற்றியிருக்க முடியுமா? வைர நகைகளைக் கண்டு காட்டில் அவருக்கு கௌரவம் கொடுப்போர் எவர்? தினந்தோறும் ஒழுங்காகச் சீவி 'கிருஷ்ணன் கொண்டை' முடித்துக்கொள்ள தைலத்துக்கும் சீப்புக்கும் எங்கே போவது?

அதே ஆக்டர் 'அரிச்சந்திர நாடக'த்தில் மயானக் காட்சியில் தோட்டியாகத் தோன்றியபோது கருப்புத் துணிக்குப் பதிலாக உயர்ந்த 'சம்கி' வைத்துத் தைத்த நீல வெல்வெட் அரைக்காற்சட்டையும் கம்பளத்திற்குப் பதிலாக சரிகைப்பூக்கள் தைக்கப்பெற்ற உயர்ந்த சால்வையும், மார்பில் தங்க மெடல்களும், கையில் மூங்கில் தடிக்குப் பதிலாக வெள்ளிப் பூண்போட்ட தடியும் பூண்டு தோன்றினார். மயானத்தில் காவல் காக்கும் அரிச்சந்திர தோட்டிக்கு அவ்வலங்காரங்கள் மிகவும் அவசியமானவையே அல்லவா?

ஒரு கம்பெனியில் எவர் பெரிய ஆக்டரோ அவர் எந்தக் காட்சியில்—எந்த வேஷத்தில்—தோன்றினாலும் உயர்ந்த உடுப்புகளையே உடுத்திக் கொண்டிருக்க வேண்டும் போலும்! தோட்டி வேடத்தில் தோன்றினாலும், கரிய துணி அணிந்தால் கௌரவம் போய்விடுமென்பது அவர்களது எண்ணம் போலும்! என்னே நமது நவீன நடிகர்களின் பேதமை இருந்தவாறு! அலங்கரித்துக் கொள்வதற்கு ஒரு வரம்புண்டென்பதையும், வேஷங்களுக்குப் பொருந்தாத சிங்காரம் பரிகாசத்திற்கே இடமென்பதையும் கவனித்து நடந்து கொள்ளுமாறு அந் நடிகர்களைப் பெரிதும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

---

**ஒருவர் தர்க்கவாதம் தவறாது அறிவிற்கு ஒத்தவண்ணம் போதனை செய்யலாம். அவர் கூறுவதில் பிழையொன்றும் இல்லாமல் இருக்கவும் கூடும். ஆயினும் அவரால் பிறர் ஒழுக்கத்தைத் திருத்தவோ அல்லது பிறர்க்கு உன்னத லட்சியத்தில் அவாவும் ஊக்கமும் உண்டாக்கவோ இயலாது.**



இனி, நவீன நாடக நடிகர்களின் சங்கீதத்தைச் சற்று கவனிப்போம். கர்நாடகத் தெருக்கூத்துகளில் காணப்படாத சங்கீதம்—நவீன டிராமாக்களில் இருந்து வருவது ஓரளவில் பாராட்டத் தக்கதே. எனினும், அது வரம்பு மீறிச் சென்று விட்டிருக்கின்றது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கின்றது. சங்கீதத்தில் கொஞ்சம் தேர்ந்தவர்கள் கதாநாயகனாகவோ கதாநாகியாகவோ தோன்றிவிட்டால், பாவம் அவர்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டி வருகிறது! அரவு கடித்திறந்து கிடக்கும் தன் மகனது பிணத்தைக் கண்டு அகம்பதறி, அவன்மேல் வீழ்ந்து சந்திரமதி கதறிப் புலம்பும் காட்சி, அவ்வேடம் பூண்டு மேடைமீது தோன்றிய ஆக்டரின் வாயிலிருந்து, முதலில் ஆத்திரம் மிக்க வார்த்தைகள் எவையும் கிளம்பவில்லை; அதற்குப் பதிலாக ராகம் பிசகாமல் தாளம் தவறாமல் கீர்த்தனைகளாகவே அவ்வாக்டர் பாட ஆரம்பித்துவிட்டார். பின் ஒருவாறு தேறிய அவள்(ர்), மகனை எடுத்துக்கொண்டு சுடலைக்குச் செல்லத் தொடங்கிய சமயத்தில் 'சோகரஸம் ததும்ப' ஒரு பாட்டு பாடினாள்(ர்). அந்த ரஸத்தை அனுபவித்து ஆனந்தித்த சபையாரிடமிருந்து 'ஒன்ஸ்மோர்' 'ஒன்ஸ்மோர்' என்ற கூச்சல் பலமாக எழுந்தது. உடனே, சபையாரைத் திருப்திப்படுத்த வேண்டி கையில் வைத்துக் கொண்டிருந்த பொம்மைப் பிள்ளையை கீழே வைத்துவிட்டு—ஆர்மோனியப் பெட்டியருகில் வந்து நின்றுகொண்ட அவள்(ர்) முன்பு பாடிய பாட்டையே பாடத் தொடங்கிவிட்டாள்(ர்)!

பின்னர் கார்பணமும் முழத்துண்டும் தன்னை விலைக்கு வாங்கிய வேதியரிடத்திலிருந்து பெற்றுவரப் புறப்படும் காட்சி நேர்ந்தது. அப்பரிதாபகரமான சந்தர்ப்பத்திலே, சபையினிடமிருந்து 'தேயிலைத் தோட்டம்' என்று ஒரு குரல் கிளம்பியது; மற்றொருவர் அதைத் தொடர்ந்து 'தேயிலைத் தோட்டம்' என்று கூவலானார். பின்னர், படிப்படியாக 'தேயிலைத் தோட்டக் கூக்குரல்' அதிகமாயிற்று. பாவம்! அவ்வாக்டர் என் செய்வார்? பின்,

> "தேயிலைத் தோட்டத்திலே—பாரதச்
> சேய்கள் சென்று சென்று மாய்கிறார் ஐயையோ!
> —தேயிலைத் தோட்டத்திலே"

என்று பாடத் தொடங்கிவிட்டார்! திரேதாயுகத்தில் வாழ்ந்த சந்திரமதிக்கு, கலியுகத்தில்—இலங்கைத் தோட்டங்களில் ஏழை மக்கள் படுந்துயரம் எவ்வாறு தெரிந்ததோ? சந்திரமதியும் சோதிடத்தில் தேர்ந்த அம்மையார் போலும்!

'மனோஹரன்' நாடகத்தில், சங்கிலி அறுக்கும் காட்சியில்—அடங்காப் பெருஞ் சீற்றம் கொண்டு தன்னைப் பிணைத்திருந்த சங்கிலிகளை அறுத்துக் கொண்டு சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தந்தையைத் தன்னோடு போராட வருமாறு வீரவாசகம் பேசும் வேளையில், பத்மாவதி தோன்றி மனோஹரனது கோபத்தை நீக்க அவனது கையைப் பிடித்துக்கொண்டு பாடத் தொடங்கவும்,

---

**மனிதர்க்குப் பேருணர்ச்சி தந்து போருக்கு நடத்திச் செல்லும் மூன்று மொழிகள்—கடவுள், நித்யத்வம், கடமை என்பன. முதல் விஷயம் அறிவிற்கு அப்பாற்பட்டது; இரண்டாவது நம்பமுடியாதது; மூன்றாவது ஒருகாலும் அலட்சியம் செய்யமுடியாதது.**

அவனும் அதற்குப் பதிலாக பாடத் தொடங்கிவிடுவது இன்றும் பல நாடகக் கம்பெனிகளிலும் நடிக்கப்பட்டுவரும் காட்சிகளுள் ஒன்ருகும். மிக்க விரைவில் முடிக்கப்பட வேண்டிய அக்காட்சியில், பக்க வாத்தியங்களுக்கு இணங்க இருவரும் பாடிக்கொண்டிருப்பது எவ்வளவு விபரீதம்!

சங்கீத வித்வான்கள் நாடக மேடைகளில் நடிகர்களாகத் தோன்றிவிட்டாலோ, தமது சங்கீதத் திறமையைச் சபையோர் கண்டு வியந்து சிரக்கம்பமும் கரகோஷமும் செய்யும்படி நாடகத்தோடு எவ்வித சம்பந்தமும் இல்லாத 'ஐயரவாள் கீர்த்தனைகள்' முதலியவற்றைப் பாடத் தொடங்கி, 'ச-நி-தா ரி-க-மா-ப-த-நீ-க-மப-த-ம-ப-சநி-சநி-ரி-க-ம-ப' என்று ஸ்வரம் பாடத் தொடங்கிவிடுகின்றனர். அந்த ஸ்வரஞான ஆவேசத்திலே, தாங்கள் வேஷம் பூண்டு நாடகமேடைமேல் நிற்பதையும் மறந்தவர்களாய், ஆர்மோனியக்காரர்கள் தடுமாற்ற மடையுமாறு "போட் மெயில் வேக"த்தில் பாடிக்கொண்டே எழும்பி எழும்பிக் குதிக்கின்றனர். அவர் பாட்டு முடிந்ததோ இல்லையோ, சபையில் கிளம்பும் சந்தோஷ ஆரவாரம் சொல்லத்தாமல்ல! சபையினர் கரகோஷம் செய்து தமது அபார ஸ்வரஞானத்தை மெச்சிப் பேசுவார்களாஞல், அச்சங்கீத வித்வான்களுக்கு அதுவே போதும்! அதன்பொருட்டு எவ்வளவு உரத்துக் கத்தவும் என்ன வேண்டுமாஞலும் பாடவும் அவர்கள் எப்பொழுதும் சித்தமாக இருக்கின்றனர்!

பெரும்பாலும், தற்காலத் தமிழ்நாடக மேடைகளில் சிற்றின்ப சம்வாதங்கள் இல்லாத நாடகங்கள் நடிக்கப்படுவது அபூர்வம்! நந்தஞர் முதலிய பக்திரஸம் ததும்பும் நாடகங்களில் கூட, பறையர்கள் தம் மனைவிகளொடு கைகோத்துக்கொண்டு மிகுந்த ஆபாசமான பாடல்களைப் பாடிக் குதிப்பது போன்ற காட்சிகளைச் சேர்த்துவிட்டிருக்கின்றனர். தசரத கைகேசி சம்வாதம்-சூர்ப்பநகா ராம சம்வாதம்—கிருஷ்ண கோபி சம்வாதம் முதலியவற்றில்-தற்கால நவீன நாகரிக நடிகர்கள் நடித்துவரும் விதம் மிக விபரீதமாகும்! என்னே காலத்தின் கோலம்! பக்தி வீரம் கருணை அற்புதம் சோகம் பயங்கரம் ஹாஸ்யம் முதலிய ஏனைய ரஸங்களைவிட, சிற்றின்பந்தாஞ பிரதான ரஸம்? 'ச்ருங்கார ரஸத்'துக்கும் ஒரு வரம்பு உண்டல்லவா?

"காம ஸுந்தராங்கி எனது காதலோங்கியே மனம் உருகுது; அறிவாய் இனி";
"சப்ரமஞ்சம் அலங்கரித்து, கோலாகல லீலை செய்திட வாராய்"—

என்றெல்லாம் பாடுவதுதாஞ சிறந்த நடிகர்களின் லட்சணம்? உயிரோடு தொடர்புடைய உயரிய உண்மைக் காதலை விட்டு, கேவலம் மதன லீலைகளில் தலைப்பட்டு மதிமயங்கிக் கிடக்கும் காமத்தை பகிரங்கமாக நடித்துக் காட்டுவது எவ்வளவு விபரீதங்கட்கு இடஞகக் கூடும்! இவ்வாறு நடிப்பதாலும் பாடுவதாலும் நாடகத் தமிழுக்கேயல்லவா கெட்ட பெயர் ஏற்பட்டுவிட்டது! வள்ளி திருமணம், அல்லி அர்ஜுனு முதலிய நல்ல நாடகங்களில் பாடப்படுவனவே அத்தகைய பாடல்களாயின், சதாரம், தாராசசாங்கம், டம்பாச்சாரி முதலியவற்றின் ஆபாசப் பாட்டுகளை என்னென்பது? செந்தமிழ்நாட்டு

---

உலகில் பெரியார் ஒருவர் தோன்றிஞல் அவரை நாம் அறிந்துகொள்வதற்குரிய அடையாளம் மூடர் அனைவரும் அவருக்கு விரோதமாகக் கூடி வேலை செய்வதே.



18753

நவீன நாகரிக நடிகர்காள்! இனியேனும் அத்தகைய ஆபாசப் பாடல்களை-விபரீத சிங்காரப் பாட்டுகளை-அறவே அகற்றிவிட்டு, அகத்தை மாசுபடுத்தாத-களங்கமில்லாத-சீரிய பாடல்களையே பாடி வருவதென்று ஒவ்வொருவரும் உறுதி செய்துகொள்வீர்களாக.

பண்டைக்காலத்துச் சீரிய நாடகங்கள் சில, மிக்க விபரீதமாக மாற்றப்பட்டு நடிக்கப்பட்டு வருவது பெரிதும் வருந்தத்தக்கதாகும். உதாரணமாக, பாரிஜாதபுஷ்பஹரணத்தில் ருக்மிணி வேடம் பூண்டு தோன்றும் நடிகர்-சத்யபாமையுடன் வாதிடத் தொடங்கி,

"பேச்சறிந்து பேசு—பலமாகும் இந்தக் கேசு"

என்று பாடுகிருர்; அவ்விருவரும் கல்விமணம் சிறிதுமில்லா வாய்ப்பட்டிகளான பாமரப் பெண்கள்போல, வாயிஞல் கூறக் கூசும் ஆபாசமான இழி மொழிகளால் ஒருவரையொருவர் திட்டிக்கொள்ளுகின்றனர். இறுதியில் பாமையை ருக்மிணி எட்டி உதைத்துச் செல்கிருள். அந்தோ! என்னே விபரீதக் காட்சி! பதிபக்தியில் தலைசிறந்த பதிவிரதா சிரோமணியாகிய ருக்மிணிப் பிராட்டியாரின்மீது அத்தகைய விபரீதப் பழியைச் சுமத்தி நடிப்போர், கண்ணபிராஞல் எவ்வண்ணம் தண்டிக்கப்படுவர் என்பதைக் கூறவும் வேண்டுமோ? பத்தினிக் கடவுள் எனப்படும் கண்ணகி, தனது கணவனை காவலன் உண்மை அறியாது கொல்வித்தான் என்ற செய்தி கேட்டதும், அரசவையை அணுகிப் பாண்டியன் இழைத்தது பெரும்பிழை என்பதை அவனுக்கு நிரூபித்துக்காட்டிய மறுகணமே, அம்மன்னன், 'யானே அரசன் யானே கள்வன்' என்று கூறிப் பெரிதும் இறங்கியவஞய் அரியாசனத்தினின்றும் வீழ்ந்து ஆருயிர் துறந்தான்'—என்பது பண்டைய சிலப்பதிகாரக் கதை. இக்காலத்தில் நடிக்கப்படும் கோவலன் நாடகத்திலோ, கணவனது மரணச்செய்தி கேட்ட மறுகணமே, கண்ணகி உக்ரவீர மகாகாளிதேவியாகவே மாறிவிடுகின்ருள்! கையில் சூலம் பிடித்துக் கோரவடிவம் கொண்டு அரசவையை அடைந்து, 'பழிக்குப் பழி கொடடா! பழிகாரப் பாண்டியனே!' என்று பாடிக்கொண்டே மன்னனைத் தரையில் வீழ்த்தி அவன்மீது உட்கார்ந்துகொண்டு அவனது வயிற்றைக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாகத் தரித்துக்கொள்ளுகின்ருள்! வஞ்சிபத்தன்-துன்மந்திரி எனும் இருவரையும் அவ்வாறே கொல்கின்ருள்! தெய்வமே! என்ன விபரீதக் காட்சி இது! இத்தகைய விபரீதப் பெரும்பழியைத் தமிழ்நாட்டுப் பத்தினித் தெய்வமான கண்ணகி மீதும் சுமத்தத் துணிவுகொள்வது எத்துணைக் கொடுமை! எவ்வளவு அறியாமை!

சிற்சில நாடகங்களில் வீரம் சோகம் கோபம் முதலிய ரஸங்கள் வாய்ந்த காட்சிகள் தோன்றும்போது, தமது முழு சக்தியுடனும் மிக்க உரத்த குரலில் வசனங்களைக் கத்துவது சிறந்த நடிகர்களுக்குப் பேரிழுக்காகும்; மிகுந்த ஆடம்பரமாக நடிப்பது அறியாமையேயாம். எதற்கும் ஒரு வரம்பு உண்டு. இவ்விஷயத்தில் ஆங்கில நாடகச் சக்ரவர்த்தியான ஷேக்ஸ்பியரது பின்வரும் அமுதமொழிகளைத் தத்தம் அகத்தில் பதித்துக்கொள்ளுமாறு தற்கால நடிகர்களை வேண்டுகின்றேன்.

---

ஒருபொழுதும் ஜயம் அறியாதவரே ஜயம் மிக இனியது என்பர்.

"உங்களுள் பலர் கூறுவதுபோல் வசனங்களை வாய்விட்டுக் கத்துவீராயின், அதைவிட நான் எழுதியிருந்தவைகளை நகரங்களில் பறைசாற்றும் வெட்டியானைக்கொண்டு விளம்பச்செய்ய விரும்புவேன். இடிபோல் முழங்கிச் சண்டமாருதம்போல் வெளிக்கிளம்பும் உமது ரௌத்திரம் முதலிய ஆவேசங்களிலும், ஓர்வித அடக்கத்தை வகுத்தவராய் அத்து மீறாமல் ஒழுங்கை உடையவராக இருத்தல் வேண்டும். அர்த்தமில்லா அபிநயங்களையும் ஆரவாரக் கூச்சல்களையுமே அதிகமாக விரும்பும் அற்ப ஜனங்களின் செவிகள் செவிடுபடும்படி கத்துவதைக் காணுந்தோறும் என் மனம் புண்ணுகின்றது. வரம்பு மீறிச் செல்வது நாடகமாடுவதன் தாத்பர்யத்துக்கே முற்றிலும் விரோதமாகும்."

நாளுக்கு நாள் புதிது புதிதாகப் புறப்பட்டுவரும் 'வர்ணமெட்டு'களில் நாடகம் காண்போரும் நடிகர்களும் கொண்டுள்ள பெருமோகத்தால், புதிது புதிதாக புனையப்பட்டு நாடக மேடைகளில் தற்சமயம் பாடப்பட்டுவரும் பாடல்களில் காணப்படும் பிழைகள் எண்ணிறந்தனவாக இருக்கின்றன. இராமாயணம் பாரதம் முதலிய புராதன சரித்திரங்களுக்கு, பொருத்திய மிக மிகச் சிறந்த பொருள்கள் பொதிந்த பழங்காலக் கீர்த்தனைகளும் கவிகளும் பற்பல இருந்தும், அவற்றை முற்றும் கைவிட்டுவிட்டு நூதனமாகப் பாடப்பட்டுவரும் கீதங்களில் நல்லின்பம் உண்டாகாததோடு, அவை பலதிறப் பிழைகள் உடையனவாகவும் உள. தற்கால நாடகப் பாடல்களை சிறந்த முறையில் சீர்திருத்தவேண்டுவது, தமிழ்நாட்டுப் புலவர்களுடைய சிறந்த கடமையாகும்.

ஒரே மேடையில்-ஒரே நாடகத்தில்-ஒரே பாத்திரத்தை மூன்று நான்கு நபர்கள் பூண்டு மாறி மாறித் தோன்றுவது பரிகசித்தற்கு உரிய ஒரு பெருங் குறையாகும். உதாரணமாக, 'பாரிஜாத புஷ்பஹரணம்' என்ற நான் கண்ட நாடகமொன்றில், கிருஷ்ண வேஷம் பூண்டு ஒருவர்பின் ஒருவராகத் தோன்றினோர் முதலில் பதினான்கு வயதுடைய சிறுவனும் இரண்டாவதாக இருபது வயதுடைய இளைஞனும் மூன்றாவதாக பன்னிரு பருவமுடைய பாலனும் நான்காவதாக பதினாறு வயதுடைய சிறுவனும் ஆவர். 14!-20!-12!-16! கண்ணபிரானின் பருவ வளர்ச்சியின் விநோதத்தைக் கண்டீர்களா? கண்ணபிரான் முதலில் சிறுத்து திடீரெனப் பெருத்து மீண்டும் சிறுத்து மறுபடியும் வளர்ந்தனன்போலும்! 'வள்ளி திருமண'த்தில் முருகவிருத்தராகத் தோன்றியவன், பன்னிரு பருவமுடைய சிறுவன்! பன்னிரு வயதிலேயே விருத்தாப்பியம் வந்துவிடக்கூடிய அவ்வளவு ஈன நிலைக்கு இன்னும் நம் இந்திய மக்கள் வந்துவிடவில்லையே! இத்தகைய விபரீதங்களை எல்லாம் கவனியாதவர்கள், எப்படித்தான் நாடகமாடத் துணிவு கொண்டார்களோ? ஈசனே! இத்தகைய பெருங் குறைகளைக் கண்டறிந்தும் களிப்போரிடத்து என்னென இரக்கம் கொள்வதோ?

முற்காலத்தில் பெண்மணிகளும் அரங்கங்களில் தோன்றியதாகக் காவியங்களில் காணப்படுவது உண்மையே. அவர்கள் நடித்தது நர்த்தன சாலைகளிலேயேயன்றி நாடக மேடைகளில் அன்று. அவ்வாறு நடித்தோரும் விலைமகளிரேயன்றி குல மகளிர் அல்லர். இக்காலத் தென்னிந்திய நாடக மேடைகளிலே, நடிகர்களாகத் தோன்றி-அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு

நீதிதான் உலகத்தில் மனிதனுக்குத் தேவையான விஷயங்களில் சிறப்புடையதாகும்.



எனும் பெண்மைக்குரிய பெருங்குணங்கள் நான்கையும் உதறித் தள்ளிவிட்டு, காமக்கிளர்ச்சியை எழுப்பக்கூடிய சிற்றின்பப் பாடல்களைக் கூசாது பாடி, ஆடவருடன் சமமாகவும்-சில சமயங்களில் ஆண்வேடமும் பூண்டும் நடித்து வரும் மாதர்களை என்னென்பது? அத்தகைய விபரீத நடிப்பால் விளையக்கூடிய-என்?—விளைந்து வருகின்ற பலவிதத் தீமைகளையும் பன்னி உரைக்குங்கால் பாரதமாம். இறைவன் அளித்தருளிய—'பெண்மை-தாய்மை-இறைமை'—என்று படிப்படியாக வளர்ச்சிபெற்றுவரும் மாண்பு வாய்ந்த-பெண்மையின் பெருமையை இனியேனும் உணர்ந்து நாடகமேடைகளினின்றும் விலகிக்கொண்டு, தாய்நாட்டு முன்னேற்றத்திற்கேற்ற சிறந்த பணிகளில் தலைப்படுமாறு நாடகத்துறையில் தலைப்பட்டுள்ள செந்தமிழ் நாட்டுப் பெண்மணிகளைப் பெரிதும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

செந்தமிழ் நாடு இன்று உள்ள நிலையிலே, காண்போரது அகத்தில் தீவிர தேச பக்தியை ஊட்டக்கூடிய சீரிய நாடகங்களை நடத்துவதால் பெரும் பயன் விளையும். தற்காலத் தமிழக நாடக சபையினர், தமது தாய்நாட்டுக்குத் தற்சமயம் செய்யவேண்டிய சீரிய தொண்டு அதுவே. அத்தகைய சீரிய நாடகங்கள் பெருகிவருமாறு இறைவன் இன்னருள் செய்வானாக.

செந்தமிழ்நாட்டு நாடகப்பிரிய நண்பர்களே! சிரோமணிகளே! தமிழறிஞர்களே! தாய்நாட்டின் முன்னேற்றத்தை நாடும் தேசபக்தர்களே! இதுகாறும் கூறிவந்தவற்றை நன்கு ஆராய்ந்து, உள்ள உண்மைகளைக் கவனித்து, தற்காலத் தமிழகத்தின் முன்னேற்றத்திற்கேற்ற சிறந்த நன்முறைகளில் தற்கால நாடகத் தமிழைச் சீர்திருத்திப் புதுக்கிச் சிறப்புற வளர்த்து-தமிழ்த் தாயின் தண்ணருளுக்கும் குறுமுனிவரின் இன்னருளுக்கும் உரியவர்களாகி உய்ந்திடுமாறு உங்களெல்லோரையும் பெரிதும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அரங்கநாயகனும் நாடகத் தெய்வமாம் நடராசனும் உங்கட்கு திரு வருள் பொழிவார்களாகுக. திருவருள் முன்னிற்க. வந்தேமாதரம்.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.

நாம் கண்டு அடைய முடியாததைத் தேடவே பிறந்துள்ளோம். ஆனால் அதைத் தேடுவதிலேயே அந்தமில் இன்பம் அமைந்துள்ளதாகும்.

# மேனாட்டு விழுச் செல்வம்

(போ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

1 உண்மையில் பெருங்கடல் நம்மால் அறியப்படாமல் பரந்து கிடக்கின்றது. நாமோ கடற்கரையில் விளையாடி, அங்குமிங்கும் ஓடி, அழகான ஒரு சிப்பியையும் மெல்லிய ஒரு கடற்பாசியையும் கண்டு மகிழ்ந்து நிற்கும் சிறு குழந்தைகளைப்போல் இருக்கின்றோம். ஆவ்பரி.

2 நயனம் ஒன்று சொல்ல நாவொன்று சொல்லின் விஷயம் அறிந்தவன் நயன மொழிகளையே நம்புவான். எமர்ஸன்.

3 அரண்மனையில் வாசம் செய்தாலும் எதைப் பார்த்தும் ஆனந்திக்க முடியாதிருப்பதைவிட, ஒரு சிறு குடிசையில் வாசஞ் செய்தாலும் அரண்மனையைக் கண்டு ஆனந்திக்கக் கூடியதாயிருப்பதே பேரின்பம் தருவதாகும். ரஸ்கின்.

4 எந்தக் காரியமும் தவறாயிருப்பதால் நம்மை இழிவாக்கி விடுவதில்லை; இழிவாக்குவதாலேயே தவறாய் விடுகின்றது. ஆவ்பரி.

5 தீயொழுக்கத்திற்குக் கட்டுப்பாடில்லை என்று நினைப்பது தவறு. தீயவனே எஜமானர்கள் அனைவரிலும் கொடிய எஜமானனுக்கு அடிமையாயிருக்கின்றான். அக் கொடிய எஜமானன் யார்? அவனுடைய சொந்த தீய உணர்ச்சிகளே. ஆவ்பரி.

6 “செல்வம்”—போதுமான அளவானால் உன்னை அது தூக்கிச் செல்லும். அதிகமான அளவாய்விட்டால் நீதான் அதைத் தூக்கிச் செல்லவேண்டும்; ஸாதி.

7 எல்லோரும் நேரமில்லை என்று குறை கூறுகின்றோம். ஆனால் நாம் என்ன செய்வதென்று அறியாத அளவிற்கும் அதிகமாகவே உடையோம். நாம் நம் வாழ்வை ஒன்றும் செய்யாதிருப்பதில் அல்லது உபயோகமுள்ளதைச் செய்யாதிருப்பதில் அல்லது செய்யவேண்டியதைச் செய்யாதிருப்பதில் கழிக்கின்றோம். ஸெனீக்கா.

8 நம் வாழ்நாள் அற்பம் என்று எப்பொழுதும் வருந்துகின்றோம். ஆனால் அதற்கு முடிவில்லாதது போலவே காரியங்களைச் செய்துகொண்டு போகிறோம். ஸெனீக்கா.

9 ஆரோக்கியத்திற்கு உயர்ந்த ஐஸ்வர்யம் இல்லை. மனக்களிப்பிற்கு உயர்ந்த மகிழ்ச்சி இல்லை. “பைபிள்”

---

கடவுளை அறிதல்—கடவுளிடம் அன்பு செலுத்தல் இரண்டிற்கும் இடையிலுள்ள தூரம் எவராலும் இவ்வளவு என்று இயம்ப இயலாது.



10 ஒருபொழுதும் சோம்பலாய் இராதே. எப்பொழுதும் உபயோகமான காரியம் எதையேனும் செய்துகொண்டே இரு. எப்பொழுது வேலையின்றி இருக்கிறோமோ அப்பொழுது காமம் எளிதில் புகுந்துவிடும். தேகசுகம் உள்ளவன் சோம்பலாயும் சுகஜீவியாயும் இருந்துவிட்டால் அவன் கற்புடையவனாயிருத்தல் ஒருநாளும் இயலாது. காமம் என்னும் பேயைத் துரத்தற்கேற்ற வேலை சரீர வேலையேயாகும். அதைப்போல் உபயோகமானதும் பலனளிப்பதும் வேறொன்றுமில்லை.
ஜெரிமி டெய்லர்.

11 ஒருவனுக்கு ஆகாரம் அளிப்பதைவிட அதைத் தானே தேடிக்கொள்ள வழி காட்டுவதே முக்கியம். உதவி செய்வதைவிட உதவி பிறர்க்குச் செய்யக் கற்றுக் கொடுப்பதே நலம். ஆவ்பரி.

12 எந்தச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உதவியாயும், எப்பொழுதும் வாழ்நாளில் இன்பம் தருவதாயும், துன்பங்களுக்கெல்லாம் ஒரு கேடயமாயும் இருக்கும் ஒரு சுவையை நான் வேண்டிப் பிரார்த்திப்பதானால் “நூல் கற்கும் சுவை”யையே விரும்புவேன். ஒருவனுக்கு இந்தச் சுவை கிடைத்து அதை அனுபவிக்க வேண்டிய சாதனங்களும் பெற்றுவிட்டால் அவன் ஆனந்தமாயிருக்க ஒரு நாளும் தவறான். ஹெர்ஷல்.

13 மனிதன் ஒரு நாணலேயாவன். உலகில் பலவீனத்திலும் பலவீனம் உள்ளவன். ஆனால் அவன் “யோசிக்கும் நாண”லாவான். அவனை அழிக்க அண்டம் அனைத்தும் திரண்டு வரவேண்டியதில்லை. ஒரு துளி நீர் போதும். ஆனால் உலகமே அவனை அழிக்க நேர்ந்தாலும் அவனே உலகத்தைவிட உயர்ந்தவனாவான். ஏனெனின் அவன் தான் இறப்பதாய் அறிவான். உலகமோ அவனை அழிக்கும்பொழுதுகூட தன் ஆற்றலை அறியாது. பாஸ்கல்.

14 விலங்குகளுக்கு உணர்ச்சி மட்டுமே உண்டு; மனிதனுக்கு மட்டுமே அறிவு உண்டு என்று நாம் பெருமை பேசிக் கொள்கின்றோம். ஆயினும் நாம் பெருமை பேசும் நம் மறிவு மக்கட்குப் பெருக்கியுள்ள இன்பம் எவ்வளவு சிறியதாகும்! ஆவ்பரி.

15 ரோஜாச் செடியில் முள் இருக்கின்றது என்று முறையிடாதே. முட்செடியில் மலர் உளதென்று மகிழ்வாயாக. ஆவ்பரி.

16 உண்மையான செல்வம் நாம் எதை உடையோம் என்பதில் அன்று; நாம் எதுவாய் இருக்கின்றோம் என்பதிலேயே அடங்கும். ஆவ்பரி.

17 கடைசிச் சோதனை யாது? நாம் எவ்வளவு உடையோம் என்பதன்று. நாம் எவ்வளவு முயன்றோம் என்பதே யாகும். வாழ்வில் ஜயம் அடையத் தகுதியுடையவரா யிருந்தோமா என்பதேயாகும். ஆவ்பரி.

18 இன்பமாயிருக்க மட்டும் விரும்பினால் அது எளிதில் முடியக்கூடிய காரியம். ஆனால் நாம் பிறரைவிட அதிக இன்பம் பெறவே விரும்புகின்றோம். அது எப்பொழுதும் கடினம். ஏனென்றில் நாம் அவர்கள் உண்

---

எல்லாம் செயற்கைப் பொருள்களே. இயற்கையும் இறைவனால் செய்யப்பட்டதே.

மையிலேயே அனுபவிக்கும் இன்பத்தைவிட அதிகமாய் அனுபவிப்பதாக நம்பிக் கொள்கின்றோம். மான்டெஸ்க்யூ.

19 இறுதியில் லட்சியத்தை அடைவிக்கும் காரியங்களைச் செய்தால் மட்டும் போதாது. செய்யும் ஒவ்வொரு காரியமுமே ஒரு லட்சியமாயிருத்தல் வேண்டும். கதே.

20 நம்மிடமுள்ளதாக நாம் பாசாங்கு செய்யும் குணங்களைப்போல், நம்மிடமுண்மையாகவே யுள்ள குணங்கள் ஒரு பொழுதும் நம்மை நகைப்பிற்கிடமாக்குவதில. லரோஷிவக்கல்டு.

21 இதுவே நான் சாமர்த்தியத்திற்குக் கூறும் இலக்கணம். ஆண்டவன் அந்தரங்கத்தில் அளித்தது. அதை நாம் அறியாமல் பகிரங்கப்படுத்திவிடுகிறோம். மான்டெஸ்க்யூ.

22 மங்கையர் நிழலில் மட்டுமே மணந்தரும் மலர் ஒப்பர். லாமனே.

23 அனுமதேயமாய்ப் பிறரைப் பழிப்பவன் ஒருவரும் அறியாத தன் சொந்தப் பெயரை ஒவ்வொருவரும் சூட்டும் "கோழை" என்னும் பெயராய் மாற்றிக் கொள்கின்றான். பெடிட்—ஸென்.

24 வயிறு உபதேசம் ஒன்றிற்கும் செவி சாய்ப்பதில்லை. அது கெஞ்சும், கூச்சலிடும். ஆயினும் அது கல் நெஞ்சுள்ள கடன் கொடுத்தவனை ஒப்பதன்று. அதற்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டால் போதும். கொடுக்கக்கூடியதை எல்லாம் கொடுக்க வேண்டுமென்பதில்லை. சிறு தொகையைப் பெற்றும் திருப்தி அடைந்துவிடும்.
ஸெனீக்கா.

25 இறந்தகாலம், எதிர்காலம் இரண்டும் முகம் மூடியிருக்கும். ஆனால் இறந்தகாலம் தரிப்பது விதவையின் முகமூடி. எதிர்காலம் பூண்பது கன்னியினதாகும். ஜீன் சால் ரிக்டர்.

26 மது மயக்கம் தானாகத் தேடிக்கொள்ளும் பயித்தியமே தவிர வேறன்று.
ஸெனீக்கா.

27 எப்பொழுதும் மிதமாகப் புகழ்தல் மத்திய மதியினரைக் காட்டும் பெரிய அடையாளம். வாவனார்கூஸ்.

28 மொழிகள் எண்ணங்களுக்கு எப்படியோ அப்படியே நற்குணத்திற்கு உபசாரம். ஜௌபர்ட்.

29 உத்தம செயல்களை மனமுவந்து போற்றுதல் ஓரளவு அவைகளை நம்முடைய சொந்தமாக்கிக் கொள்வதாகும். ரோஷிவக்கல்டு.

30 உன் தகுதி பிறர்க்குத் தெரியவேண்டுமானால் பிறர் தகுதியை நீ அங்கீகாரம் செய்.

---

மனோ தைரியம் இன்றேல் வாய்மையும் இல்லை. வாய்மை இன்றேல் பிற அறங்களும் இல.



31 காது நல்லதைத் தவிர வேறெதையும் அறிவிற் சேர்க்கா வண்ணம் எல்லாவித விஷயங்களையும் கேட்கப் பழகிக்கொள்ளல் நலம்.
எராஸ்மஸ்.

32 சிலர் தங்கள் வாழ்நாள் முழுவதும் படிக்கின்றனர். இறப்பதற்குள் எல்லாவற்றையும் கற்றுத் தீர்த்துவிடுகின்றனர்—யோசனை செய்வதைத் தவிர. டோமெர்கு.

33 எல்லா அம்சங்களிலும் உண்மையான உபதேச மொழிகள் சிலவே.
வாவனார்கூஸ்.

34 சுவையறிவு இல்லாத கற்பனா சக்தியைப்போல பயங்கரமான தொன்றுங் கிடையாது. கதே.

35 நமது குறைகளில் சில உடன்பிறந்தவை. பிற கல்வியின் பயன். இவற்றில் எவை அதிக இன்னல் அளிப்பன என்பதே கேள்வி. கதே.

36 ஆன்மாவிற்கு உடல் ஒரு சமயம் தடை, ஒரு சமயம் கருவி, எப்பொழுதும் விட்டுப் பிரியாத தோழன். ஐம்புலன்கள் ஆன்மாவின் சிறையன்று. ஆன்மா உலகத்தோடு உறவாடுதற்கு அமைந்த சாளரமாகும்.
விக்டர் கஸின்.

37 கடவுளுண்மையைக் கணிதசாஸ்திர நிரூபணத்திலும் அதிகமாய் நிரூபித்துக் காட்ட, பரிபூரண நிலையில் ஆன்மாவிற்குரிய சிறிய அவாவே போதும். ஹெம்ஸ்டர்ஹூஸ்.

38 ஆன்மாவிற்கு வெளியே கடவுளைத் தேடினால் கடவுளின் விக்கிரகங்களை மட்டுமே காண்பாய். ஆன்மாவை ஆராய்ந்தால் அங்குள்ள உணர்ச்சிகளும் எண்ணங்களும் ஆண்டவனை அறிவிக்கும்.

39 நரகம் என்பது வேறெங்குமில்லை. நன்றாய் ஆராய்ந்தால், அது பாவமேயாகும். கடவுளினின்று பிரிந்திருப்பதே நரகம். பாஸ்ட்.

40 சரியாய் மெச்சக் கற்றுக்கொள். வாழ்வின் பேரின்பம் அதுவே. பெரியோர் மெச்சுபவைகளைக் கவனி. அவர்கள் பெரிய விஷயங்களை மெச்சுவர். தாழ்ந்தோர் இழிவான விஷயங்களை மெச்சுவர், வணங்குவர்.
தாக்கரே.


41 நண்பனிடம் அன்பு செலுத்துவது சுவரில் தங்காது திரும்பிவரும் பந்தைப்போலன்றி இலட்சியத்தில் தைக்கும் அம்பைப் போலிருக்கட்டும்.
குவார்லஸ்.

42 வீண் சொற்கள் விஷயங்களை வியர்த்தமாக்குகின்றன.
பிஷப் ஆண்ட்ரூஸ்.

---

சினம் என்பது உண்மையாகவே நம்மைச் சிறிதுபொழுது பிடித்தாட்டும் பைத்தியமே யாகும்.

# சுதந்தரப் பள்ளு.



ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோமென்று (ஆடு)

1. எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு—நாம்
எல்லாரும் சமமென்ப துறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத் தோதுவோமே (ஆடு)


2. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம் (ஆடு)

3. நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையா மென்பதறிந்தோம்—இந்தப்
பூமியி லெவர்க்கு மினி அடிமை செய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம் (ஆடு)

—பாரதியார்.

---

நன்மை செய்ய முயலுதல்—நன்மை இதுவென்று காண முடிதல்—இரண்டில் கடினமானது எது ?




## ஏழுமலையின் தத்துவம்.

(பண்டித. பூ. ஸ்ரீநிவாசன்.)

கடந்த மாதவிதழில், "ஏழுமலை யென்றொருமலை யுண்டு. அதற்குத் திருவேங்கடமலை முதலிய வேறு பெயர்களுமுண்டு. எல்லாத் தேசங்களினின்றும் எண்ணிலா யாத்ரீகர் இடைவிடாது வந்த வண்ண மாகவே யிருப்பர். அவர்களால் உண்டியில் போடப்படும் பணமோ அளவற்றது. அங்கு முடி கொடுத்தலும் பணம் செலுத்துவதுமே முக்கிய பிரார்த்தனைகளென்றெண்ணி அவ்வாறே செய்வது சனங்களின் வழக்கம். இத்தகைய பிரார்த்தனைகள் ஈசுவரனுக்குகந்த செயல்களாகா வெனினும் இம்முறைகளையே கற்றோரும் மற்றோரும் கைக்கொண் டொழுகுகின்றனர். இவை எப்போது யாரால் வகுக்கப்பட்டன வென்பது அறியக்கூடவில்லை. முற்காலத்து ஆழ்வாராசாரியர்களால் கையாளப்பட்டு வந்ததாகக் கருதச் சிறிது மிடமளிக்காத விச்செயல்கள் பரமபதநாதன் அருள் பெறற்கேற்ற செயல்களாகா. பக்தியொன்றே அவனருட்பேற்றிற்குச் சாதனமாயுள்ளது. வழக்காற்றிலுள்ள இம்முறைகள் ஆன்றோரது உண்மைக் கருத்தினை யுள்ளவா றறியாமையால் ஏற்பட்ட தவறான வழக்கங்க" ளென்று சுருங்கக் கூறினோம். இனிப் பிற விஷயங்களைப்பற்றியும சிறிதாராய்வோம்.

பொதுவாகத் தீர்த்த யாத்திரைகளையும் க்ஷேத்திர யாத்திரைகளையும் ஏற்படுத்திய ஆன்றோரின் நோக்கம் யாதாமென வாராயுமிடத்து, பல்வே றிடங்களுக்குச் சஞ்சாரஞ் செய்வதால் ஆங்காங்குள்ள அற்புதங்களையும், அவ்வவ் விடங்களிலுள்ள ஜனங்களது நடையுடை பாவனைகளையும், இயற்கை செயற்கை யமைப்புக்களையும், கைத்தொழில், விவசாயவிருத்தி, வியாபார முறைமை முதலிய விஷயங்களையும் அறிந்து, லோகானுபவமும், அறிவு முதிர்ச்சியும் பெற்று, தேசாபிவிருத்தி, பாஷாபிவிருத்தி, மதாபிவிருத்திகளுக்கேற்ற காரியங்களைக் கடைப்பிடித்தொழுகு மாற்றல் மாந்தர்க்குண்டாகுமென்பதே யாத்திரா முறையை வகுத்த ஆன்றோரின் முக்கிய நோக்கமாதல் வேண்டுமென்பது புலனாகும். வடகோடியின்கணுளதாகிய காசிப்பதியையும், தென்கோடியின்கணுளதாகிய இராமேச்சுவரத்தையும் சிறந்த புண்ணிய க்ஷேத்திரங்களாக வமைத்து, 'காசிராமேசுவர யாத்திரை' என வழங்கும்படி

---

இருதயமே (அன்பே) பெரிய எண்ணங்களின் பிறப்பிடம்.

இருபெயர்களையு மிணைத்து, ‘எல்லா யாத்திரைகளினுஞ் சிறந்தது இந்த யாத்திரையே; இந்த யாத்திரை செய்வோர் சர்வபாவங்களினின்றும் நீங்குவர்’ எனப் பயனையும் வகுத்திருப்பதைப் பொறுமையோடு சிந்திப்போர் இந்த முடிவுக்கு வராமலிருக்க முடியாதென்பது திண்ணமாம். காசியையும் இராமேசுவரத்தையும் இணைத்து விட்டதனால் இடையிலுள்ள க்ஷேத்திரங்களனைத்தும் உள்ளடங்கி விடுமன்றோ? நிற்க,

க்ஷேத்திர வமைப்புக்களும் ஆலயவமைப்புக்களும், அண்டபிண்ட (அண்டம்=உலகம்; பிண்டம்=சரீரம்) வியல்புகளி னொற்றுமைகளையும், ஆன்ம தத்துவத்தையும் கற்பிக்கும் கல்விச்சாலைகளே யென்பது ஆன்றோர் அபிப்பிராயமாம். உதாரணமாக; சரீரத்துள்ளவைகளாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆறாதாரங்களுக்கியைய, உலகத்திலும் திருவாரூரை மூலாதார க்ஷேத்திரமாகவும், திருவானைக்காவைச் சுவாதிட்டானமாகவும், திருவண்ணாமலையை மணிபூரகமாகவும், சிதம்பரத்தை அநாகதத்தலமென்றும், திருக்காளத்தியை விசுத்தியென்றும், காசியை ஆக்கினை யென்றும் ஆன்றோர் வகுத்திருத்தலை நோக்குவோமாயின், மேற்கூறிய விஷயமே பெரியோர்களபிப்பிராயமாதல் வேண்டுமென்னு மெண்ணம் உறுதிப்படும்.

ஆயின், அவர்கள் (பெரியோர்) இவற்றை ஏன் வெளிப்படையாகக் கூறியிருத்தலாகாது? மறைபொருள்களாக வமைப்பின் சாமானியர் அறிந்து கொள்ளல் சாத்தியமாமோ? எனின்: இத்தகைய தத்துவங்கள் சாமானியரால் அறியத்தக்கவையாகா. எவ்வளவு கூறினும் இவற்றை யுணருமாற்றல் அவர்களுக் குண்டாகாது. இது நோக்கியே, மாந்தரது பல திறப்பட்ட பக்குவ நிலைக்கேற்பச் சரியை முதலிய பல நெறிகள் வகுக்கப்பட்டன. அன்றியும் கடவுள் கொள்கையும், பக்தியும் யாவர்க்கும் அடிப்படையாக அமைய வேண்டியவைகளாகும். இவையுண்டான பின்னரே ஏனையவை எளிதிலெய்தும். பக்திப்படியி லடியிட்டோர் எவ்வகையாலேனும் இலக்கை யெய்தாதொழியார். ஆகலின் வீடு பேற்றிற்கு இன்றியமையாததாகிய பக்திநெறியை யாவருள்ளத்தும் நன்கு பதியுமாறு செய்யவேண்டியது முதற்கடமை யென்னு முண்மையையறிந்தே முன்னோர் அதற்காகப் பலநெறிகளையும் வகுத்துப் போந்தனர். அந்நெறியைப் பின்பற்றி ஈசுவரபக்தியாகிய எழிலார்ந்த மாளிகையிற் பிரவேசிப்போர்க்கு அதற்குள்ளிருக்கும் மற்றைய இரகசியங்களையும் அறிந்து கொள்ளச் சமயம் வாய்க்காமற் போகாது. அம்மாளிகைக் குள்ளிருக்கும் இரகசியக் காட்சிகளைக்காட்ட ஓராள் அங்கு அவசியம் கிடைப்பான். ஆனால் அந்த ஆளை மிக்க அக்கரையோடு தேடல் வேண்டும். அங்ஙனம் தேடிக்கண்டடைந்து அவனை யடுத்தால், அவன் எல்லாக் காட்சிகளையும் இனி துணர்த்திக்கொண்டேசென்று, முடிவில் முடிவான காட்சியையு மறிவிப்பான். அவனே குரு. இதனையே தாயுமான சுவாமிகளும்

“மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொல்லச் சற்குருவும் வாய்க்கும்”

என்னும் அமுதமொழிகளால் அருளிப்போந்தார். இத்தகைய பல காரணங்க

தன் விருப்பத்திற்குக் குறைவாய் அடைந்துள்ளவன் தன் தகுதிக்கு அதிகமாய் அடைந்திருப்பதாய் அறியக்கடவன்.



ளால் ஆன்றோர் பல நெறிகளை நியமித்தன ரென்றறிந்து அவற்றைக் கடைப்பிடித்தொழுக வேண்டியது நமது கடமை யென்பது அறியக் கிடக்கின்றது. தவிர யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தா விஷயங்களில் சுருதியின் அபிப்பிராயம் அது வெளிப்படையாகக் கூறுவதற்கு வேறாயிருக்க வேண்டுமென்று நுண்ணறிவால் யூகித்துணர்வோமாயின், அங்கும் அவரவர் மனோபாவத்திற்கும் பரிபாகத்திற்கும் கல்வி யறிவிற்கும் ஏற்றவாறு பல இரகசியார்த்தங்களை வேதமாதா வுணர்த்துவாள் என்பதையும் நாம் காணலாம். உதாரணமாக: சாமவேதத்திலுள்ள ‘தத்துவமசி’ மகாவாக்கியத்தை எடுத்துக் கொள்ளுவோம். இவ்வாக்கியமொன்றே துவைதிகளுக்கும், விசிஷ்டாத்துவைதிகளுக்கும், அத்துவைதிகளுக்கும் தத்தம் மதாசாரமாகப் பொருள் தந்து நிற்கின்றதன்றே! எனவே, எத்தனை வழிகளில் பொருள் கொண்டாலும் அத்தனை வழிகளுக்கும் அவ்வாக்கிய மிடமளிக்கின்றது. இதனால் எல்லா வழிகளும் கொள்ளத்தக்கவையே யென்பது வேதமாதாவின் கருத்தாமென்று நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இன்றேல், வேதவாக்கியம் குற்றத்தின்பாற்பட்டதாகும். எவ்வாறெனின்: மேற்காட்டிய ‘தத்துவமசி’ மகாவாக்கியம் மயங்க வைத்தல் என்னுங் குற்றமுடையதாகுமன்றோ? அதாவது தன் பொருளைத் தெளிவாகக் காட்டாமல் இதன் பொருள் இதுவோ? அதுவோ?’ வென மயங்கும்படியாகச் செய்யும் குற்றம் இவ்வாக்கியத்தில் காணப்படுகின்றதன்றோ? இவ்வாறு சந்தேகிக்கக்கூடிய விடந்தான் வேதத்தில் முக்கிய பாகமாகும். ஆகவே, அங்கு நன்கு ஆராய்வோமாயின் அதன் உள்ளக்கிடக்கை தெள்ளிதிற் புலனாகும்.

இத்தகைய நெறியில் க்ஷேத்திரங்கள் ஆலயங்கள் முதலியவற்றின் அமைப்புக்களைக் குறித்தும் ஆராயின் அவற்றினுண்மைப்பயனை அடைபவராவோம். அவ்வாறின்றி மேற்புல் மேய்ச்சலாக நோக்குவோமாயின், அவற்றினுண்மைத் தத்துவம் வெளியாகாது. அது வெளியாகாதபோது ‘ஆலயம் வேண்டாம் க்ஷேத்திரம் வேண்டாம். இது மூடத்தனம் இது மூடக்கொள்கை’ என்னு மெண்ணந்தோன்றி நாசவேலையில் நுழைத்து விபரீதத்தை விளைத்து விடும். எனினும், அனுஷ்டிப்போரின் அறியாமை காரணமாக மூடப்பழக்க வழக்கங்கள் பல பல்கிக்கிடக்கின்றன வென்பதும், உண்மை கைவிடப்படவே பயனற்ற காரியங்கள் தலைவிரித்தாடத் தொடங்கி விட்டன வென்பதும் உண்மையேயாயினும், சாரத்தையும் அசாரத்தையும் எடுத்துக்காட்டி, அசாரத்தை விட்டுச் சாரத்தைக் கடைபிடித்தொழுகுமாறு செய்தல் வாயிலாக, இன்றியமையாத இந்நெறிகளைப் பெருங்கருணையோடு வகுத்த முன்னோரின் நன்னோக்கத்தைச் செம்மைப் படுத்துவதும் அறிவுடையோரது பெருங்கடமையாம். நிற்க,

இனி, ஏழுமலையின் தத்துவமென்ன? எந்த நோக்கத்தை யடிப்படையாகக்கொண்டு ஏழுமலையின் வழிபாடு ஏனைய வழிபாடுகளினுஞ் சிரேஷ்டமாக அமைக்கப்பட்டது? என்னும் விஷயங்களை யாமாயுமிடத்துப் பின்வரும் உண்மைகள் அறியப்படும்.

நமக்கு ஒரு விளக்குத் தேடிக்கொள்ள பிறன் ஒருவனுடைய நெருப்புக்குச் செல்லுதல் நலமே; ஆனால் நமக்காக ஒரு விளக்கு கொளுத்திக் கொள்ளாமல் அயலான் நெருப்பருகே வெகு காலம் தாமதித்தல் நலமன்று.

கர்மகாண்டி உபாசனாகாண்டி ஞானகாண்டி என ஆஸ்திகர் முப்பகுப்பினராகப் பகுக்கப்பட்டிருக்கின்றனர். கர்மமும் உபாசனையும் ஞானசாதனங்கள். ஞானம் மோக்ஷசாதனம். எனவே, ஞானமே மோக்ஷசாதனமாயினும் அந்த ஞானவடைவிற்குக் கர்மமும் உபாசனையுமாகிய சாதனங்கள் அத்தியாவசியமாய் வேண்டப்படுவனவாம். ஆகவே, இவற்றுள் ஞானம் மோக்ஷத்திற்கு நேர்சாதனமும் ஏனையவை பரம்பராசாதனங்களுமாம். இவ்விருவகைச் சாதனங்களையும் முக்கியமாகவும் கௌண (அமுக்கிய) மாகவும் ஒருங்கே யுணர்த்துதலே எழுமலையி னமைப்பின் கருத்தாகும்.

முன்னர் மொழிந்தவாறு நமது சரீரத்தில் ஆறு ஆதாரங்களிருக்கின்றன. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவாம். இவற்றுள் மூலாதாரத்திற்குக் குதமும், சுவாதிட்டானத்திற்குக் குய்யமும், மணிபூரகத்திற்கு நாபியும், அனாகதத்திற்கு இதயமும், விசுத்திக்குக் கண்டமும், ஆக்ஞைக்கு லலாடமு (நெற்றியு)ம ஸ்தானங்களாம். ஆக்ஞைக்குமேல் ஏழாவது ஸ்தானமாகிய ஸஹஸ்ராரம் என்னும் பிரஹ்மரந்திரம் இருக்கின்றது. இது பிரஹ்மஸ்தான மெனவும் கூறப்படும். யோகிகள் ஆறாதாரங்களின் வழியாக மேலேறிச்சென்று ஸஹஸ்ராரத்தை யடைந்து ஆங்குப் பிரஹ்மத்தைத் தரிசித்து அதனுடன் ஐக்கியப்பட்டு நிற்பார்கள். எனவே, யோகிகள் நெற்றியின் மேலுள்ளதாகிய ஏழாமிடமாகிய பிரஹ்ம ஸ்தானத்தில் கூடஸ்த பிரஹ்மத்துடன் ஐக்கியப்பட்டு நிற்கும் நிலை (ஜீவன்) முத்தி நிலையாகும். அப்பியாச முதிர்ச்சியால் இவ்வாறு நிற்கப்பழகுவோர் வீடுபேற்றிற் குரியவராவர். எழுமலையில் விளங்கும் பரமாத்மாவை அவ் வேழுமலைகளையுங் கடந்துசென்று காணவேண்டும் எனக் கூறும் யோகியர் நிலையை இவ்வேழுமலை விளக்கிக் காட்டுவதாகும்.

"சேரணி நுதலின்மீது சென்றுகாண் யோகிபோல

.........................................

ஏரணி நிலைகளேழ்மேல் நிகழ்வெளித்தலி சமைத்தான்"

எனவும்,

"நுதல்மிசை யிலகு நிட்களம்போல நுவன்ற ஏழாநிலையாகு

மதன்மிசை."

எனவும் பிரபுலிங்க லீலை கூறுகின்றது. திருவேங்கடத்தும் அப்பனுறைவிடம் மலையின்மேலின்றி மலைக் கப்பாலுள்ள வெளியான விடத்தி லமைந்திருத்தலும் ஈண்டறியத் தக்கதாம்.

மேற்காட்டப்பட்ட தத்துவம் யோகியர்க்கேயன்றி ஏனையோர்க்குப் பயன் தாராததா யிருத்தலின், ஏனையோர்க் கெவ்வகையி லுபயோகமா மெனின் கூறுவாம்.

ஞானயோகத்தை யனுஷ்டிப்போர்க்கும் எழுமலை உண்மைவழி காட்டியாகும். ஞானிகளும் பிரஹ்ம வடிவ ஆன்மாவைத் தரிசிக்க வேண்டுமாயின்

---

அறிஞர் செய்யும் மூடக் காரியங்கள், சாமார்த்தியர் கூறும் அதிக்கிரமச் சொற்கள், சான்றோர் இழைக்கும் கொடுமைகள் இவைகளே புரட்சி யுண்டு பண்ணுவன.



எழுமலை கடந்தே தரிசிக்கவேண்டும். அவர்கள் கடக்கவேண்டிய எழுமலைகள் உடம்பு, பொறி, நாற்கரணம், உயிர் என்பனவாம். இம் மலைகளைக் கடந்து செல்வோரே பரந்தாமனது (பரம்—மேலான, தாமம்—இடம்) பாதாரவிந்தங்களைத் தரிசிக்கும் பேற்றினை யெய்துவர் என ஞான நூல்களின் கருத்தையும் எழுமலை எடுத்துக் காட்டுகின்றது.

"காரண வுபாதி யேழ்மேற் கண்டிடு ஞானிபோல."

எனவும்,

"உடம்பொடு பொறி நாற்கரணமற் றுயிரென்

றுரைத்திடப் படுமுபாதிகளைக்

கடந்துள நிலையிற் சோதியா யிலங்கக்

கண்டிடு துரியன்."

எனவும் துறைமங்கலம்—சிவப்பிரகாச சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதும் இக் கருத்துப்பற்றியேயாம். எனவே, ஞானமார்க்கத்தை மேற்கொண்டொழுகுவோரும் உபாதிகளாகிய மலைகளுக் கப்பாலுள்ள மகாதேவனை வணங்குதல்வேண்டும் என்னும் பொருளையும் எழுமலை தனக்குள்ளடக்கிக் காட்டுவதாகும்.

அன்றியும், ஞானத்தைப் பெறாத வழி சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ முத்தியை யடைவது முடியாதென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததோர் விஷயமாம். அந்த ஞானமார்க்கத்தையே இம்மலை குறிக்கின்றது. ஞான பூமிகளை ஏழென வகுத்து ஞான நூல்கள் நவில்வது ஈண்டாராயத் தக்கதாம்.

ஞான பூமிகள் சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தா பாவனை, துரியம் என ஏழாம். இவற்றுள்,

(1) உலகப்பற்றி லுழலு மொருவனுக்கு மோக்ஷத்தை யடைதற் கேதுவாய ஞானத்தைப் பெறுதல் வேண்டுமென்னு மெண்ணம் உண்டாவதே சுபேச்சை யெனும் முதற் பூமியாம். இந்தச் சுபேச்சையே முதல் மலையாகும். இதில் ஏறுவது மிகவும் கஷ்டம். யாவரும் 'மோக்ஷமடைய முயலவேண்டும்; ஞானம்பெற முயலவேண்டும்' என அடிக்கடி எண்ணலாம். ஆனால் அவ் வெண்ணத்தினிடத்து உறுதியாக நிலைத்து நிற்பதுதான் துர்லபமான காரியம். ஏறவிடாதபடி தடுப்பதற்குப் பல தடைகளுண்டு. "மெய்ஞ்ஞான மோனத்தில் நிற்கவென்றால் முற்றாது பரிபாக சத்திக ளனேகம்" என்றார் தாயுமானவரும். அத்தடைக ளனைத்தையும் அழித்துச் செல்லும் தீரனாகவிருந்தாலன்றி அம் மலையி லேறுதல் முடியாது. அதில் ஏறிவிட்டால் மற்ற மலைகளைக் கடப்பது சுலபமே. இதனையே கைவல்லிய நவனீதத்தாரும் "முதற்பூமி கிடைப்பதுவே வருத்தம் மைந்தா!" என்றார். இதனையே திருவேங்கட மலையிலுள்ள முதல் மலை குறிப்பிக்கின்றது. பொதுவாகவே ஞான

---

கடவுள் ஒருவருக்குத்தான் போதுமான நேரமுண்டு. ஆனால் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளத் தெரியும் அறிஞனுக்கு தனக்குத் தேவையான காலத்தைத் தேடிக்கொள்ளச் சக்தி உண்டு.

சப்த மலைக ளேறுவதுபோல வேறு கஷ்ட மொன்றுமில்லை யென்றே சொல்லலாம். பிரஹ்மப் பிரயத்தனம் எனப்படுவது இதுவேயன்றோ!

(2) இச்சை யுண்டானபின் அதற்குவேண்டிய முயற்சிகளைச் செய்தல் இரண்டாவது மலையாகிய விசாரணையாம்.

(3) ஆசாரியனை யடைதல், உபதேசம் பெறுதல், அவ்வுபதேச மொழிகளை விசாரித்தல், உண்மை யறிதல் என்னு மிவ்விரண்டாவது மலையிலிருந்து உபதேச நெறியில் நிற்றற்பொருட்டு மனத்தை யடக்குதல் மூன்றாவது மலையாகிய தனுமானசியாம்.

(4) மனத்தை யடக்கி ஆத்மானுசந்தானம் செய்தல் நான்காவது மலையாகிய சத்துவாபத்தியாம்.

(5) ஆத்மானு சந்தானத்தா லுண்டாகும் ஆனந்தத்தில் நிலைத்து நிற்றலே ஐந்தாவதாகிய அசம் சத்தியாம்.

(6) காண்பான் காட்சி காட்சிப் பொருள் என்னும் திரிபுடியற்ற நிலையே ஆறாவது மலையாகிய பதார்த்தா பாவனை. (பதார்த்தங்களின் தோற்ற மறுதல் பதார்த்தாபாவனை. இதுவே 'முழங்கால் முறிச்சான்' எனப்படுவது. முழங்கால் முறிந்தால் போவதெங்கே? பதார்த்தங்களின் தோற்ற மில்லாவிட்டால் உலக மெங்கே?)

(7) சகஜ சமாதி நிலையே துரிய பூமியாம்.

என்றிவ்வாறு ஞானசப்த பூமிகளின் நிலை நூல்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

எனவே, இந்த ஞானசப்த பூமிகளிலேறிச் செல்வோரே ஸ்ரீநிவாசனை யடைந்து இன்புற்று வாழும் நிலையை யெய்துவர் என்பதைக் காட்டுவதே ஏழுமலையின் தத்துவமாம். ஏறுதலின் அருமையை விளக்கவே மலை யமைக்கப்பட்டிருக்கின்றதெனவறிதல் வேண்டும்.

இதுகாறும் ஏழுமலைக ளெவை யென்பதைக் குறித்துச் சிறிது விளக்கினோம். இனி, சேஷன் மலையுருவா யிருக்கின்றானென்பதைப்பற்றிச் சிறிது விளக்குவோம்.

சேஷம் என்பதற்கு மிகுதி என்பது பொருளாம். அது இங்கு அறியத் தக்கவைக ளெல்லாமழிந்த பிறகு அழியாமல் மிகுந்திருப்ப தெதுவோ அதனைக் குறிக்கும். அவ்வாறிருப்பதுதான் மாயை. சேஷன் என்னும் பெயர் மாயையைக் குறிப்பதாகும். அது உலக காரணமா யிருத்தலின் ஆதிசேஷனும். அந்த மாயையி னிடத்தேதான் பெருமா னெழுந்தருளி யிருக்கின்றான். பெருமானைக் காணவிரும்புவோர் அந்த மாயையைக் கடந்து சென்றால்தான் சேவிக்க முடியும். 'மாயை யெனும் திரை நீக்கி நின்னை யாரறிய வல்லார்' என்றார் பெரியாரும். அன்றியும் ஞான பூமிக ளேழனுள் திரிபுடித்தோற்ற முள்ளவரை மாயைத் தோற்றம் நீங்காது; அதன்பிறகே மாயை நீங்கும்; ஆத்ம சாக்ஷாத்கார முண்டாம். சேஷகிரி யென்றழைக்கப்படுதற் கிதுவே காரணமாம்.

---

ஜனசமூகம்—ஜனசமூகமா? எத்தனை மூடர்கள் சேர்ந்து ஒரு ஜன சமூகமாகின்றது.



'அற்றது பற்றெனில் உற்றது வீடு' எனப் பெரியா ரருளியவாறு சகல பற்றுக்களையு மொழித்தலே சர்வேசுவரனை யடையு முபாயமா மென்னும் பொருளையே மொட்டை யடித்தல் காட்டுவதாகும்.

ஆகவே, தூலத்தைக் காட்டுதல் வாயிலாகச் சூக்குமத்தை யுணர்த்தவந்த முன்னோர் முடிவான நிலையாகிய ஆன்ம சாக்ஷாத்காரத்தை யடையும் நெறிகளையும், அவ் வெல்லாவற்றிற்கும் அடிப்படையாகவுள்ள பக்தியையும், பக்தி யோகம் ஞானம் என்னும் மூன்று வகைப்பட்ட மார்க்கங்களைத் தனித்தனி கைக்கொள்ளும் முத்திறத்தினரும் தத்தம் பக்குவ நிலைக்கேற்பக் கைக்கொண்டுய்ய வேண்டுமென்னும் நோக்கத்தைக்கொண்டே இவ்வாறு ஏழுமலையாக வமைத்திருக்கின்றன ரென வறிந்து அந் நெறியைப் பின்பற்றிச் செல்லுதலே அறிவுடையோர்க்குக் கடனாம்.

"பஞ்சினை யூழித்தீப்போல் பல சன்ம விவித வித்தாம்
சஞ்சித மெல்லாம் ஞானத்தழல் சுட்டு வெண்ணீறாக்கும்
கிஞ்சி தாகாமியந்தான் கிட்டாமல் விட்டுப்போகும்."

என்று கைவல்லிய நவநீதம் கூறுவதுபோல, ஞானத்தை யடைந்தவர்களுடைய சஞ்சித கன்மங்களை அந்த ஞானாக்கினி யெரித்துவிடும். ஆகாமிய கர்மமும் நெருங்காது. ஆகவே, ஞான மெய்தினோர் சகல பாவங்களினின்று நீங்கிப் பரிசுத்த ராவர் என ஞான நூல்கள் நுவல்வதை யனுசரித்து ஞானமாகிய ஏழுமலைக்கு வேங்கடம் (சகல பாவங்களையும் பரிகரிப்பது) என்று பெயரிட்டது மிக்க பொருத்தமுடையதாதல் காண்க. இதனையே தல புராணம் வேடன் கதையால் விளக்குகின்றது. தூர்க்குணக் காட்டில் அலைந்து நீசத் தன்மை யடைந்த சீவனே வேடன். ஆனால் அவன் உண்மையில் நீசனல்லன், உயர்குலத் துதித்தவனே. துஷ்டச் சேர்க்கையால் கெட்டான். ஞானத்தால் பரிசுத்தனானான். சீவன் தான் பிரஹ்ம சொரூபனாகிய உயர் குலத்தவனே யென்பதை யுணராமல் கெட்டான். தன்னை யறிதலாகிய ஞானத்தை யடைந்தபின் நீசத்தன்மையாகிய சீவத்தன்மையைவிட்டுப் பண்டேபோல் சிவத்தன்மையை யடைந்தான் என்பதே இக் கதையி னுட்பொருளாம். புராணம் இப்படித்தான் சொல்லும். அவ்வளவுதான் அதற்கதிகாரம். அவற்றி னுண்மையைக் காணவேண்டு மென்னும் கருத்தோடு பார்ப்போமாயின் அது உண்மைப் பொருள்களை யுருட்டித் திரட்டித்தாச் சர்வசித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கும். அவ்வாறின்றி யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாவண்ணம் புராணம் கூறுவதையெல்லாம் அப்படியே யெடுத்துக் கொள்வதனால் ஒரு பயனுமுண்டாகாது. ஆகவே, இதுகாறுங் கூறிய உண்மைகளையும் பிறவற்றையும் அனுபவ ஞானிகளை யடுத்துத் தெரிந்துகொண்டு அவ்வா றேழுகு மாற்றலை யளித்துக் காத்தருளுமாறு ஏழுமலையினுள்ள எல்லாம்வல்ல பெருமானை இரவும் பகலும் இறைஞ்சி நிற்போமாக.

---

நாம் எண்ணுகிறபடி நாம் ஒருபொழுதும் அவ்வளவு சந்தோஷமாயோ அல்லது சந்தோஷமில்லாமலோ இருப்பதில்லை.

# மாதர் உலகம்



## தேசம் விழைவது எதனை ?

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

தேசம் விழைவது சகிப்புத்தன்மையை. அந்த சகிப்புத்தன்மை எதனால் வரும்? பொறுமையினால். அந்தப்பொறுமை எதனாற் போதரும்? நல்லறிவின் மாண்பினாலேதான். அந்த நல்லறிவு எவ்வழி எய்தும்? நல்லொழுக்கம் நல்லிணக்கம் என்பவைகளால் என்பது தேற்றம். இங்கே ஒழுக்கமென்பது புற ஒழுக்கத்தினை மட்டில் குறித்தல்ல. கட்டுப்பாடான ஒழுங்கு முறையையே குறிப்பிட்டதாகும். இவ்வித ஒழுங்கு முறையை வளர்ப்பதே பண்டைக்காலத்தில் சமூக திட்டத்தின் முதற்படியாக அமைக்கப்பட்டிருந்தது; அதுதான் பிரமசரிய மேற்கொள்வதாகும். அந்த பிரமசரியத்தினை மேற்கொள்ளாத இளைஞர்கட்கு கிருகஸ்தராகும் உரிமையே அக்காலத்தில் வழங்கப்படவில்லை. அந்த முதலாவது ஆச்சிரமத்தினை அனுஷ்டிப்பவர்கட்கு ஒரு பொழுதுண்டியும், எளியவாழ்வும், பணிவும், வனவாழ்க்கையும், மேற்கொள்ளுவது சாதாரணமாகவே வழக்கத்திலிருந்தது. ஏழைகளும் செல்வர்களும் தாழ்வு, உயர்வு கருதாமல் அத்தாபனங்களில் இடம் பெற்றிருந்தனர். இளமையில் இளைஞர்க்கு ஏற்படும் எண்ணங்களும் பயிற்சிகளுமே பின்னர் அவர்கள் பெரியவர்களாகி உலகியலில் ஈடுபடுங்காலத்து உருப்பெற்றுத் திகழ்வதாகும். இவ்விஷயத்தில் நமது முன்னோர்கள் கூர்ந்து ஏற்படுத்திய ஒழுங்குமுறை பிறநாட்டினர்கள் எவரும் வியந்து போற்றத்தக்கதாகும். இவைகளை நன்குணர்ந்தே அறிஞர் டி. எஸ். வாஸ்வானி என்பார் சமீபத்தில் மாணவர்கட்கு நிகழ்த்திய அரிய சொற்பொழிவில்,

"பண்டைக்கால ரிஷிகளின் உபதேசங்களை மறப்பது நமது ஆன்மசக்தியை வற்றச்செய்வதுபோ லாகும்" என்றும்,

"உண்மையான கலைஞானத்திற்கு அடையாளமா யிருப்பது எளிமையே யாகும்" என்றும்,

"உடையிலும் உணவிலும் நீங்கள் எளியவர்களா யிருத்தல்வேண்டும்" என்றும்

"புற எளிமையைவிட அக எளிமை ஞானம்பெற அவசியம்"

என்றும் கூறி யிருக்கின்றார். ஆழ்ந்து சிந்திக்குங்கால் பண்டைக்காலப் பெரியோர்களின் மதிநுட்பம் எத்துணைச் சிறப்புடையதென்பது விளங்கும். நமது

---

இன்பங் காண்பது எளிய காரியமன்று. நமக்குள்ளேயே காண்பது மிகக் கடினம். வேறெங்கேனும் காண்பதோ அசாத்தியம்.



மகாத்மாகாந்தியடிகள் எழுதியுள்ள பிரமசரியம் என்னும் ஒப்பில்லாத தெய்வநூலில், சுவை யடக்கமே புலன் அடக்கத்தினைத் தரும், அப்புலனடக்கமே (சன்மார்க்கத்தினை வளர்க்கும்) மனவடக்கத்தினை அளிக்கும் என்பதை எத்துணைத் தெளிவாக எடுத்துக்காட்டி யுள்ளார்?

மேலும் அடிகள் தென்னாப்பிரிக்காவில் யோனிக்ஸ் ஸ்தாபனமாகிய பிரமசரிய குருகுலத்திற்கு வகுத்த ஒழுங்கு முறையில் "நண்ணிடை மடவார் எதிர்வரின் நோக்காத்திண்மை"யைச் சட்டமாகவே இயற்றி யுள்ளார்.

மனவடக்கத்திற்கு மாறான குணத்தை எழுப்பும் எப்பொருள்களையும் கலைபயிலும் வாலிபர்கள் உபயோகிக்கவில்லை. இதற்குப் பிரமசாரிகள் தாம் பூலம் போடக்கூடாதென வகுத்திருந்த சமூகக்கட்டுப்பாடே நல்ல உதாரணமாகும். நகரவாஸமும் இக்கருத்துப் பற்றியே விலக்கப்பட்டது போலும். ஒழுங்கு முறைகளினால் மனதை யடக்கி அறிவை வளர்த்து உடல் வன்மையைப் பெருக்கிய வாலிபர்களே முற்காலத்தில் இருந்தனர். தற்காலத்தில் இளைஞர் கலைபயில் கூடங்களில் அத்தகைய ஒழுக்கப்பயிற்சிக்கு ஒரு சிறு வசதியாவ துண்டோ? அதற்கு எதிரிடையான குணங்களை வளர்க்கவே தற்காலக்கல்வி நிலையங்கள் துணைசெய்வதாகின்றன. ஒழுங்கில்லாத வாலிபர்களும் கல்வி கற்றுப் பட்டதாரிகளாகின்றனர். இத்தகையார் கற்ற கல்வியினால் நாட்டிற்கு யாது பயன்? அல்லது தமக்காவது பயனுண்டா? உண்மையில் இல்லையென்றே கூறலாம். இது குறித்தே தாயுமானாரும் "மனவடக்கம் இல்லார்க்கு வாயேன் பராபரமே" என்றருளினார்.

மனதை அடக்க ஆற்றல் இல்லானேயாகில் அவன் வாய்திறந்து நாணாமல் பிறர் முன்பு பேசவும் தகுதி பெறான் என்பதே இதன் கருத்தாகும். நாடு உரிமை யிழந்து பிறரால் அடக்கி ஆளப்பட்டு நசுக்குண்டு வறுமையும் சிறுமையும் வருத்தத் துன்புறும் நிலையை எய்தியதற்கு பிரமசரிய விதிகளை இடைக்காலத்தினர் பேணாது விட்டதே காரணமாகும் என்று கருதுவது பிழையாகாது.

நம்நாடு எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் உரிமை யெய்தினும் முதலில் திருத்தி யமைக்கப்பட வேண்டியது கல்வி முறைகளே யாகும். காலத்திற்கேற்ற கல்வியைக் கற்பதுமட்டில் வேண்டற் பாலதே. புலனடக்கத்திற்கு வேண்டிய சாதனங்களை அமைப்பதும், கட்டுப்பாடான ஒழுங்கு முறைகளை அரண் செய்வதும் கைவிடத் தக்கவைகள் அல்ல. வாலிபர்கள் படாடோபமும், பெருமிதவாழ்வும், மணவினைவேட்கையும், நாவடக்க மின்மையும் உடையவர்களாய் (தற்போதுள்ளபடி) இருந்து வருவரேல் உரிமையாட்சி யெய்தினும் நன்னிலை யெய்த முடியாது. தற்காலம் அடிகளின் அளவிறந்த ஆத்மசக்தியினால் எவ்வித இந்திய வாலிபர்கள் பலர் தியாகமூர்த்திகளாய் அஹிம்ஸைப் போரில் அஞ்சாது எந்நாட்டினரும் வியக்கும்படி தொண்டாற்றித் துன்பங்களையேற்று முன்னணியில் வெற்றிமாலைசூடி நிற்கின்றனர். இதே எண்ணமும் உண்மை ஊக்கமும் இனியும் வீழ்ந்து படாமல் நின்று நிலவுவதற்கு மேலேகூறிய பண்டைக்கால ஒழுங்குகளை வகுத்துப் பயிற்றுவதே இன்றியமையாததாகும்.

---

தனிமையாயிருக்கச் சக்தியில்லாததினாலேயே சகல துன்பங்களும் விளைகின்றன.

இத்தகைய பயிற்சித்துறை நடைமுறையில் சாத்திய மாகும்படி பெற்றோர்கள் பெரிதும் துணை நிற்பதையே யாவும் பொறுத்து நிற்கிறது. ஒழுங்கு முறைகளில் தலை சிறந்தது மணவினையில் மனம் செல்லாதபடி ஒழுகுதலாகும். முற்காலத்தில் வயது 25-30-க்கு முன்பு கிருகஸ்தனாகும் வழக்கம் இருந்ததில்லையென் றறிகிறோம். வரவர அந்த வயதிற்குள் பல, சில குழந்தைகட்குப் பிதாவாகி கொள்வினை கொடுப்புவினை செய்து சம்பந்தியு மாகின்றனர். பன்னிரண்டு பதின்மூன்று வயதுப் பெண்கள் மகப்பெற்றுவிட்டால் அவர்களை பாக்கிய சாலிகளென எண்ணுவதும் சர்வசாதாரணமாகிவிட்டது. இதைவிட அறிவீனம் வேறொன் றுளதோ? ஆண்மக்கள் ஒழுங்குமுறை அநுஷ்டானத்தில் வரமுடியாமல் உயிரற்றிருக்கும் வரையில் பெண்களின் ஒழுங்கு முறைகளைப்பற்றியோ விவாக விஷயங்களைப்பற்றியோ கூக்குரலிடுவதில் எவ்வித பயனும் இல்லையென்பதை எப்போதும் மனதில் வைக்க வேண்டும். இடப்புறம் நோயுற்றிருப்பதைத் தடுக்க வலப்புறம் முனைந்து முயல்வது நகைக்கிடமே யாகும். இருபுறமும் நோயின்றிச் சுகமெய்துதற்குச் சரீரத்தில் பிணிநீக்கம் ஏற்படவேண்டும். ஆனால் தன்னிலை மறந்து பிறர் நிலையைப் பேசுவதும் ஒரு இயல்பாய் விட்டது. பேச்சில் காட்டும் பெருமிதத்தைவிடச் செயலில் காட்டும் சிறிதளவு சிறந்த தன்றோ?

ஆடவராகிய மாணவர்கள் மனவடக்கத்திற்குத் திறவுகோலாகிய (பிரமசரியப் பயிற்சியை) ஒழுங்கு முறைகளை அநுஷ்டிக்கும்படி கவனம் செலுத்துவதுபோலவே கன்னிகைகளின் ஒழுக்கம்பயிற்சிகளையும் கவனிக்க வேண்டுவது மிக்க அவசியமாகும்.

இந்தியப் பெண்மணிகள் இளமையில் வளர்க்கப்படும் தன்மையிலேயே அவர்கள் ருதுகாலமும் மகப்பேறும் உடல் மெலிவும் அநேகமாய் சார்ந்திருப்பதென்று கூறலாம். பேசக்கூடிய 3-வயதுக்குழந்தையி லிருந்தே பெற்றோர்கள் அதன் விவாக எண்ணத்தினையே சதா உட்கொள்வதும் அதன் முன்னிலையில் அதைப்பற்றிப் பேசுவதும் பெருந்தவறாகும். குழந்தை வளர வளர விவாக எண்ணமும் மனதில் வளரத் தலைப்படுகிறது. இந்நிலைமையில் வரனுடைய நவீனக்கல்வி, நவீனநாகரிகம், வரதட்சணை இவைகளைப்பற்றிய சிந்தனைகளும் சம்பாஷணைகளும் பெண்கள் மனதில் இடம் பெறுகின்றன. (பிஞ்சில் பழுப்பதுபோல) பேதைப் பருவமுள்ள பெண்கள் அதாவது 7-வயதுப் பெண்கள் பெதும்பைப் பருவத்தில் ஏற்படக்கூடிய உணர்ச்சியைப் பெறுகின்றனர். பெதும்பைப் பருவமென்பது பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட வயதாகும். அந்தப் பன்னிரண்டு வயதில் மங்கைப் பருவத்தின் நிலைமையை அடைந்து விடுகின்றனர். உஷ்ண பிரதேசமாகிய இந்நாட்டின் நிலைமையே சீக்கிர ருதுவுக்குக் காரணமென்று பொதுவாகக் கருதப்படுகின்றது. உஷ்ணத்தின் காரணமாக ருதுவாகக்கூடிய சீக்கிர வயதும் 14-க்கும் கீழ் என்று சொல்லமுடியாது. 10-வயதிலிருந்து 13-வயதுக்குள் ருது காலத்தை அடையும் பெண்கள் நம் நாட்டில் கணக்கில்லை. அந்தக் கணக்கை நுட்பமாய் ஆராய்ந்தால் முக்காற்பங்கும் மேல் வகுப்பினரென்று கருதப்படும் பிரிவினர்களிலேயே நிகழ்வதென்பது ஏற்படும். அதிக சுகபோகங்களில் செல்வச்

---

உனக்குச் சந்தோஷம் தந்துகொள்ள நீ விரும்பினால் உன்னுடன் வாழுபவரின் குணாதிசயங்களைப்பற்றிச் சிந்திப்பாயாக.



சிறப்புடன் வளர்க்கப்படும் பெண்களுக்கே இந்தவகையான அகால விபரீதம் நேருவதன்றி வயல்களில் கூலி வேலை செய்து நாள் முழுதும் உழைத்து ஜீவனம் செய்யும் ஏழைகளின் குடும்பங்களில் பிறக்கும் பெண்கள் சீக்கிர வயதில் இந்நிலையை அடைவதில்லை என்பதே இதற்குத் தக்க சான்றாகும். வரனும் வரனைப் பெற்றோரும் பெண்ணைக்கண்டு விரும்பவேண்டு மென்னும் கவலையினால் பெண்ணின் தாய் தந்தையர்கள் பெண்ணை ஆடையாபரணங்களினால் சக்திக்கு மீறி அலங்கரிப்பதும், பலவித துணைக்கருவிகள் மூலம் சங்கீதப் பயிற்சி செய்விப்பதும், தென்னாட்டில் சர்வ சாதாரணமாகிவிட்டது. அர்த்த புஷ்டி வாய்ந்த கீதங்கள் கடவுளிடம் மனதை ஈடுபடுத்துவதற்கே எழுந்தன. எனினும், காலக்கிரமத்தில் சங்கீதப் பயிற்சி பெரும்பாலும் ஒழுக்கத்தைக் கைவிட்ட ஒரு கோஷ்டியாரிடமே இடம் பெற்று நிலவுவதால் அவர்கட்குப் பொருள் நயம் புலனாவதில்லை. இசை நயமே லட்சியமாகின்றது. இத்தகைய விற்பன்னர்களிடம் சங்கீதப்பயிற்சி பெறும் கன்னிகைகளுக்கு எங்ஙனம் பொருள் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படும்? ஏற்பட்டாலன்றோ கடவுளின் கருணையை யறிய வழியுண்டாகும்? தவிர எப்போதும் மனதை இன்புறச் செய்யும் ஒலிகளே நரம்புகளுக்குப் புதியதொரு கிளர்ச்சியை எழுப்புவதுண்மை. சங்கீதப் பயிற்சி பெறும் பெண்கள் முன்னே கூறிய காரணங்களோடு இதையும் காரணமாகப் பெறுகின்றனர். நரம்புகளைக் கிளர்ச்சியுறச் செய்யும் இனிய நாத ஒலி அகாலருதுவை அடையச் செய்வதென்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இதன் பயனாக மங்கைப் பருவம் (14-வயது) பூர்த்தியாகு முன்னமே தாயாகிவிடும் பெண்களை உன்னிக் கணக்கிட முடியுமோ? இதனைத் தடுக்கத்தக்க உபாயமாகவே சாரதா சட்டத்தினை வற்புறுத்தும் ஊக்கம் நாட்டில் எழுந்தது. ஆனால் அதனாலேயே பெண்களின் நிலை உயர்ந்துவிடுமா? என்பதுதான் கேள்வி.

16-வயதுப் பெண்ணையே ஒருவன் மணக்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். மணந்த நாள் முதல் சதா காலமும் பிரியா நிலையில் வசித்து, கருப்பிணியானாலும் மகப்பெறினும் உடனிருந்து வருவரேல் அவர்கள் உடல் நிலையும் ஒளி மழுங்கி மெலிவெய்திப் பிணிக்கூடுகளாகிவிட வெகுநாள் செல்லுமோ? பட்டதாரிகளாகி உபாத்திமைத் தொழிலில் தலைமை வகிக்கும் மாதர்களில் பலருமே வருஷவாரி பிரஸவ கர்த்தாக்களாகி நைகின்றனர் என்பதை வருத்தத்தோடு நினைக்க வேண்டியிருக்கிறது. இவ்வித நிலையில் உள்ள ஸ்திரீகளுக்குச் சிசுவின் பாதுகாப்புச் சிரமம் இல்லை, அனைத்தையும் சம்பளத்திற்காக மேற்கொள்ளும் ஏவலாளர் பொறுக்கின்றனர். இரத்த பந்தத்தோடெழும் தாயன்பானது கூலி பந்தத்தினால ஈடுபடுவோர்களால் கொள்ளப்படுவதும் பெரியதோர் பரிதாபமாகும். இது கடவுள் கட்டளையை மீறிய செய்கையாகும். அன்பினை வியாபார முறைமையில் விற்பதாகவே இது காணப்படுகின்றது. இதைவிட அறியாமை பிறிதுளதோ?

இவ்வாறின்றிக் குடும்ப காரியங்களில் ஈடுபடும் பெண்கள் விஷயத்தில் சிசு பரிபாலனம் பிறிதொருவர் பால் தாவுவதற்கில்லை. ஆனால் நடக்கும் பருவமுடைய இரண்டு வயதுக் குழந்தையைக் கையில் பற்றிக்கொண்டு ஒரு வயதுக் குழந்தை ஒன்றை இடுப்பில் இடுக்கிக் கொண்டு வயிற்றில் 6, 7-மாதக்

---

ஒரு பிராணி வாழ நீ ஆனந்திக்கும் அளவே நீ அதை அறிய முடியும். வேறு வழியில் முடியாது.

கருவைத் தாங்கி நிற்கும் எத்தனை இளமங்கையரைத் தென்னிந்தியா ரயில் நிலையங்களில் காணலாம். இக் கொடுமையைக் கண்டு பரிதபிப்போர் மிக மிகச் சிலரே யாவர். சிலர் என்பதுகூடப் பொருத்தமன்று. உண்மையில் ஒன்றிரண்டு பேர்கள் என்று கூறுதல் தகுதியுடையதாகும். பெரும்பாலோரும் இத்தகைய இளமங்கையரைக் கண்டு மனமகிழ்ந்து கடவுளின் வரப்பிரஸாதம் நேராக இப் பெண்களிடம் பெருகிவிட்டதாகவே நினைக்கின்றனர். தவிர இதே நிலைமை தங்கள் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் வாய்க்கவில்லையே என்றும் ஏங்குகின்றனர். மகாத்மா காந்தியடிகள் இத்தகைய சிசு உற்பத்திகள் கடவுளின் கோபத்தின் அடையாளங்களாகும் என்று கூறுகிறார்.

உண்மையில் மதவிதிகளை வகுத்த முன்னோர்கள் முக்கிய காரணமாகக் குறிப்பிட்டதெல்லாம் (பொதுநல ஊழியம்) பரோபகாரம் செய்யவும் எளியோர் துறந்தோர் முதியோர் முதலியவர்களை ஆதரிப்பதில் பரஸ்பரம் துணைவர்களாய் ஈடுபடவேண்டும் மென்பதுமே. வம்ச விருத்தியைக் கருதிமட்டில் இருவர்களின் சேர்க்கையும் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆதிக்கருத்து அதுவாயினும், சமூகத்தில் கட்டுப்பாடு அழிந்ததாலும் ஒழுக்கப் பயிற்சி ஒழிந்ததாலும், சுவையடக்கம், மனவடக்கம், புலனடக்கம் ஆகியவைகளின் அருமையையுணர்த்தும் உண்மை நூல்களின் பயிற்சி இறந்துபட்டதாலும், தற்கால தம்பதிகள் தங்கள் விவாக சம்பந்தத்தினால் தமக்கேற்பட்ட கடமை காலாகால நியதியின்றி இயற்கையிலெழும் விருப்பத்தைத் தணித்துக் கொள்வது தானென்னும் முடிவுக்கு வந்திருக்கின்றனர். மகப்பேற்றைக்கூட இரண்டாவது கடமையாக மதிக்கின்றனர். தலைமகவுயிர்த்த மனைவியால் குறைந்தது மூவாண்டிற்குள் இரண்டாவது கருவுண்டாகாதபடி கடவுளுக்கஞ்சியாவது விலகி நிற்கக் கணவன் கடமைப்பட்டிருக்கிறான். உலகநிலை அவ்வித நியதியை உணர்ந்தொழுகும் உணர்ச்சியை யிழந்து நீண்ட நாள் சென்றுவிட்டது. சுகபோகங்களில் அளவுகடந்த அவாவினை வளர்த்து எண்ணுவதுபோல் நடக்க முடியாத கோழைகளாகிவிட்ட நமது சமூகம் பண்டைய ஒழுங்குமுறையை மேற்கொள்ள அவாவுறும் சிறந்த நிலையையே தற்போது தேசம் விழைவதாகும்—கடவுளின் இயற்கைச் சட்டங்களுக்குத் தலைவணங்காத ஒருவர் அரசாங்கத்தினரின் செயற்கைச் சட்டங்களுக்கு கீழ்ப்படிவது அவமானகரமாகும். அன்றியும் செயற்கைச் சட்டங்களால் ஒழுங்கு முறையை அநுஷ்டானத்தில் கொண்டுவர முடியாததாகும். கள்ளத்தனமான காரியங்களுக்கே (அதிகாரி நிர்ப்பந்தம்) வழி கற்பிப்பதாகும். எனவே பெண்கள் எத்தனை யாண்டுகள் கடந்து மணம் செய்து கொள்ளினும் அடிக்கடி பிரஸவ இன்னலுக்கு உட்படநேருமேல் அப்போதும் உடன் மெலிவு பிணிவளர்ச்சி முதலிய கஷ்டங்களுக்கு இரையாகாம லிருப்பதற்கில்லை. அடியிலிருந்தே ருது காலம் சீக்கிரத்தில் நேருவதற்கு சாதகமான நிலைமையில் வளர்க்கப்படுவது முற்றிலும் கைவிடப்படல் வேண்டும்.

விவாக விதிகளைச் சட்டங்களினால் கட்டுப்படுத்துவது நமது பலவீனத்தையே காட்டுவதாகும். கள்ள ஜாதகக் குறிப்புகளின் சிருஷ்டிக்கே அது இடமளிக்கும். சமூக சீர்திருத்தங்களில் முயலுமுன் அதன் அடிப்படையான குற்றங்களை யறிய வேண்டும். சிறுவர் சிறுமிகள் டாம்பீக வாழ்வில்

---

தங்கள் அபிப்பிராயத்தை ஒருபொழுதும் மாற்றிக்கொள்ளாதவர் மூடரும் இறந்தவருமே.



மோகங் கொள்ளாதபடி வளர்க்கப்படல் வேண்டும். மனக்கிளர்ச்சிக்குச் சாதகமான அப்பியாஸங்களில் பயிற்சி யளியாதிருத்தல் வேண்டும். பொய்க் கதைகளையும், கள்ளத்தினை வளர்க்கும் காட்சிகளையும் கவனியாமல் இருக்கும்படி கண்டிப்பான மேற்பார்வையும் பாதுகாப்பும் அவசியம். வருங்கால இந்தியாவின் மாண்பு இருபால் இளைஞர்களினுடைய ஒழுக்கப் பயிற்சியிலேயே அமைந்திருக்கின்றது. ஒழுக்கப்பயிற்சி தற்காலத்திய கலாசாலைகளில் அறவே கிடையாதென்பது தேற்றம்.

பண்டைக்கால ஆசிரியர்கட்கும் மாணாக்கர்கட்கும் இருந்த தொடர்பு தாயன்பு மகவன்பு போன்றது. தற்கால மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் உள்ள தொடர்பெல்லாம் புகைவண்டி பிரயாணத்தில் ஏற்படும் நட்புக்கே உவமையாகும். கலைக்கூடங்களில் சந்திப்பதோடு தற்கால மாணவர் ஆசிரியர் தொடர்பு முடிவடைகிறது. ஆகவே இந்நிலைமாறி மேலே கூறிய ஒழுங்குமுறையும் பிரமசரிய அநுஷ்டானமும் வாலிபர் கைக்கொள்ளக்கூடிய நல்வாழ்வையே தேசம் விழைவதாகும். தெய்வத் திருவருளை எவர் அறிவார்?

## துருக்கிப் பெண்களின் தற்கால நிலை

(ஸ்ரீமதி. நீலமாதேசாய் பி. ஏ.,)

மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருந்த துருக்கி நாடு இப்பொழுது எல்லாத் துறைகளிலும் தீவிரமாய் முன்னேறி வருகிறது. நவீன முன்னேற்றத்திற்குக் காரண பூதராய் விளங்குபவர் முஸ்தபா கமால்பாஷா என்னும் வீரர். துருக்கி மாதர்களின் தற்கால நிலைமையைக் குறிக்கும் வரலாறு கீழே குறிக்கப்படுகிறது. அதைக் கூர்ந்து வாசிக்குமாறு வாசகர்களை—சிறப்பாக நமது பெண்மணிகளைப் பெரிதும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஐரோப்பியப் பெரும் போரில், ஆங்கில மாதர்கள் 'எத்தகைய கஷ்டமான காரியங்களையும் எளிதில்—திறமையுடன் முடிக்க வல்லோம்' என்னும் நம்பிக்கைகொண்டு ஆடவர்களுடன் சமத்துவம் அடையப் போராடத் தொடங்கியபோது, துருக்கியில் மாதர்கள் அந்தப்புரத்தில்—திரை மறைவில் முக்காடிட்டுக்கொண் டிருந்தார்கள். அப்பொழுதுதான் துருக்கியும் அரசியல் விடுதலைபெற முயன்றுவந்தது. சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் பெண்மக்களின் விடுதலைக்கோ முன்னேற்றத்திற்கோ எத்தகைய திட்டமும் வகுக்கப்படவில்லை. சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் பெண்கள் மதிப்பற்றவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் வீட்டைவிட்டுத் தனிமையில் வெளிவர முடியாது. ஒருகால் வெளியிற் செல்ல நேர்ந்தால் பல மாதர்கள் ஒருங்கு திரண்டு பாதாதிகேச பரியந்தம் கருப்புத் துணியால் முக்காடிட்டு மூடி மறைத்துக்கொண்டு மற்றவர்களுடன் மாத்திரமன்றி—தங்களுக்குள்ளேயும் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளாமல் போவார்கள். அவர்கள் அவ்வாறு போவது கருப்பு மூட்டைகள் அசைவதுபோன்ற காட்சி அளிக்கும். வீடுகளில் ஆண்களும் பெண்களும் ஒருவரை யொருவர் பார்க்க முடியாதபடி திரைகளைத் தொங்கவிட் டிருப்பார்கள். அவர்கட்கு வெளியுலக விவகாரங்கள்

---

தம் துன்பத்தைப் பிறரையும் அனுபவிக்கச் செய்வது பெரியோர்க்கு அடுத்ததன்று.

ஒன்றுமே தெரியாது. கிணற்றுத் தவளைகளாகவே காலங் கழித்தார்கள். அக்காலத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த அப்துல் ஹமீத் மற்ற சுல்தான்களை விட வைதிகத்தில் அதிகப் பற்றுள்ளங்கொண்டிருந்தார். அவருக்கு முன்னிருந்த சுல்தான்கள் காலத்தில் அந்நாட்டு மாதர்கள் பெற்றிருந்த சொற்ப உரிமைகளையுங்கூட அப்துல் ஹமீத் காலத்தில் இழந்து நின்றனர். பலதார மணம் தாராளமாக அனுமதிக்கப்பட்டது. ஆண்கள் அற்ப காரணங்களைக் காட்டிக்கூடப் பெண்களை விவாகரத்துச் செய்துவிட்டு வேறு கலியாணங்களைச் செய்துகொள்ளச் சட்டம் இடம் கொடுத்தது. பெண்கள் அடிமைகளைப்போலவும் வீட்டுக்கு வேண்டிய தட்டு முட்டுச் சாமான்களைப் போலவும் கருதப்பட்டனர். இதனால் அவர்கள் அநுபவித்துவந்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சம் அல்ல. துருக்கி மாதர்கட்கு நல்ல கணவன்மாரைப் பெறவேண்டுமென்ற வேட்கை அதிகரித்துக்கொண்டிருந்தது. தக்க பருவம், கல்வி, நாகரிகம், மனோபாவம் முதலியவைகளில் சிறிதும் தகுதி யில்லாதவர்கட்குப் பெற்றோர்கள் தங்களிஷ்டப்படி பெண்களை மணம்செய்து கொடுத்துவந்தனர். இத்தகைய நிலைமையில் துருக்கி மாதர்கள் பொருளாதார உரிமைகளைக் குறித்துக் கனவிலுங் கருதமுடியாதவர்களா யிருந்தார்கள்.

அக்காலத்தில் அந்நாட்டு மக்கட்குப் பெண் கல்வியைப்பற்றி ஒரு சிறிதும் கவலை இல்லை. பள்ளிக்கூடங்கட்குச் சென்று கல்வி கற்றுக்கொள்ளப் பெண் மக்கட்கு அநுமதி கிடையாது. அந்தப்புரங்களி லிருந்துகொண்டே ஏதோ சிறிது கற்றுவந்தனர். ஆனால் சில பிரபுக்களின் இல்லங்களில்மட்டும் பெண்கட்குக் கல்வி கற்பிக்கும் பொருட்டு ஐரோப்பிய மாதர்கள் நியமிக்கப் பெற்றனர். இதனால் மறைமுகமாகவேனும் தங்கள் வழக்க வொழுக்கங்களாகிய நாகரிகத்திற்குப் புறம்பான ஒரு நாகரிகத்தை அவர்கள் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. சில பெண்கள் பிரஞ்சு மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டார்கள். இதனால் அவர்கள் பிறநாடுகளில் நடைபெறும் விவகாரங்களைத் தெரிந்துகொண்டு, தங்களுக்குள்ள குறைகளையும் துன்பங்களையும் உணரத் தொடங்கினர். அவைகளை யெல்லாம் எதிர்க்கும்படியான ஒரு புத்துணர்ச்சியும் அவர்கள்பால் கிளர்ந்து எழுந்தது. இவ்வாறு ஒருவகையான சுதந்தர உணர்ச்சியும் சமத்துவ நோக்கமும் துருக்கிப் பெண்களின் மனங்களைக் கவர்ந்து நின்றன. மேனாட்டுச் சகோதரிகளின் நாகரிகப் போக்கையும், சமத்துவ உயர்வையும், அவர்கட்கும் தங்கட்கும் உள்ள வேற்றுமைகளையும் பகுத்தறிந்து கொண்டனர். வீடுகட்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கவேண்டிய ஈன நிலையையும், ஆடவர்கள் பலதார மணம் செய்துகொள்வதால் தாங்கள் அடையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் நன்கு தெரிந்துகொண்டனர்; அவைகளை வெறுக்கத் தொடங்கினர். சமூக விடுதலை—பொருளாதார விடுதலைகளை அடையவேண்டும் என்ற உணர்ச்சி ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தீவிரமாய்க் குடிகொண்டிருந்தது. எனினும் அதை வெளிப்படையாகத் தெரிவித்துக் கிளர்ச்சி செய்யமுடியாத நிலைமையில் இருந்துவந்தனர்.

துருக்கியில் புரட்சி ஏற்பட்டதன் பயனாக அந்நாடு முழுவதிலும் ஒரு புதிய மாறுதல் ஏற்பட்டது. மாதர்கள் நிலைமையிலும் முன்னேற்றம் ஏற்பட்

---

உலகத்தில் மனிதனைவிட உயர்ந்த பொருள் இல்லை. மனிதனைக் காட்டிலும் அவனது மனமே உயர்ந்த பொருளாகும்.



டது. மூடப் பழக்க வழக்கங்களாலும், சமயக் கட்டுப் பாடுகளாலும் பெண்கள் எவ்வளவு தொல்லைகட் குட்பட்டிருக்கின்றனர் என்பதை அந்நாட்டு வாலிபர்கள் உணர்ந்தனர். பெண்களின் விடுதலைக்குக் கல்வியே தலைசிறந்த சாதனம் என்று கண்டனர். பெண்மணிகளை இழிநிலையில் அடக்கி வைத்துக்கொண்டு நாட்டு விடுதலையை நாடுதல் பயனற்றது என்னும் உண்மையைத் தெரிந்துகொண்டு அநேக பெண் பாடசாலைகளைத் திறந்துவைத்தனர். மாதர்களில் ஹலிதி, ஹானம் என்னும் இரண்டு பெண்மணிகளும் அக்காலத்தில் அரும்பாடு பட்டனர். ஆயினும் துருக்கி வாலிபத் தலைவர்கள் எதிர்பார்த்த அபிவிருத்தியில் சிறிது பாகந்தான் அப்போது ஏற்பட்டது.

நீண்டகாலம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த துருக்கி மாதர்கள் அப்போது தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் மேனாட்டுப் பெண்களைப்போல் அவ்வளவு அதிதீவிரமான மாறுதலைத் திடும்பிரவேசமாய் அடைந்துவிட விரும்பவில்லை. மேலும் வைதிகர்களையும் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. அதாவது வைதிகர்களையும் தங்கள் நவீன முற்போக்கு வழிக்குத் திருப்பவேண்டி யிருந்தது. துருக்கியில் ஏற்பட்ட புரட்சியின் பயனாய் வீதிகளில் மாதர்கட்குத் தாராளமாய் நடக்கும் உரிமை கிடைத்தது. பட்டதாரிகளான வாலிபர்கள் மனைவிமாரைத் தங்களுடன்கூடவே ஐரோப்பிய நாடுகட்கு அழைத்துச் சென்றனர். மேனாட்டு மாதர்களின் சமத்துவ வாழ்க்கையையும் நாகரிக முன்னேற்றத்தையும் நேரில் கண்ணுற்ற துருக்கிப் பெண்மணிகளின் மனங்களில் அவர்கட்குத் தெரியாமலே புத்துணர்ச்சியும் விடுதலை வேட்கையும் கிளம்பத் தொடங்கிவிட்டன. வெளிநாடுகளில் துருக்கிப் பெண்மணிகள் முகமூடிகளை எடுத் தெறிந்துவிட்டுச் சுதந்தரமுள்ள இன்ப வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தார்கள். ஆனால் துருக்கியில் அத்தகைய அபிவிருத்தி ஏற்பட்டுவிடவில்லை. முகமூடி இருக்கவேண்டுமென்னும் எண்ணம் வலிமை யடையும்படிசெய்ய உலமாக்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். குர்ஆன் மேற்கோள்களைக் காட்டினர். உலமாக்கள் அம் மேற்கோள்களின் உட்கருத்தைப் பற்றாமல் வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு தொங்கினர்.

இந் நிலைமையில்தான் ஐரோப்பியப் பெரும்போர் தொடங்கியது. தங்கள் திறமைகளை வெளிப்படுத்தத் துருக்கி மாதர்களுக்கு இஃதொரு சிறந்த சந்தர்ப்பமா யிருந்தது. துன்பப்படுவோர்க்கு உதவி செய்வதிலும், பொதுச் சுகாதார விஷயத்திலும், சிசு பரிபாலன விஷயத்திலும் அதிகச் சிரத்தை எடுத்துக்கொண்டு தங்கள் முழுத் திறமையையும் காண்பித்தார்கள். மாதர் இயக்கத்திற்கு ஆதரவளித்த தலைவர்களும் அவர்கட்கு அதிக உதவி செய்தார்கள். ஆடவர்கள் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் பெண்கள் முன்னேற்றத்தைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்திவந்தார்கள். இதனால் பெண்கள் தங்கள் முன்னேற்றத்திற்குரிய ஒவ்வொரு துறையிலும் இறங்கி வேலைசெய்யச் சௌகரியம் ஏற்பட்டது. ஆனால் பெண்கள் முழு விடுதலைபெற வழியில்லாமலே இருந்தது. அதற்கு அரசாங்கத்தின் ஆதரவு இன்றியமையாததா யிருந்தது. சர்க்காருக்குப் பல வழிகளிலும் பலமான எதிர்ப்பு இருந்துகொண்டிருந்தது. வைதிகர்களும், உலமாக்களும், மற்றும் அநேக மூடநம்பிக்கை

---

தோல்வியிலும் துக்ககரமான விஷயம் ஒன்றே ஒன்றுதான் உண்டு. ஐயமே அது.

கொண்டவர்களும் அரசாங்கத்திற்கு எதிரிகளா யிருந்தனர். எனினும் முஸ்தபா கமால்பாஷா யாரையும் லக்ஷியம் செய்யவில்லை. மூடப் பழக்க வழக்கங்களை யெல்லாம் ஒழித்துத் தம் கருத்தை நிறைவேற்றி விடவேண்டும் என்று உறுதி செய்துகொண்டார். அவருக்குப் பலர் பக்கபலமா யிருந்து துணை புரிந்து வந்தார்கள். இறுதியில் ஒரே சொல்லால் முகமூடி வழக்கம் துருக்கியைவிட்டுப் பறந்தோடி விட்டது. சர்க்கார் சட்டத்திலேயே பெண்களுக்குத் தக்க அந்தஸ்து அளிக்கப்பட்டது. சமூகத் துறையிலும், அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அவர்கள் சுதந்தரம் பெற்றுவிட்டதோடு மற்ற விஷயங்களிலும ஆடவர்கட்குச் சரிநிகர் சமானமான அந்தஸ்து பெற்றார்கள்.

கலியாண சம்பந்தமான சட்டங்களிலும் புதிய மாறுதல் ஏற்பட்டது. பெற்றோர்களும் மற்றோர்களும் பார்த்துக் கலியாணம் செய்து கொடுக்கும் வழக்கம் ஒழிந்தது. தங்கள் வாழ்க்கைத் துணைக்குரிய காதலர்களைத் தாங்களே தேடிக்கொள்ளும் உரிமை பெற்றார்கள். விவாகரத்தும் மிகக் கண்டிப்பான நிபந்தனைகளின்மீதே செய்ய முடிகிறது. இத்தகைய முக்கிய விஷயங்களில் தனிப்பட்ட மனிதர்கள் தங்களிஷ்டப்படி முடிவு கூறப்படுவது போய்க் கோர்ட்டுகளில் முடிவு ஏற்படவேண்டும் என்னும் முறை ஏற்பட்டுவிட்டது பெண்கள் பொதுப் பள்ளிக்கூடங்கட்குத் தாராளமாகச் சென்று கல்வி கற்கத் தொடங்கினார்கள். இதனால் குடியாசுமுறை வலிமை பெற்றது. இன்று துருக்கி நாடு இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருப்பதற்குக் காரணம் முஸ்தபா கமால்பாஷாவின் தீவிர முயற்சி என்பதைக் கூறவும் வேண்டுமோ? அவரது அரிய சேவையினால் பெண்கள் தாங்கள் அநுபவித்து வந்த கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் ஒழித்துவிட்டனர். இனிமேல் அவை கனவிலும் ஏற்படா என்னும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். துருக்கி மாதர்கள் அடிமைத்தனத்தை யெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டுச் சுதந்தர வாழ்வு நடாத்தி வருகின்றனர்.

அடிமைகளாக வாழும் ஏனைய பெண்களும், துருக்கிச் சகோதரிகளின் வழியைப் பின்பற்றுவார்களாக.

—"மாடர்ன் ரெவ்யூ"


## உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தம் கொடுப்பதையே தன் முதல் பெரும் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.





## காந்தியடிகளின் சீமைச் செலவு.



மகாத்மா காந்தியடிகள் வைஸிராய் வெல்லிங்டன் பிரபுவுடன் காந்தி-இர்வின் ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றுவது பற்றி மற்றொரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட பின்னர் லண்டன் சர்வகட்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஆகஸ்ட் 29-ந் தேதி சனிக்கிழமை பகல் ஒன்றரை மணிக்கு பம்பாயிலிருந்து 'இராஜபுதனம்' என்னும் கப்பலில் தமதுகுமாரர் தேவதாஸ்காந்தி, டாக்டர். மேத்தா, காரியதரிசிகள் பியாரிலால், மகாதேவதேசாய், மீராபாய் என்னும் மிஸ். ஸிலேட், ஜி. டி. பிர்லா ஆகியவர்களடங்கிய பரிவாரங்களுடன் இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். அவருடன் அதே மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பண்டித மாளவியா, ஸ்ரீமதி. சரோஜனிதேவி, பிரபாசங்கர் பட்டாணி, போபால் நவாப் ஆகியோரும் புறப்பட்டுச் சென்றனர்.

### காந்தியடிகளின் செய்தி

கப்பல் புறப்படுமுன் காந்தியடிகள் பத்திரிகை நிருபர்களிடம் தேச மக்கட்குப் பின்வரும் செய்தியை அனுப்பினார்:— இப்போதுள்ள ராஜீய நிலைமையில் நம்பிக்கை கொள்வதற்கான அறிகுறிக ளொன்றுமில்லை. எனினும் நான் பிறவி முதலே எதிலும் நன்னம்பிக்கையே கொள்

ளும் சுபாவமுடையவனுதலால் எதிர் காலத்தில் நல்ல நிலைமையே ஏற்படுமெனத் திடமாக நம்புகிறேன். நான் கடவுளை நம்புகின்றவன். அந்தக் கடவுளே இப்போதும் நான் லண்டன் செல்லுவதற்குத் தடையா யிருந்தவைகளைப் போக்கி வழியைச் சுத்தப்படுத்தியதாக எனக்குத் தோன்றுகிறது. இதனுல் கடவுள் மானிட சேவைக்கு என்னைப் பயன்படுத்திக் கொள்வாரென்றே நான் எதிர்பார்க்கின்றேன். நான் இந்தியாவுக்குச் சேவை செய்வதன் மூலமே மானிடவர்க்கத்துக்குச் சேவை செய்யலாம் என்று கருதுகிறேன். இந்தியாவிலுள்ள ஜனங்களில் சில பகுதியினர் காங்கிரஸ் தங்கள் பிரதிநிதி ஸ்தாபனமல்ல என்று கூறியபோதிலும் அது இந்திய மக்களனைவருக்கும் பிரதிநிதி ஸ்தானமாக இருக்கக்கூடிய லட்சியமுடையதாகவே இருக்கிறது. விஷயமறியாத பாமரமக்களாகிய கோடிக்கணக்கான ஜனங்களின் நலத்திற்கு முரண்படாதிருக்கும் ஒவ்வொரு கட்சியின் நோக்கத்தையும் நலத்தையும் எடுத்துரைக்க முயல்வேன். காங்கிரஸ் மகாசபை வறுமையிற் சிக்கி யுழலும் கோடிக் கணக்கான ஜனங்களுக்கு நன்மை செய்வதற்கென்றே ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் தன் லட்சியத்தை அடையுமாறு செய்ய மாகாண சர்க்கார்களும், சிவில் சர்விஸ் வர்த்தகரும், ஆங்கில வியாபாரிகளும் உதவி செய்வார்களென்று நம்புகிறேன். அஹிம்சை, சத்தியம் இவற்றின் பிரதிநிதியாகவே காங்கிரஸ் சபை இருக்கிறது. தேசத்திலுள்ள எல்லா வகுப்பினருடைய நல்லெண்ணத்தின் மூலம்தான் காங்கிரஸ் தனது லட்சியத்தில் சித்திபெற முடியும். ஆகவே காங்கிரசின் வேலையைச் செய்யப்போகும் தாழ்மையான பிரதிநிதியாகிய என்பால் அத்தகைய நல்லெண்ணம் காட்டப்படுமென நம்புகிறேன்.

## கவியரசி. சரோஜனி தேவியின் செய்தி.



கவியரசி. சரோஜனிதேவி விடுத்த செய்தியாவது:-லண்டன் மகாநாட்டுக்குச் செல்லும் ஒவ்வொரு பிரதிநிதியும் இந்தியாவின் கௌரவத்தையும் யோக்கியப் பொறுப்பையும் காக்கக் கடமைப்பட்டிருப்பதை உணர்ந்து நடந்து கொண்டால் மகாநாடு வெற்றி பெறும் என்பது உறுதி. நமது நோக்கம் சித்தியடைவதைத் தடுக்கக்கூடிய சக்தி உலகில் கிடையாது. முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது ஹிந்து முஸ்லிம் பிரச்சினையைத் தீர்ப்பதேயாகும். நாம் இந்துக்கள் அல்லது முஸ்லிம்கள் என்னும் எண்ணத்தைவிட்டு இந்தியாவின் சுயேச்சைக்காகப் பாடுபடும் இந்தியர் எனனும் கருத்தைப் பெற்றாலதான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை அடைய முடியும்.



## பண்டித மாளவ்யாவின் செய்தி.



பண்டித மாளவியாவின் செய்தியாவது:—நமது கட்சி நியாயமானது. நமது முறைகள் சிறந்தவை. வெற்றி கிடைக்குமென்னும் பூரண நம்பிக்கையுடனேயே செல்லுகின்றேன். நீங்கள் அமைதியாகவும் அஹிம்சா தர்மத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென்பதே என் வேண்டுகோள். எல்லாச் சமூகத்தினரும் ஒருவருக்கொருவர் சமாதானத்துடனும் நல்லெண்ணத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். சுயராஜ்யம் அதிதுரிதமாக நமக்கு வந்து கொண்டிருக்கிறது.

## பழைய சோற்றின் பண்பு.

காலையில் எழுந்தவுடன் முகங்கழுவி, வாயைப் பன்முறை குளிர்ந்த நீர்கொண்டு கொப்பளித்துத் துப்பிவிட்டு, குளிர்ந்த நீரையேனும், நீராகாரத்தையேனும் அருந்தினல், வெகு நேரம் உலர்ந்திருந்த ஆகாரக் குழாய் செழுமையடைந்து, உடலுக்கு நலன் விளைக்கிறது.

பழைய சோற்றைப் பழையநீ ராகும்
கொழுஞ்சேர்க்கை யோடுதயம் கொள்ளில்—எழுந்தாது
பித்தவா தம்போம் பெரும்பசியாம் மெய்யெங்கும்
மெத்தவொளி யுண்டாம் விரி.

—ஒரு பழையபாட்டு.

காப்பிக்குடி நண்பர்கள் இதை நம்புவார்களா?
தொடுவார்களா?

# சன்மார்க்க போதங்கள்.

(தெல்லிப்பழை-கா. சின்னப்பா.)

அறத்தில் ஆர்வம் பிறப்பைக் குறைக்கும்
ஆண்மை எவர்க்கும் மாண்பு கொடுக்கும்
இல்ல துரைப்பவர் நல்லவ ராகார்
ஈட்டும் பொருளைக் கேட்டிற் கொடாதே
உண்மைச் சினேகம் நன்மை புரியும்
ஊழின் வலியை மானச் செய்நீ
எந்தப் பொருளிலும் பந்தம் வையாதே
ஏதொன் றின்றி வாதா டாதே
ஐய மகற்றி மெய்யைக் கடைப்பிடி
ஒரு மனதோடு திருவருள் தேடு
ஓதி யுணர்ந்து நாதனை நாடு
ஔவிய மகற்றிச் செவ்வையாய் நீ வாழ்
கற்பு மங்கையர் பொற்பை விளக்கும்
காலனை யுதைத்த சிலனைச் சிந்தைசெய்
கிட்ட இருக்கும் துட்டரை யகற்று
கீர்த்தி மனதின் பூர்த்திக் கவசியம்
குற்ற மனைத்தும் கற்றவர் வெறுப்பர்
கூற்றன் வருமுன் தேற்றம் பெறநினை
கெட்டவர் தமக்கும் வெட்டெனப் பேசேல்
கேட்டதை மனதில் நாட்டிட விரும்பு
சற்சன ரென்றும் பொற்புற வாழ்வர்
சாகப் பயந்தவர் தேகங் கெடுப்பர்
சிவனருள் பெற்றிடில் பவம்பறந் தோடும்
சீவகா ருண்ணியம் பாவவே ரறுக்கும்
சுத்த இருதயம் மெய்த்துணை புரியும்
சூத்திர முறைகளை நேர்த்தியாய் நீ படி
செகம்போ ற்றிடுதற் ககம் நிறைவெய்து
சேர்ந்தவர் தமக்கு ஆந்துணை நீ புரி
சொட்டைப் பேச்சில் இட்டம் வையாதே
சோறீந் தோர்க்கு மாறு செய்யாதே
தன்னயம் விட்டு மன்னுயிர் தாங்கு
தானம் புரிபவர் மேனிலை யடைவர்
திருவருள் பெற்றவர் பெருமகிழ் வெய்துவர்
தீயோர் சபையைத் தூயர் வெறுப்பர்
துறவிகள் ஈசனை மறவா திருப்பர்
தூர இருந்து வீரம் பேசேல்
தெரிவையர் கற்பைப் பிரியமாய்ப் பேணு
தேட்டம் அனைத்தையும் வீட்டில் வையாதே
தைரியம் மனத்தை வைரப் படுத்தும்
தொழில்பல கற்றவர் எழிலுற வாழ்வர்
தோடுடைச் செவியனை நாடுவர் மேலோர்
நன்றென் றறிவதை என்றும் நீ செய்
நாயின் நன்றியை நீயும் பழகு
நித்திரை தன்னிலும் அத்தனை மறவேல்
நீரிற் குமிழிபோல் பாரிற் பொருள்போம்
நுகர்ச்சி பலவும் அகத்திற் பதியும்
நூல் நூற்பவர்கள் மேல்நிலை யடைவர்
நெற்றிக கண்ணனைப் பற்றி நிதம்வாழ்
நேர்வழிநின்று சீரினைத் தேடு
நைந்தவர் தமது சிந்தையைத் தேற்று
நொய்ய வுரைக்கும் தையலை நீக்கு
நோட்டுக் கடனைக் கேட்டில் விடுக்கும்
பத்தியிற் சிறந்தவர் முத்திபெறுவர்
பார்புகழ் சேவையை நேர்வழி நின்றுசெய்
பிறையணி யிறைவனை முறையாய்த் துதிசெய்
பீற்றற் றுருத்தி ஈற்றி லழியும்
புகழுடையோரைச் சகம்கத் துதிக்கும்
பூசை பலவும் ஆசையாய் நீ செய்
பெருமை தருவதை பேணிச் செய்க
பேறு கிடைத்தவர் தேறுத லடைவர்
பேயோடனேகர் செய்வர் பாசாங்கு
பொன்னகை என்றும் இன்னல் விளைக்கும்
போசனம் செய்யுமுன் ஈசனைத் தொழுநிதம்
மந்திரம் மனதின் பந்த மகற்றும்
மாதரின் சீதனம் வேதனை விளைக்கும்
மிச்சம் பிடிப்பவர்க் கச்சம் குறைவு
மீளாக் கடனுக் காளா காதே
முகத்தி லிருந்து அகத்தை யறிநீ
மூட ருறவைத் தேடுதல் தீது
மெல்லிய லாரைப் புல்லர் கெடுப்பர்
மேதா வியரின் போதனைப் படிசெய்
மையலிற் சிக்கும் தையலை விலக்கு
மொழிபல கற்றவர் அழகுற வாழ்வர்
மோட்டுச் செயல்களில் நாட்டம் வையாதே
வரம்பெற வேண்டில் அரன்பதம் நீ தொழு
வாசனை வஸ்துவில் நேசம் வையாதே
விற்கும் பொருளில் சொற்பலாபம் வை
வீண்பொரு ளாசை மாண்பு குறைக்கும்
உத்தம போதனை சித்தம் திருத்தும்
ஊக்கம் யார்க்கும் ஆக்க மளிக்கும்
வெறிதருங் குடிவகை அறிவை மயக்கும்
வேசிய ராசை நாசம் விளைக்கும்
வைபவ மென்றும் நைவது நிசமறி
ஒற்றுமை என்றும் நற்றுணை நல்கும்
ஓதா திருப்பவர் பேதைய ராவர்.

# தமிழ்ப்பாஷைச் சிறப்பு.

(தே. அ. இராஜரத்தினம் பிள்ளை.)

இப்பாரதகண்டத்து, நிலைபெறூஉம் பற்பல பாஷைகளுள் ஆரியம் தமிழ் எனு மிரண்டுமே பூர்வீக பாஷைகளாம். இவை யிரண்டும் கடவுளிடத்தே உதித்தனவென்று இதிகாச புராணங்கள் கூறுகின்றன. இவை எக்காலத்தில் உற்பத்தியாயினவென்று உறுதியாய்க் கூறுதல் எவர்க்கு மியலாது. இவை உற்பத்தியானகாலம் எதுவென்று ஆராயப் புகுந்தோரும், ஒருவாறு காலவரையறை யிட்டோரும் உத்தேசமாய்க் கூறிப்போந்தனரே யன்றி உண்மை கண்டவரல்லர். இவற்றின் உற்பத்தியை ஆராயப்புகுந்த பிற்கால ஆசிரியர்களும் அதைக்கடவுளுக்கே சமர்ப்பிக்கின்றனர். யாதேனுமோர் பாஷையைக் கடவுளே உண்டாக்கினுரென்பது ஒருபோதும் ஒப்புக்கொள்ளப்படத் தக்கதல்ல. இவ்வுலகின் கண்ணே பற்பல பாஷைகள் நிலவுகின்றன. அவற்றுள் இவையிரண்டையும் மாத்திரம் கடவுள் சிருஷ்டித் திருப்பாராயின் மற்றைய பாஷைகளைச் சிருஷ்டித்தவர் யாவர்? மற்றைய பாஷைகளையும் கடவுளே சிருஷ்டித்தாரெனின் இவ்விரண்டையும் மாத்திரம் அருளினரென விசேடித்துக் கூறுவதின் பயன் யாது? அன்றி, மற்றப்பாஷைகளை வேறு கடவுள் சிருஷ்டித்தாரெனின், கடவுள் ஒருவரா அன்றிப் பலரா? இவ்வாறு தந்தருளினுர் எனும் கூற்றை ஆராயப்புகின் அஃது நகைப்புக் கிடமாகும். ஆதலின் அவை இயற்கையாய் மனித சமூதாயத்தின் கூட்டுறவால் ஏற்பட்டவை யென்பதே பொருத்த முடையதாகும்.

தமிழ்ப்பாஷையைத் தந்தருளியவர் அகத்தியர் என்னுமோர் மகா முனிவரென்றும் அவரே தமிழின் விருத்திக்குக் காரணமென்றும் சிலர் கூறுவதுண்டு. சமஸ்கிருதத்துக்குப் பாணினி போலத் தமிழுக்கு ஆதியில் இலக்கணஞ் செய்தவர் அகத்தியரேயன்றி அதை உண்டு பண்ணினவர் அகத்தியரல்லர். யாரேனு மொருவர் ஒரு பாஷையையேனும் பல பாஷைகளையேனும் இயற்றினுரெனல் பாஷாதத்துவ நூன் முடிவுகட்கு முற்றும் முரணே

தற்போது இந்திய ராணுவத்தில் 66,000-வெள்ளைக்காரர்களும் 1,59,000-இந்தியச் சிப்பாய்களும் இருக்கிறூர்கள். இந்தியச் சிப்பாய்க்கு வருஷச் செலவு ரூ. 400-தான். ஆனல் ஆங்கிலச் சிப்பாய் ஒருவனுக்கு ஆகும் செலவு ரூ. 2000.



யாம். மேலும் அவர் தமிழ்ப்பாஷா கர்த்தாவாயின் முதலில் அப்பாஷையை எளிதிற் கற்பதற் குபயோகமான சிறிய பாடபுத்தகங்களை எழுதி யிருத்தல் வேண்டும். அங்ஙனம் அவர் செய்திருப்பதாகத் தோன்றவில்லை. அவர் எழுதிய முதல்நூல் அகத்தியம் என்று மாத்திரம் கூறப்படுகிறது.

இலக்கணம் என்பது ஒரு பாஷையைப் பிழையற எழுதுதற்கும் பேசுதற்கும் கருவியாகிய நூலாம். ஆகையால் அகத்தியம் தமிழ் பாஷையின் பொருட்டு எழுதப்பட்ட நூலாகிறது. இலக்கியத்திற்கு இலக்கணமே தவிர இலக்கணத்திற்கு இலக்கியம் ஏற்பட்டதல்ல. "இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பல்" என்று பவணந்தியும் கூறிப் போந்தனர். ஆதலின் அகத்தியருக்கு முன்னும் தமிழ்ப் பாஷை நிலவிற்றென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. அப்படியாயின் அவர் தமிழ்ப் பாஷையை அருளிச் செய்தாரென்று எங்ஙனம் போதரும். இவ்வண்ணம் நாம் தமிழ்ப் பாஷையின் உற்பத்தியை யெடுத்தாராயும்போது அது இயற்கையாய் உற்பத்தியாயிற் றென்னும் முடிவையே நாமடைவோம்.

தமிழும் ஆரியமும் சமத்துவமுடையனவாகும். அஃது, வடமொழி தென் மொழி என்னுமிரண்டையும் முற்றக் கற்றுணர்ந்த சிவஞான யோகீஸ்வரர்,

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியும் தழீஇயினுர் ஆன்றவரே யென்றாலிவ்
விருமொழியும் நிகரென்னு மிதற்கைய முளதேயோ"

என்று கூறியதனுல் தெளியக்கிடக்கின்றது. இவை தம்முள் ஆரியம் வேதாகம அதிகாரத்தானும் உச்சாரண வன்மையானும் மந்திரோபதேசப் பயிற்சியானும் ஆண் இலட்சணம் அமையப் பெற்றது. தமிழோ தனக்கிணையிலாப் பாஷை அல்லது இனிய மொழி எனப் பொருள்படுதலின் ஆரியத்தினும் சிறப்புடையதெனப் பொருள்படுதலானும், கன்னடம், தெலுங்கு, மலையாளம் துளுவு முதலிய மகப்பேறுடைமையானும், தன்னினிய வோசையாலும் மிருதுத் தன்மையானும் தேவார திருவாசக வசிகரணத்தானும் பெண் இலட்சணம் அமையப்பெற்றது. ஆரியம் வடதிசைக்கண் நிலவி வடமொழியெனப் பெயர்பெற்று நைமிசாரணிய ரிஷீஸ்வரர் கோட்டத்தாலும் பின்னர் வேதிய வித்தகர்களாலும் பரிபாலிக்கப்பட்டுச் சிறப்புற்றும் ஈற்றில் உலக வழக்கின்றி இறந்தொழிந்தது. தமிழணங்கோ தென்றிசையின் கண்ணே நிலவித் தென் மொழியெனப் பெயர்பெற்று, மங்கைப் பருவமெய்தி, என்றும் இளமைப் பருவமடைந்து, தேவாமிர்தமோ வென்று ஐயுறுமாறு இனிமை பயந்து, ஆரியம்போல் உலக வழக்கழிந்து சிதையாது இன்றும் பூரணச் சந்திரன்போல் விளங்குகின்றது. மனோன்மணியம் என்னும் நாடக நூலுக்கு ஆசிரியரான திருவனந்தபுரம் வித்துவான் சுந்தரம்பிள்ளை யவர்களும் தமது நூலின் கண் தமிழ்த் தெய்வ வணக்கம் கூறுமிடத்து,

இந்திய மகா ஜனங்களின் பேரால்—இந்தியாவின் வருமானங்களை அடகு வைத்து அரசாங்கத்தார் கடன் வாங்கி வந்திருக்கிறூர்கள். இக்கடன் சுமை வளர்ந்து இப்போது 1,200—கோடி ரூபாய் ஆகிவிட்டது.

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதிற்
றக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே,
பல்லுயிரும் பல வுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருண் முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையா வுன்
சீரிளமைத் திறம் வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே."

என்று தமிழ்பாஷையின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழ் என்னும் பதத்துக்கு இனிமை என்பது பொருள்; ஆகவே, அஃது ஆகுபெயராய் அவ் வினிமையை யுடைய சொல்லினை உணர்த்தி நின்றதென்பர் ஒரு சாரார். அங்ஙனமின்றி இமிழ், உமிழ், குமிழ் என ழகரப் பேறுபெற்ற பதங்கள்போலத் தமிழ் என்னும் பதம் தமி என்னும் வினையடியாற் பிறந்த வினைமுதற் பொருண்மை யுணர்த்திய விகுதி குன்றி, தனக் கிணையிலாப் பாஷை என்னும் பொருள்கொண்டு நின்றதென்பர் பிறிதோர் சாரார். அற்றன்று திராவிடம் என்னும் மொழியே தமிழெனெ மருவிற்றென்பர் சிலர். வேறு சிலர் தென்மொழி என்பது தெம்மொழி, தமிழ் என மருவிற்றென்பர். இன்னும் சிலர், முற்காலத்தில் இந்தியாவில் மள்ளர் என்னுமொரு ஜாதியார் இருந்தனரென்றும் அவர்கள் வழங்கின பாஷை மள்ளம் என்றும், அஃது காலகதியில் திரமிளம், தமிழ், திராவிடம் என்றாயிற்றென்றும் இப்படியே பலரும் பலவாறாகக் கூறுவர். அஃதெவ்வாறாயினும் தமிழ் என்னும் பதம் தென்னாட்டு மொழிக்குத் தென் சொல்லாலாயதோர் பதமெனக் கொள்ளலே சாலபுடைத்து.

தமிழ்ப் பாஷை தனிப்பாஷை யன்றென்றும், அஃது சம்ஸ்கிருதத்தினின்று உற்பத்தியாயவோர் கிளைப்பாஷை யென்றும் சிலர் கூறுவர். அன்னோர் கூற்று ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல வென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. சங்க மருவிய நூல்களாகிய குறள், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்ச மூலம், ஏலாதி, பழமொழி முதலிய நூல்களிற் காணப்படும் சம்ஸ்கிருத பதங்கள் எத்துணைச் சிறுபான்மைய? தமிழ்ப் பாஷைக்குச் சம்ஸ்கிருதம் தாயாயின் பண்டைக்காலத்தனவாகிய மேற்கூறிய நூல்களில் சம்ஸ்கிருதம் அதிகமாய் விரவியிருத்தல் வேண்டுமே.

(தொடரும்)

---

நமது நாட்டில் அழிந்துபோன கைத்தொழிலுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க என்ன செய்யவேண்டும்?—அயல்நாட்டுத் துணி இறக்கு மதிக்கு அதிக வரிபோட்டுத் தடுக்க வேண்டியதே.

## "போதினி"யின் 17-வது ஆண்டுக்கு முன் பணமனுப்பிப் பரிசு பெற்றவர்களின் விவரம்

### முதற் பரிசு பெற்றவர்கள்:—

1332. எம். தம்பு, கோலாலம்பூர், 18319. எம். நல்லசாமி பிள்ளை, குன்னூர், 6026. ஏ. ரங்கசாமி, மேட்டுப்பாளையம், 642. எஸ். சுப்பைய செட்டியார், தூத்துக்குடி, 12563. வி. சின்னையா, வால்வட்டிதுறை, 7930. வெ. பழ. லெ. சண்முகம் செட்டியார், பள்ளத்தூர், 13802. என். வைத்தியலிங்கம், வல்லம், 11553. எம். சுப்பராய உபாத்தியாயர், விழுப்புரம், 2499. டி. கே. மூத்துக்கருப்ப பிள்ளை, மதுரை, 14753. சர்மா பிரதர்ஸ், பட்டமடை—திருநெல்வேலி, 17296. P. L. L. N. நாராயணன் செட்டியார், பயாபான் பர்மா, 10951. அண்டி. எம். வெங்கட்டராம ஐயர், கும்பகோணம், 8470. கே. நாராயாணசாமி ரெட்டியார், செங்கற்பட்டு, 15886. டி. எஸ். பட்டம்மாள், தஞ்சாவூர், 19319. வி. ஆர். பாலகிருஷ்ண முதலியார், பெங்களூர், 5176. கே. விஜய முதலியார், இனின்—பர்மா, 1209. சி. குபேந்திர செட்டியார், விழுப்புரம், 16603. ஏ. சி. மருதமுத்து பிள்ளை, புதுச்சேரி, 3031. முத்து முருகைய செட்டியார், புதுச்சேரி, 9454. வி. சம்பந்த முதலியார், லாலாபேட்டை.

### இரண்டாவது பரிசு பெற்றவர்கள்:—

4621. E. K. கதிர்வேலு, வாவுனியா. 18260. பி. அப்பாக்கண்ணு முதலியார், சென்னை. 6158. எஸ். சுப்பரத்தினம், கோயமுத்தூர், 195. மருதமுத்து, கருந்தட்டாங்குடி, 12218. ஐ. சிதம்பரம் பிள்ளை, யாழ்ப்பாணம், 7576. பாக்கியநாதன், பங்களூர் சிட்டி, 13022. தி. சு. சுப்பைய ஐயர் அம்பாசமுத்திரம், 285. வி. எம். அருணாசலம் செட்டியார், பாகான்லூவார், 2405. K. P. N. K. நாராயணன் செட்டியார், டவாய்—பர்மா, 14733. ஆ. கனகசபை, சாவகாச்சேரி, சிலோன், 17301. அ. மு. ருக்குமணி அம்மாள், நாட்டரசன்கோட்டை, 10984. வி. எஸ். வாலாயபாள், திருவல்லிக்கேணி, 8807. வெங்கட்டராம செட்டி, பெங்களூர் கண்டோன்மெண்ட், 813. கே. முத்தையா, சோலாலம்பூர், 19905. G. N. லக்ஷ்மி நரசிம்மையர், திருப்புல்லாணி, 15244. T. ராஜா நாயகர், வன்னிய தேனும்பேட்டை, சென்னை, 1623. சி. காளியாச்சாரி, விருதுப்பட்டி, 16772. K. திருவேங்கடசாமி, புதுச்சேரி, 3226. அ. சண்முகம் பிள்ளை, தளபதி சமுத்திரம், திருநெல்வேலி, 9575. மு. ராமசாமி செட்டியார், கொழும்பு.

### மூன்றாவது பரிசு பெற்றவர்கள்:—

4341 R. சிவசிதம்பரம், விழுப்புரம். 18038-விட்டல் ராவ் முதலியார். நாகப்பூர், 6152-கிருஷ்ணகிரி. பி. ஆறுமுகம் பிள்ளை, செவ்வாய்ப்பேட்டை. 686-எஸ். சேஷஐயர், மதுக்கூர். 12197-சுந்தரேசக் குருக்கள், கோபிசெட்டி


பாளையம். 7358-கே. எம். ரங்ககௌடர், உதகமண்டலம். 13002-கிருஷ்ண ஐயர், அரிபாடி. 11584-காரியதரிசி, "ரீடிங்ரூம்" ஆலவட்டி. 2017-சி. வி. கந்தசாமிபிள்ளை, ஏற்காடு-சேலம். 14722-K. T. தாசிர். வெங்கடராமையர், கும்பகோணம். 17283-எஸ். சுப்பராயபிள்ளை, திருவானைக்கா, திரிச்சி. 10071-K. R. பாலகிருஷ்ணன், பல்லாரி. 8312-ஸ்ரீமதி. பட்டம்மாள், கோமளீசுவரன்பேட்டை, சென்னை. 15932-சொ. ப. அ. ராமசாமி செட்டியார், நத்தம். 19026-T. ராமசாமி, ஷா. திருச்சி. 5579-எஸ். காதர் மொயிதீன் ராவுத்தர், தாராபுரம். 1599-T. S. ராஜகோபாலையர், ஆனந்தபூர். 16511-K. S. கருப்புச்சாமி ஆசாரி. மலையாண்டிபட்டணம். 3216-எஸ். ஆர். சுந்தரம் ஐயர், சிங்காநல்லூர். 9252-G. S. சேஷ ஐயர், 'கௌரவப்பட்டு (S. A.)

———:(o):———

## பம்புக்குழாயா? வம்புக்குழாயா?



முனிசிபல் கவுன்சிலராக வீடு வீடாக நடந்து ஆள் ஆளாகக் கெஞ்சி இரந்து ஓட்டு வாங்கும்போது வானத்தை வில்லாக வளைத்து விடுவோம், ஆற்றுமணலைக் கயிறாகத் திரித்து விடுவோம் எனப் பாசாங்கு செய்கின்றனர். ஓட்டைப் பெற்றுக் கவுன்சிலரானதும் தங்களைப் பெரிய துரைகளாக நினைத்துக்கொள்கின்றனர். தாங்கள் இந்தக் கவுன்சிலர் வேலையிலிருந்து எந்தெந்த வழியாகப் பொருள் சம்பாதிக்கலாம் என வழிதேடா நிற்கின்றனர். போய் முறையிட்டாலும் செவி கொடுப்பாரில்லை. அந்தோ அநியாயம்! அநியாயம்! சேர்மென் னென்னும் தலைவர் சேர் மண்ணாக ஆகிவிடுகின்றனர். இதோ இந்தப் படத்தைப் பாருங்கள்!—ஊருக்கு ஜல ஆதாரவசதி செய்யக் கடமை பூண்ட முனிசிபாலிட்டியார் தண்ணீர்க்குழாய் வைத்து நன்மை செய்யும் லட்சணத்தை! எத்தனை சண்டை! எவ்வளவு கூக்குரல்! என்ன சந்தடி! எவ்வளவு வசையம்பு! எத்தனை மண்டையுடை! எத்தனை அழுகை! எத்தனையோ பணம் வீணாகிறதே—இன்னும் சில குழாய்களை அதிகப்படுத்தினால் என்ன?




## கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(158-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

சுந்தரம்மாள்:—நீ எனக்கு அளவுகடந்த நன்மைகளைச் செய்திருக்கிறாய். உனக்கொரு வேண்டுகோள். உனக்கு எது விருப்பமோ அதை என்னிடம் களங்கமின்றிக் கேட்கவேண்டும்.

ஆனந்த:—"இப்போது தாங்கள் கூறியதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்." என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

ஆனந்தஸிங் நேராய் இன்ஸ்பெக்டர் இராஜம்பிள்ளையின் வீட்டிற்குச் சென்றான். அவர் அவனைக்கண்டதும் தெரிந்துகொண்டு ஆவலோடு "ஜெயந்தானா?" என்றார்.

ஆனந்:—"பூரண ஜெயமே" என்று கூறிப்பின்பு கள்ளர் தன் தந்தையைக் கொன்றதோடு மங்கம்மாள் என்ற மாகதத்தையும் அவள் புத்திரனையும் கூடக்கொன்று விட்டதையும், தான்நடந்து கொண்ட மாதிரியையும் கூறினான். ஆனால் சுந்தரம்மாள் விஷயத்தைப்பற்றி மட்டும் அடியோடு மறைத்து விட்டான்.

அவற்றைக்கேட்ட இன்ஸ்பெக்டர் அவன் விஷயத்தில் மிக்க வியப்படைந்ததோடு விசேஷ பிரியம் வைத்தார்.

அதன் பின் ஆனந்தஸிங் கள்ளர் கட்டப்பட்டுக் கிடக்கு மிடத்தைக்கூறி இரண்டு போலீஸ் உத்யோகஸ்தர்களும் நான்கு ஆட்களும் வேண்டுமென்று கேட்க இன்ஸ்பெக்டர் உடனே அவ்வாறே ஏற்பாடு செய்தார்.

ஆனந்தஸிங் போலீஸ்காரரை அழைத்துக்கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான்.

இதற்கிடையில் கள்ளர் பலவித சிந்தனையி லிருந்தார்கள். ஆனந்தஸிங்கிடம் கிட்டு வைத்திருந்த கடிதம் சிக்கியதும், அவன் சுந்தரம்மாள் கள்ளர் வீட்டிற்குவந்து பேசியதைக் கண்டதும், இவற்றால் அவன் சந்தேகங்கொண்டு தேவபுரிக்கு இராஜவேலை யனுப்பி அந்த இரண்டு மாதர்களின் சரித்திரத்தையும் கண்டறிந்து கொண்டதும், பிறகு மாகதத்தினிட மிருந்த கள்ள பாஷையி லெழுதப்பட்ட தினசரி யவனிடம் சிக்கிக்கொண்டதும், அவன் சுந்தரம்மா

---

பிறநாட்டார் எவ்வளவு உயர்ந்த நோக்க முடையவராயினும், தம் ஆட்சிக்குட்பட்ட ஓர் அந்நிய தேசத்தைச் சுயநலம் இன்றி அரசாட்சி செய்துவர முடியாது.

ளோடு மனங்கலந்து கொண்டதும், அவள் முழு உண்மையையு மறிந்து கொண்டதால் இனி இவர்களுக்கு எள்ளளவுகூட அஞ்ச மாட்டானென்பதும், ஆகிய இவ்விஷயங்கள் ஒன்றுமே கள்ளர்க்குத் தெரியாது. இரவு தாங்கள் செய்த கொலைகளவு அவனுக்குத் தெரியு மென்பதையும் அவர்களறியார்கள். ஆகையால் இரண்டு சவங்களும் தீயில் வெந்து நீறாய் விட்டிருக்குமாதலால், அக்கொலைகளின் சங்கதியே வெளியில் வாராது என்று அக்கள்ளர்கள் எண்ணியிருந்தார்கள்.

ஆதலால் ஆனந்தஸிங் தங்களைக் கைது செய்தால் தண்டனை யடையச் செய்ய அவனிடம் என்ன ருசு விருக்கிறது. ஒன்றுமில்லை. சமாதானத்திற்கே வருவான். இப்போது சுந்தரம்மாளை யழைத்துவரவே பெரும்பாலும் சென்றிருப்பான். அவனை மிரட்டினால் அவனே தன் இரகசியங்கள் வெளியாய்விடுமெனப் பயந்து நம்மை விடுவித்து விடச் செய்வான். நாமும் இச்சமயம் எல்லா நிபந்தனைகளுக்கும் ஒத்துக் கொள்வதுபோல் அபிநயிக்க வேண்டும். ஒருதரம் சுயாதீன மடைந்தோமோ பிறகு, இத்துப்பறிபவனைக் கட்டாயம் பூரணமாய்ச் சரிப்படுத்திவிடலாம். பிறகு சுந்தரம்மாளிடம் எவ்வளவு பணம் வேண்டுமாயினும் பறிக்க நமக்கு ஆயுதமிருக்கிறது என்று தைரியமா யிருந்தார்கள்.

ஆனந்தஸிங் போலிஸாரை யழைத்துக் கொண்டுவந்து இவர்கள் மூவரையும்காட்டி "என் தந்தையையும், இப்போது சவக்கிடங்கி லிருக்கும் இரண்டு பேரையும் ஆக மூவரையும் கொன்ற பாதகர்கள் இவர்களே. இனி யிவர்களை என் கண்முன் வைக்காமல் துரிதமாய்க்கொண்டு போய்த் தனித்தனி காராக்கிரகத்தில் வைத்து மிக்க ஜாக்கிரதையோடு காவல் காக்க வேண்டும்" என்று கூறினான்.

ஆனந்தஸிங் கிருஷ்ணஸிங்கின் மகனென்றும் இரவு நடந்த கொலைகள் இவனுக்குத் தெரிந்திருப்பதோடு ருசுவுக்குச் சவங்களும் இருக்கின்றன வென்றும் தெரிந்ததே கள்ளருடைய தைரியம் கரைந்துவிட்டது. அப்போது ஆனந்தஸிங் மேல் அவர்களுக்குண்டான கோபாவேசத்திற்கு அளவேயில்லை. ஒவ்வொருவரும் அவனைத் தூஷித்து "இப்போதில்லாவிடினும் பத்து வருடங்கள் கழித்தேனும் இதற்குப் பூரணவஞ்சம் தீர்த்துக் கொள்வது சத்தியம் என்று கருது" என்று சபதம் செய்து கொண்டார்கள்.

## 24-வது அத்தியாயம்

போலீஸார் கள்ளரைப் பிடித்துக் கொண்டு சென்றதே, ஆனந்தஸிங் இராஜவேலை நோக்கிச் சுந்தரம்மாள் சரித்திரத்தில் எவ்வளவு கூறவேண்டுவது அவசியமோ அவ்வளவும் கூறி அவனைத் தன் சுய உருவத்தை யடையும்படி செய்து அழைத்துக்கொண்டு மனோன்மணியும் கற்பகமும் இருக்குமிடத்திற்குச் சென்றான்.

இரண்டு பெண்களும் முன்னமே ஒருவர்மேலொருவர் மிக்க அன்புடையவர்களாய் விட்டிருந்ததால், இப்போது இருவரும் ஒரே தாய் வயிற்றிற் பிறந்த

---

செல்வம் மிகுந்த இங்கிலாந்தின் முதன் மந்திரியின் மாதச் சம்பளம் சுமார் ரூ. 6000. ஆனால் ஏழை இந்தியாவில் ராஜப் பிரதியின் சம்பளம் ரூ. 20,000.



சகோதரிக ளென்றும், தங்கள் தாய் இருக்கிறாளென்றும் உணர்ந்ததே யவர்களடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

இதற்கிடையில் சுந்தரம்மாள் நம்பியதுபோலவே அவள் கணவராகிய உலகநாதம் பிள்ளை, அவள் சரித்திரம் முழுமையும் கேள்விப்பட்டதே, அவள் மேல் கோபம் கொள்வதற்கு மாறாக அவள் அனுபவித்த அகாரணமான துன்பங்களுக்கும் மனோ வேதனைக்கும் மிக்க பரிதாப மடைந்து கற்பகத்தையும் தனக்குப் பிறந்த புத்திரியாகவே பாவிப்பதாகவும் இரண்டு புத்திரிகளையும் சீக்கிரம் அழைத்துவந்து குடும்பத்தில் சேர்த்துவிடும்படியும் வேண்டிக் கொண்டார்.

இதற்கிடையில் இராஜவேல் பூரண நிரபராதியென்று நன்றாய் விளங்கிவிட்டபடியால், அவனும், அந்த இரண்டு கன்னிகைகளும் வீட்டிற்கு வந்து உலகநாதம் பிள்ளையையும் அவர் மனைவியையும் சந்தித்தபோது அக்குடும்பத்தில் உண்டான பேரானந்தத்தை இத்தன்மையதென வரையப்புகுவது சாத்தியமான காரியமல்ல. அந்த ஆனந்தத்தில் ஆனந்தஸிங் அங்கிருப்பதைக்கூட உலகநாதம் பிள்ளை முதலில் கவனிக்கவே யில்லை.

ஆனந்தஸிங் தன் தந்தை கொல்லப்பட்ட பின் உலகநாதம் பிள்ளையைக் கண்டபோது கிருஷ்ணஸிங்குக்குப் பதிலாய் இன்ஸ்பெக்டர் இராஜம்பிள்ளை என்னை யுமது கேஸுக்காக அமர்த்தியிருக்கிறார் என்று கூறினானே யன்றி வேறொன்றும் கூறவில்லை. அதோடு அதுமுதல் அவரைக் காணும்போதெல்லாம் மாறுவேடத்தோடேயே கண்டானே யன்றி தன் சுயரூபத்தைக் காட்டினவனேயல்ல. இப்போது தான் தன் சுயரூபத்தோடு அங்கு சென்றிருக்கிறான். ஆகையால் அவர் இவனைக் கண்டதே யாரோ புது மனிதனென்றே யெண்ணிக்கொண்டு "யாரையா?" என்றார்.

ஆனந்தஸிங்:—"நானொரு துப்பறியும் உத்தியோகஸ்தன்" என்றான்.

உலகநாதம் பிள்ளை இதைக் கேட்டதே மிக்க வியப்படைந்து "இன்னொரு துப்பறியும் உத்தியோகஸ்தனா? நான் உம்மை இதுகாறும் கண்டதே யில்லையே" என்றார்.

ஆனந்தஸிங் ஆதிமுதல் நீர் காணும் துப்பறிபவன் நான் ஒருவனே. நானே முதலிலிருந்து இதில் வேலை செய்பவன். முதலில் உம்மிடம் முடிவாய்ப் பேசிக்கொண்டு உடனே இங்கு வந்தது நானே. இப்படிக் கைகொடும் என்று அவன் காட்டும் சமிக்கையைக் காட்டிவிட்டு,

"தாங்கள் கிருஷ்ணஸிங்கிடம் முதலில் வந்து பேசியபோது அவர் கிளிகத்துகிறதென்று அறைக்குள் சென்று திரும்பி வந்தாரல்லவா?"

உலக:—ஆம் ஆம்.

ஆனந்:—"முதலில் பேசியதுதான் கிருஷ்ணஸிங்காகிய என் தந்தை. பிறகு திரும்பிவந்து உம்மிடம் விவகாரத்தை முடிவு செய்தது நான். நான் தந்தையைப்போல் மாறுவேடமணிந்து இதில் வேலை செய்ததால், அத் துஷ்

---

ஏழை இந்தியர்களின் செல்வம் நாசமாவதற்குக் காரணமாயிருப்பவைகளில் நாணயமாற்று என்பதும் ஒன்று.

டர் அவர்தா னென்று எண்ணி யவரைக் கொன்றுவிட்டார்கள்." என்று கூறினன்.

யாவும் கேட்ட உலகநாதம்பிள்ளை வியப்படைந்து, "ஓ! கடவுளே! இத்தகைய அபூர்வமான சமாசாரத்தை நான் இதுகாறும் கேட்டதே யில்லை" என்று கூறிவிட்டு, "இப்போது நீ கேட்கும் பரிசு எதுவாயினும் நான் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன்......" என்றதே,

ஆனந்தஸிங் இவர்கள் சந்தோஷத்தைத் தாராளமாய் அனுபவிக்க விட்டு விட்டு நாம் பிறகு வருவதே தகுதியென்று கருதி "நான் போய் பிறகு வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டு அதைவிட்டுப் புறப்பட்டான். யாவரும் "அகத்தியம், கட்டாயம் சீக்கிரமாகவே வரவேண்டும்" என்று கூவினர்கள். கற்பகம் குறிப்பாய் அவனை நோக்கினள்.

* * *

மறுநாள் கள்ளருடைய கொலைக் குற்றங்களைப்பற்றி விசாரணை நடக்கத் தொடங்கியது. ஆனந்தஸிங் சாட்சியத்தாலும், கள்ளரிடமிருந் தகப்பட்ட சில கடிதங்களாலும், பற்பல அத்தாக்ஷிகளாலும், கொலைக் குற்றங்களைப் பூரணமாய் அறிந்து கள்ளருக்கு தண்டனை விதித்தார்கள். ஆனந்தஸிங் வெற்றி யடைந்தான்.

இரண்டு வாரங்கள் கழித்து அக் குடும்பத்தில் இரண்டு பெண்களுக்கும் மிக்க விமரிசையாய்த் திருமணம் நடந்தது. கிருஷ்ணஸிங் கொல்லப்பட்ட ஒரு விஷயம் தவிர மற்றபடி அவர்கள் சந்தோஷம் சற்றும் கலப்பில்லாததேயாகும்.

இரண்டு மூன்று மாதங்கள் கழித்து புதுவருடம் பிறந்தபோது அது முதல் பாங்கியில் பொக்கிஷதாரா யிருந்த இராஜவேல் தன் மாமனரால் பாங்கியில் ஓர் பாகஸ்தனுய் எடுத்துக்கொள்ளப்பட்டான்.

ஆனந்தஸிங் தன் முதல் கேஸில் அடைந்த அபூர்வ வெற்றியே அவன் கீர்த்திக்குப் பலமான அஸ்திவாரமாய் விட்டது.

மரகதம் ஆதிமுதல் எவ்வளவோ தந்திர சாமார்த்தியங்களோடு சுந்தரம்மாள் வாழ்நாளைக் கெடுக்க முயன்றுவரினும் கடைசியில் அவள் அடைந்த தண்டனையும், நிரபராதிகளாகிய சுந்தரம்மாளும், இராஜவேலும் இரண்டு கன்னிகைகளும் எவ்வளவு துன்பங்களை யனுபவித்தாலும் முடிவில் அவர்கள் அடைந்த சந்தோஷமும் கவனிக்கத் தக்கது.

கெட்ட எண்ணமும் பிறர்க்குத் துன்பத்தை யுண்டாக்கும் கொடிய நடக்கையு முடைவர்கள் எவ்வளவு தந்திர சாமர்த்திய முடையவர்களா யிருந்தாலும் எள்ளளவுகூட மேன்மை பெறவே மாட்டார்கள். மறுபடியும் விசாரணைக்குத் தப்பவுமாட்டார்கள்.

முற்றிற்று.

சட்டங்கள் சிலந்தி வலையை ஒக்கும். அவ்வலை சிறு ஈக்களைப் பிடித்துக் கொள்ளும். ஆனல் வண்டுகளும் குளவிகளும் அதனூடே பாய்ந்தோடிவிடும்.




**ஏழாயிரம் மக்களை வளர்த்தவர்:—**

இங்கிலாந்தைச் சேர்ந்த எஸ்ஸெக்ஸ் என்னுமிடத்தில் டாக்டர். ஜான்ஹென்றி சால்ட்டர் என்னும் பிரபல வைத்தியர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இப்போது வயது 90. அவர்தான் இங்கிலாந்தில் இப்போதுள்ள வைத்தியர்களில் மிகவும் வயதானவர். அவர் பல குடும்பங்களுக்கு 65 வருஷ காலமாக டாக்டராக இருந்து வருகிறார். அவர் தாம் ஏழாயிரம் குழந்தைகளை வளர்த்திருப்பதாயும், அவற்றில் பலர் இப்போது பாட்டிமார்களாய் இருப்பதாயும், அப்பாட்டிமார்களும் இன்னமும் தன்னிடம் சிகிச்சை செய்துகொண்டு வருவதாகவும் கூறுகிறார்.

**மனிதரைவிடச் சிறந்த புழுக்கள்:—**

எறும்புகள், தேனீக்கள் உட்படச் சில பூச்சிபுழுக்கள் சமய சந்தர்ப்பங்களுக்கேற்றபடி சமாளித்துக் கொள்ளக்கூடிய அரிய நுட்பபுத்தி வாய்ந்தவையாக இருக்கின்றன. ஆகவே சில விஞ்ஞான சாஸ்திர விற்பன்னர்கள் அப்படிப்பட்ட நுட்ப மூடைய பூச்சி புழுக்கள் மனிதர்களைவிடச் சிறந்தவையா யிருக்கின்றன எனக் கருதுகின்றனர்.

**புது டெல்லியின் புதுமை:—**

இந்தியா சர்க்காரின் தலைமைஸ்தானமாகிய புதுடெல்லி ஒரு வருஷத்தில் ஆறு மாதந்தான் உபயோகமாகிறது. அதாவது பன்னிரண்டு மாதங்களில் ஆறுமாதம்தான் அங்கு ஜன நடமாட்டமும் உத்தியோகஸ்தர்களின் தடபுடலும் இருக்கும். மீதி ஆறு மாதங்களில் அங்கு யாருமே இருக்கமாட்டார்கள். அப்போது முக்கிய தெருக்களிலெல்லாம் ஒட்டகங்களும், கழுதைகளுமே சுற்றித்திரியும்.

**சுண்டெலிகளைத் தேடும் மனிதன்:—**

ஒரு இளைஞன் உலகம் முழுவதிலும் சிறு சுண்டெலிகளைத் தேடியலைகின்றான். அவன் இதுவரை பற்பல விதமான சுண்டெலிகளைக் கண்டுபிடித் திருக்கிறான். ஒன்றே கால் அங்குலம் நீளமுள்ள சிறு சுண்டெலி முதல் பல அளவுள்ளவற்றைக் கண்டிருக்கிறான். இன்னும் சிறியதும், அல்லது வேறு விசித்திரமான துமான சுண்டெலிகளும் அகப்படுமோ என அறிவதற்காகவே அவன் இவ்வாறு சுற்றி வருகிறான்.

**சிவப்புப் பனியின் விசித்திரம்:—**

வான்கவர் என்னும் தீவில் பெரிய விஞ்ஞான சாஸ்திரிகளும் திகைக்கக்கூடிய வழியில் சிவப்புப் பனி விசித்திரம் ஏற்பட்டிருக்கிறதாம். பனியானது பூமியின்மீது படர்ந்திருக்கும் போது அது சிவப்பாகக் காணப்படுகின்றது. அதைக் கையில் எடுத்தால் வெண்மையாகத்தான் இருக்கிறது. அது படர்ந்திருக்கும் பூமியும் சிவப்பு மண்ணுடையதாயில்லை. இவ்விசித்திரத்தின் மர்மம் கண்டுபிடிக்கப் பலரும் முயன்று வருகின்றனர்.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரஜோற்பத்தி௵ ஐப்பசிமீ—கலியுகாதி 5033, சாலிவாகனம் 1854,
பசலி 1341, கொல்லமாண்டு 1107, ஹிஜரி 1350,
இங்கிலீஷ் 1931௵ அக்டோபர்மீ—நவம்பர்மீ

| ஐப்பசிமீ | அக்டோபர்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | சனி | சப்51-40 | பூரா60 | சித்60 | [புண்ணியகாலம் துலாரவி நா-4-43 விஷு- |
| 2 | 18 | ஞா | அஷ்52-53 | பூரா0-23 | சி0-23அ | மஹாஷ்டமி |
| 3 | 19 | திங் | நவ56-5 | உத்3-33 | மா3-33அ | மஹா நவமி, சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை |
| 4 | 20 | செவ் | தச60 | திரு8-28 | சித்60 | விஜயதசமி (விசேஷம்) |
| 5 | 21 | புதன் | தச0-40 | அவி14-40 | பி14-40சி | வித்தியாரம்பம் |
| 6 | 22 | வியா | ஏகா6-38 | சத21-50 | மா21-50சி | சரிநாள்;சர்வ,மத்வஏகாதசி |
| 7 | 23 | வெ | து13-3 | பூர29-33 | சித்60 | பிரதோஷம் |
| 8 | 24 | சனி | திர19-48 | உத்37-23 | சி27-23மா | 10-க்குள் மழை |
| 9 | 25 | ஞா | சது26-20 | ரே45-10 | அ45-10சி | கௌமதிஜாகர விரதம் |
| 10 | 26 | திங் | ப ○32-28 | அஸ்52-5 | சித்60 | பௌர்ணமி, அன்னபிஷே |
| 11 | 27 | செவ் | பிர37-40 | பர58-33 | சித்60 | ஆஸ்வீயபகுளம் [கம் |
| 12 | 28 | புத | துதி42-18 | கிரு✻60 | அமி60 | கிருத்திகை, திருதினஸ்பிரு |
| 13 | 29 | வியா | திரி45-43 | கிரு3-58 | மா60 | சந்திரோதய மாஸ விரதம் |
| 14 | 30 | வெ | சது48-13 | ரோ8-28 | மா8-28சி | |
| 15 | 31 | சனி | பஞ்49-20 | மிரு11-48 | சித்60 | ராகு |
| 16 | 1 (1931௵ நவம்பர்மீ) | ஞா | சஷ்49-18 | திரு13-58 | சித்60 | |
| 17 | 2 | திங் | சப்47-48 | புன14-55 | அ14-55சி | |
| 18 | 3 | செவ் | அஷ்44-53 | பூச14-25 | சித்60 | 1-துலா-புத குரு |
| 19 | 4 | புத | நவ40-43 | ஆயி12-38 | சித்60 | 4-விரு-செவ் |
| 20 | 5 | வியா | தச35-8 | மக9-28 | அ9-28சி | 16-விரு-சுக் |
| 21 | 6 | வெ | ஏகா28-25 | பூர5-8 உத்59-48 | சித்60 | 20-விரு-புத |
| 22 | 7 | சனி | து20-50 | அஸ்51-30 | மா60 | சனி ஞு-ச கே |
| 23 | 8 | ஞா | திர12-40 | சித்47-0 | சித்60 | செ-பு |
| 24 | 9 | திங் | சது4-5 அ●55-40 | சுவா40-23 | அ40-23சி | தீபாவளி பண்டிகை சர்வத்தீர அமாவாசை, கேதாரி கௌரி விரதம் |
| 25 | 10 | செவ் | பிர47-48 | விசா34-15 | ம34-15சித் | கார்த்திக சுத்தம், பலிபூஜா |
| 26 | 11 | புத | துதி40-50 | அனு28-48 | சித்60 | சந்திர தரிசனம் |
| 27 | 12 | வியா | திரி35-20 | கே24-43 | பி24-43சி | ஆலோசன கௌரி விரதம் |
| 28 | 13 | வெ | சது31-28 | மூல22-10 | அ22-10பி | மாச சதுர்த்தி விரதம் |
| 29 | 14 | சனி | பஞ்29-35 | பூரா21-35 | சித்60 | கணிதாரம்பம் [ஹாரம் |
| 30 | 15 | ஞா | சஷ்29-48 | உத்23-5 | அமி60 | சஷ்டி, கந்தர் சஷ்டி, சூரசம் |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS.

தயாராய்விட்டது! வாங்கத் தவறாதீர்கள்!!

# கற்கோட்டை

## ரஸம் சொட்டும் அற்புத நாவல்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப் பட்டுவந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தா நேயர்களில் அனேகர் இதைப் புத்தகமாய் முடித்துத் தரவேண்டுமென்று பன்முறை கேட்டுக்கொண்டபடியால் இது வெளியிடப்பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ் நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டியது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலைசிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்பிரஷ்டமடைந்த சில உயர்குல மகுடவர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக்கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச், சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேடமாவது, இதிலுள்ள கதாபாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

## இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1-8-0

## "சுவர்ண சுந்தரம்"

நான்கு சித்திரப்படங்களுடன் கூடிய துப்பறியும் இனிய தமிழ் நாவல். மிக்க அற்புதம். பக்கமெல்லாம் சிரிப்பு. ஹாஸ்ய ரசம் நிறைந்தது. மிகு ருசிகரம். இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் எழுதிய நூல்கள்



அனேக தேவாஹஸ்யங்களும், அநேக படங்களும் அடங்கிய ஒன்பதாம் பதிப்பு "ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" உயர்ந்த காலிகோ பயிண்டு ... ரூ. 4 அ. 0

ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை நான்காம் பதிப்பு உயர்ந்த காலிகோ பயிண்டு ... 2 4

ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் மூன்றாம் பதிப்பு ... 2 4

தத்துவ பரிசோதனை அன்னதானபலன் என்னும் நூல் மூன்றாம் பதிப்பு ... ... 0 8

சரீர தேவாலய ரஹஸ்யார்த்த பாரிஜாதகம். இது மிகவும் சிரேஷ்டமான நூல் ... ... 0 6

ஸ்ரீபரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரம் மூன்றாம் பதிப்பு ... 0 6

மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் ... 0 4


ஸ்ரீ ஸச்சிதானந்தர் பாமாலை ... ... 0 4

## ஸ்ரீ. உ. வே. காஞ்சீபுரம், ப்ர. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிய உரைப் புத்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி. பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பிரபந்தங்கட்குத் தெளிவான உரை. (இரண்டாம் பதிப்பு.) | 3 | 0 |
| திருப்பாவை. ஆண்டாளருளிச்செய்த விதற்கு மிக மதுரமான உரை. (இரண்டாம் பதிப்பு.) | 1 | 4 |
| நாச்சியார் திருமொ. இதுவும் ஆண்டாளருளிச் செய்தது. இதற்குச் சுவையே வடிவெடுத்த உரை. | 1 | 12 |
| பெருமாள் திருமொழி. குலசேகராழ்வா ரருளிச்செய்த விதற்கு மிகப் பொருத்தமான உரை. | 1 | 8 |
| திருமாலை, திருப்பள்ளி யெழுச்சி, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு. முறையே தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவி யாழ்வார் இவர்களால் இயற்றப்பட்ட இவற்றிற்கு அருமையான உரை. (இரண்டாம் பதிப்பு.) | 1 | 4 |
| மேற்குறித்த பிரபந்தங்கள் பத்துங்கொண்ட முதலாயிரம் முழுமையும் மூன்று வால்யூம்களாக உள்ளவை. | 10 | 0 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


# இனாம்! இனாம்!!



**முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனாம்.**

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தாரவாதம். உடனே எழுதுங்கள்.

## 22-காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கெடியாரங்கள்



இதிற் கண்டபடி எந்த வேஷப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடிகாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தாரவாதம். ரூ. 4-15-0 வி.பி. வேறு

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்

எல்லா வர்ணங்களிலும் கிடைக்கும்.



நாகரிகமும் அழகும் வாய்ந்த இந்த நவீனபட்டுக் குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்துவிட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும், அங்கவஸ்திரங்களாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு, வெண்சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும்.

அங்கவஸ்திரம் 1-க்கு விலை ரூபா 2—4—0.

இராஜலட்சுமி கம்பெனி, சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

# இனம்! இனம்!! இனம்!!!

அடியிற் குறிப்பிட்டிருக்கிற பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு டேபில் டையம்பீஸ் இனமாகவும், கையில் கட்டும் கெடியாரம் வாங்குபவர்களுக்கு லிவர் பாக்கெட் கெடியாரம் இனமாகவும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு முறை வாங்கிப்பார்த்தால் எம்முடைய உண்மைவிளங்கும்.



நெ. 1.

பாக்கெட் லிவர் கெடியாரம் இனம் டேபில் டையம்பீசுடன்


விலை ரூபா 4-4-0

A ஷெ பொன் கிலிட் கெடியாரம் இனம் டையம்பீசுடன் ரூ. 4-8-0



நெ. 2.


பொன் கிலிட் விசித்திர பட்டைகள் தீர்த்த ரிஸ்லெட் கெடியாரம் தங்க டயல் உள்ளது இனம் பாக்கெட் கெடியாரத்துடன் விலை ரூபா 6-12-0



நெ. 3.

பொன் கிலிட் 8-மூலை

ஷேப் ரிஸ்லெட் இனம் பாக்கெட் கெடியாரத்துடன் விலை ரூபா 6-0-0




நெ. 4.

பொன் கிலிட் பீபாய் ஷேப் ரிஸ்லெட் கெடியாரம் தங்க டயல் உள்ளது இனம் பாக்கெட் கடியாரத்துடன்

விலை ரூபா 6-15-0

## ரோல்டு கோல்டு
## "பிடோ" லீவர் கைகெடியாரம்.

எங்கள் ரிஜிஸ்டர் ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம்.



இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கெடியார கைச்சங்கிலி இனமாகச் சேர்த்து அனுப்பப்படும். வாங்கிக்கொண்ட ஒரு வாரம் வரை சரியாக ஓடவில்லை யென்றால் வாபஸ் ஒப்புக்கொள்ளப்படும். 5 வருஷ காரண்டியுடன் அனுப்புகிறோம்.

இனம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 5-12-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

சுபீரியர் வாட்சு கம்பெனி, கெடியார வியாபாரிகள், மதராஸ்.

இனம்! . ரூபா 100 இனம்!!

குணமில்லை என நிரூபிப்பவர்களுக்கு ரூபா 100 இனம்!!!

## ஜெர்மன் ரோமசங்காரி கிரீம்

என்னும்

## மயிர் போக்கும் ஔஷதம்



3-நிமிஷத்தில் அதிசயக் காட்சியைக் காண வேண்டுமானால் உடனே இந்த புதிய ஔஷதம் தற்சமயம் எம்மால் ஜெர்மனியிலிருந்து தருவிக்கப்பட்டதை உபயோகியுங்கள். இதுவே ஒவ்வொருவருக்கும் மிக்க அத்தியாவசியமானது. சரீரத்தில் எந்த பாகத்திலுமுள்ள (வேண்டாத இடத்தில்) ரோமத்தை இதன் உதவியால் பிரயாசையின்றியும், துர்நாற்ற மில்லாமலும், நோயில்லாமலும், எரிச்சலில்லாமலும், தோல் நிறத்தை மாற்றாமலும், அதிக சுலபமாய் உரோம முழுவதும் இலகுவாய் நீக்கி அவ்விடம் மழமழப்பாகிவிடும். உபயோகிக்கும் விதம் ஔஷதத்துடன் அனுப்பப்படும்.

விலை ரூபா 1—4—0.

## 1-கல் போட்டோகிராப் மோதிரம்.


இந்த மோதிரமானது எலக்டிரிக் தங்கத்தினால் செய்து மேல் பக்கத்தில் ரூதா, பச்சை அல்லது வெள்ளைக் கல் வைத்திருக்கும்.



இந்த மோதிரத்தின் பக்கத்தில் கடுகளவு பிரமாணம் வைத்து பூதக் கண்ணாடி அமைத்திருக்கும். அதைப் பார்த்தால் பெரிய உருவங்களாய் லேடிகள், சுவாமிகள், கட்டடங்கள் முதலானதும் வெகு வேடிக்கையாய்த் தெரியம். இது வெகு ஆச்சரியமானது. 1-கல் போடோகிராப் மோதிரம் 1-க்கு விலை அணா 8

7-கல் ,, ,, ,, ,, ,, 10

தற்கால நாகரீகத்திற்கு ஏற்றமாதிரி
க்ஷவரத்திற்கு அடங்கிய
சாமான்கள் செட்.



ஆலோகிரவுண்ட் க்ஷவரக்கத்தி, பிரஷ், ஷேவிங் சோப், முகம் பார்க்கும் கண்ணாடி, தோல் பட்டை, தீட்டுங் கல், எண்ணெய் புட்டி, கத்தரி, ஜலம் வைக்கும் கிண்ணம் இவ்வளவும் அடங்கியிருக்கின்றன.

செட் 1-க்கு விலை ரூபா 4.

கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

நல்ல அதிர்ஷ்டம்! அரிய சந்தர்ப்பம் நல்ல அதிர்ஷ்டம்!!

பெயர் பெற்ற ஐரோப்பிய

# குதிரைப் பந்தய லாட்டரிகள்.

ஆங்கிலேய குதிரைப் பந்தயங்களைச் சேர்ந்த
அயர்லாந்து ஆஸ்பத்திரிகளின் குதிரைப் பந்தயங்களில்
விநியோகிக்கப்படவிருக்கும் தொகைகள்.

| அடுத்த சம்பவம். | விநியோகிக்கப் படும் தொகை. | இந்த ஆபிசில் ஆர்டர்கள்வந்து சேருவதற்கான கடைசி தினம் | ஒவ்வொரு டிக்கட் டுக்குமான சந்தா தொகை. |
|---|---|---|---|
| மாஞ்செஸ்டர் நவம்பர் ஹாண்டிசாப். 1931ம் வூ நவம்பர்மீ 28வ மாஞ்செஸ்டரில் (இங்கிலாந்து) நடைபெறும் | ஒவ்வொன்றுக்கும் 100,000 பவுன் கடைசி டர்பி பந்தய தினத்தன்று பிரைஸ் தொகை விநியோகிக்கப்படும். 1,902,500 பவுன் 19 பிரைஸ்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன ஒவ்வொன்றும் 100,000 பவுன் வீதம். | 7—10—31 சாதாரண தபால் மூலம். 15—10—31 ஆகாயத் தபால் மூலம். | ரூ. 8-4-0<br>ரூ. 8-8-0 |
| | | இலங்கை 12½ ஷில்லிங்கு (B. P. O., சிங்கப்பூர், ஸ்டெரியிட்ஸ் செட்டில்மெண்டுகள், ஐக்கிய மலாய்த் தீவுகள், முதலிய அயல் நாடுகள்—13 ஷில்லிங்கு B. P. O. | |

எல்லா வெளி நாட்டுச் சந்தாதாரர்களும் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்களே அனுப்பவேண்டும். இந்திய மணியார்டர்கள் அனுப்பக்கூடாது.

அனுவசியமான தாமதமும், கஷ்டங்களு மேற்படாம லிருப்பதற்காக லாட்டரியில் சேருகிற ஒவ்வொருவரும் தங்கள் முழுப் பெயரையும், விலாசத்தையும் தெளிவாக ஆங்கிலத்தில் மணி ஆர்டர் கூப்பனில் எழுதவும்.

குறிப்பு:—எல்லா இந்திய, வெளி நாட்டுக் குதிரைப் பந்தயங்களுக்கும் எம்மால் டிக்கட்டுகள் வாங்கித்தர முடியும்.

ரொக்கத் தொகையுடன் கீழ்க்கண்டவருக் கெழுதவும்:—

**டி. வி. ரெட்டி,**
அதிகாரம்பெற்ற எஜண்டு, ராஜமகேந்திரபுரம்,
கிழக்குக் கோதாவரி ஜில்லா.

தந்தி விலாசம்:—"Luck"

T. V. REDDY, "AUTHORISED AGENT," RAJAHMUNDRY.

# பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




அமிர்த சஞ்சீவி லேகியமும்,

அயக்காந்த செந்தூரமும்.

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஓரே தடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

# இந்த லேகிய செந்தூரங்களால்
## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:.

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, தலைவாய்வு, பித்த வெப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணால் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரிக்ஷார்த்தமாக முதலில் 48-நாளைக்கு வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஓரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக் கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரிக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, ரசி, மார்க்கண்ட ரூப்பு, இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிடல் வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு ஜனிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அநாவசியம். இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ, 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0. தபாற்கூலி ரூபா 1-4-0.

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**

44, தம்புலேயர் தெரு, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கைவிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை காப்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், கட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப் பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு ரூபா 5. ஏககாலத்தில் 3-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 8, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த் தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து ஞாபக சக்தியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



# கூந்தல் வளரும் துளி.



இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 12. தபாற்கூலி வேறு.

# கண்நோய் மருந்து.

இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.



தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

# கஸ்தூரி மாத்திரை



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினம் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாகவாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசவகாலங்களில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களினின்றும் தப்பித்துக் கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு. ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்றுமுதல் 4.மாத்திரைகள் கொடுக்கச சுகமுண்டாகும். இது சர்வ குடும்பங்களிலும் இருக்க வேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

# காப்கியூர் என்னும் க்ஷய அரி.



கபஇருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் காகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை சாலுதினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

# சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல் போகும். இது அனேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியதுமாகிய உண்மையான மருந்து.




இதன் விலை ரூபா 1-8-0. தபாற்கூலி வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்

# சுகபேதி மாத்திரை.

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை திரேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் சலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்துக் கொள்ளலாம். 25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு அணா 6.




# யூகலிப்டஸ் ஆயில்.

## (சுத்தமான நீலகிரித் தைலம்)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அனுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறா, வெட்டுக்காயங்கள், நாம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர் பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்வுபிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி, முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 „ 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0

# நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசியபிறகு முக லட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூ. 1.



# கள்ள நோய் நிவாரணி

## இது 3-தினத்தில் குணப்படுத்தும்.

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட்ட மூலத்தில் அக்னி அதிகரிப்பதினால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற்கூலி வேறு.





# கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல். காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.
வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

# சர்வபடை சம்மாரன்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4. தபாற்கூலி வேறு.

## நற்சாட்சிப் பத்திரம்.

177, கோட்மேல் ரோட்,
நாவலபிடியா, ஸிலோன், 19-2-31.

ஐயா, பத்து மாதகாலமாக இரண்டு காலிலும் கடுவாய்ப் புண்ணினால் கஷ்டப்பட்ட என்னுடைய ஒன்றரை வயது பையனுக்கு தங்களுடைய சர்வபடை சங்காரன் உபயோகித்ததில் ஆச்சரியமான குணத்தைக்கண்டு நான் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தேன். இத்தகைய அபூர்வமான ஔடதத்தை நாலணா விலைக்குக் கொடுப்பது பெரிதும் போற்றத்தக்கதாகும். இந்த ஔடதத்தை ஓர் குடும்ப ஔடதமாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன். ஆதலால் 4 புட்டி வி-பி-மூலம் என் விலாசத்திற்கு அனுப்பும்படி விரும்புகிறேன்.

இப்படிக்கு,
P. S. பொன்னுசுவாமி செட்டி.

# ஓட்டோ லீலா.




எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தைத் தந்து இதற்கு நிகரான சுகந்தமான செண்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யும். இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.

கிரயம் புட்டி 1-க்கு அணா 10. டை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

## சிவப்பிரகாச பல் பொடி. (




இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும் பல் வலி, பல்லில் சொத்தை, ஈறு வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

## அயத்தங்கத் திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போ யிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சாப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

## புத்திர சந்தான எண்ணெ.



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிருந்தால் புழுதரித்தால உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சோரி பற்றி இரத்தங்கட்டி யிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் மேற்படி குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்குக் கரு தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்து போவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

## மதன கோலாகல

## தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், வரம்பற்ற போக துகர்ச்சியாலும் இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒரு விதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும்.



இதுவன்றி வேறு எந்த நோயினாலுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விர்த்தியை யுண்டாக்கி நரம்புக்கு உறுதியைக்கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேகபலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சாக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டுச் சிறந்த கைபாக செய்பாகங்களால் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# ருதக நிவாரணி மாத்திரை.

ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமல் காலந்தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலே யிருத்தல், வயிறுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல் மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.



ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1.

# (காட்லீவர் ஆயில்) மீன் எண்ணெய்.



இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்பலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், ரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகோசங்களின் ரோகத்தைக் குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

# சாண்டோஸ் பாஸ்பாரிகோ.

**விருத்தாப்பியருக்கும் வீரிய விருத்தி கொடுக்கும்.**

இந்த சஞ்சீவித் திராவகம் அநேக விதமான கஷ்ட வியாதிகளான பலவீனம், கை கால் ஓய்ச்சல், சோம்பல், திரேகம் மெலிந்துபோகுதல், ஜீரண அசக்தி, புளியேப்பம், பசி யின்மை, ஞாபகக் குறைவு, தைரியக் குறைவு, தாது விருத்தி இல்லாமல் இந்திரியம் நித்திரையில் ஸ்கலிதமாய் தானே வருதலும், கண்டமாலை, வாய்விளுல் மலச்சிக்கல், நரம்புத் தளர்ச்சி, தலைவலி, மார்பு நோய், இடுப்பு நோய் இவை முதலான வியாதிகளை ஒரு வாரத்திற்குள் போக்கடித்து தேக உருப்புகளுக்கு வலுவை யூட்டி சிங்கத்துக்கு நிகரான பலத்தைக் கொடுத்து ஜீவாமிர்தமாகிய ரத்தத்தைச் சுத்தப்படுத்தும். இதுவரையிலும் யாவராலும் கண்டுபிடிக்கப்படாத விசேஷ வீரியவிருத்தி மருந்து. இது சரீரத்தில் மாந்தீகம்போல் வேலை செய்யும். இந்த சஞ்சீவி திராவகத்தைச் சாப்பிட்ட ஐந்து நிமிஷத்திற்குள் சந்தோஷமும் ஆச்சரியமும் சௌக்கியமும் பெறுவது உண்மை. புட்டி 1-க்கு விலை ரூபா 2.



கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# புதிய கொக்கோக வசனம்

## (உண்மையான இன்பநூல் இதுவே)

இதைப்போன்ற பலவித புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும், அவைகளில் விஷயங்கள் மனதிற் பதியுமாறு எழுதப்படவில்லை. ஆனால் இச்சிறு நூலில் ஆண் பெண் இருபாலரும் சிற்றின்ப சம்பந்தமாகவும், இல்வாழ்க்கை சம்பந்தமாகவும் அறியவேண்டிய பல விஷயங்களும், மர்மங்களும் தெளிவான நடையில், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆறும்பதிப்பு வெளியானதாலேயே இதை மக்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்பது தெரிகிறது. சட்டைப் பையில் அடங்கும்படியான அளவு புஸ்தகம் விலை ரூபா 1—0—0. வி. பி. வேறு.

காதலர் கண்டு களிப்புறும் நூல்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இன்பவாழ்க்கையின் இரகசியங்கள் | ... 2 | 0 | 0 | ரதி சாஸ்திரம் | ... 1 | 4 | 0 |
| | | | | சரீர மர்ம சாஸ்திரம் | ... 1 | 0 | 0 |
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் | ... 2 | 0 | 0 | மதனாதி ரஹஸ்யம் | ... 1 | 0 | 0 |
| | | | | ரதிமதனசிருங்காரரகஸ்யம் | 2 | 0 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ... 2 | 4 | 0 | மாயாஜால விநோதம் | ... 1 | 0 | 0 |
| | | | | மனோவசிய சாஸ்திரம் | ... 1 | 8 | 0 |
| மாதர் நீதி | ... 1 | 0 | 0 | ஸ்திரீ புருஷ ரகசியம் | ... 1 | 8 | 0 |

விலாசம்:—ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# அயக்காந்த சத்தின் திராவகம்.



இந்தத் திவ்விய ஔஷதம், விஷசுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினாலும் தேகம் மெலிந்து வெளுத்துப் போனவர்களுக்கும், வேறு பல வியாதிகளால் தாக்கப்பட்டுப் பலமற்றுப் போனவர்களுக்கும், தாது விருத்தி நாட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுவோம். இம் மருந்தை உட்கொள்வதால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீரண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாதுவிருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.

இம் மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, வலிவுள்ள மக்களைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆண் பெண் இருபாலரும் எக்காலத்திலும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்சு தண்ணீர் அல்லது பசும்பாலில் 10, 12-துளி வரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6,7-துளிகள் வரையிலும் காலை மாலை இரு வேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும் பொருட்டே மிகக் குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒரு மாதம் சாப்பிடக்கூடிய மருந்து 0-12-0. தபாற் செலவு வேறு.

கருணாநிதி டிபோ, நெ. 1/6 வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும்
# மகா சந்தனாதித் தைலம்.

அன்பர்களே! வெயிற் காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக் கட்டைச் சத்தினாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான கற்க வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின் மேல் செய்யப்பட்டு இப்போது வெளி வந்திருக்கிறது.



நூற்றுக்கணக்கான பணச் செலவின் மேல் தீர்க்கவேண்டிய வியாதிகளை யெல்லாம், இந்தச் சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி யிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்கா யிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்து வருவதால் கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, சாலேஸ்வரம் பித்தபாண்டு, காமாலை, அஸ்தி சுரம், நாவறட்சி, கைகால் எரிவு, தேக வெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி, சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபால சூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாகும்; ஞாபக சக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்துவருவதால் மூளையில் கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, துடிதுடித்து, தலை மயக்கம் முதலியவைகளும் நீங்கும்; மறதி ரோகம் அறவே ஒழிந்துவிடும்; பித்தத்தினால் நரைத்த உரோமங்கள் கருமை யடையும்.

இன்னும் இத்தைலத்தைத் தலையில் தடவிவருவதால் கூந்தல் கருமையாய்ப் பளபளப்புடன் வளரும். உரோமங்களிலுள்ள நுனி வெடிப்பு; செம்பட்டை, சுறட்டை முதலியவை நீங்கும். தலையில் மயிர் உதிர்தல், பூச்சிவெட்டு முதலியவைகளும் நிவர்த்தியாகும். எப்பொழுதும் சிரசிலும் உடம்பிலும் இனிமையான சுகந்தம் பரிமளித்துக்கொண் டிருக்கும். இன்னும் இத்தைலம் மனமொத்த காதலர்க்கு மாறா இன்பத்தையும் தரும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும், பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவைகளையும் நீக்கவேண்டும்.


இதன் விலை 1 சேர் தைலம் அடங்கிய டின் ரூபா 1–12—0
இதன் விலை ½ சேர் தைலம் அடங்கிய டின் ,, 1—0—0

---

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி,

நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.

# டேபில் டைம்பீஸ் இனாம்!!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம் பீஸ் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முந்துங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

# அற்புத எலெக்டிரிக் மோதிரம்.

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பட்டது! இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர் வரை ஆண் பெண் இருதிறத்தார்களும் உபயோகப் படுத்தலாம். இம்மோதிரத்திற் குள்ளிருக்கும் எலெக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும்நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம் மோதிரத்தை உபயோகியுங்கள்! இம் மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பட் டிருக்கின்றது. இதை விரலில் அணிந்தவுடன் அதிலிருந்து மின்சார சக்தி தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளூயன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீரணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம், சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாக்ஷிப் பத்திரங்கள் பிரதி தினம் வந்து குவிந்துகொண் டிருக்கின்றன.



மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0
மோதிரம் 3-க்கு ரூ. 3–12—0

# இரகசிய சுகானந்தன்.

இது ஒரு அதிசயமான ரப்பர் குழாய். ஆண்கள் சம்போக காலங்களில் உபயோகிக்க ஸ்பெஷலாக தயார் செய்யப்பட்டது. பெண்களிடமிருந்து நோய்களை வாங்கிக்கொள்ளாமல் தடுப்பதற்கு இதைவிட வேறுவழி கிடையாது. இதை சம்சாரிகளும் உபயோகிக்கலாம். இதனால் கெடுதல் ஒன்றும் கிடையாது. இதன் விலை ரூ. 1.



# பெண்களுக்கேற்ற கருவி.


அடிக்கடி கர்ப்பம் தரிப்பதைத் தடுக்கவேண்டுமானால் இந்த ரப்பர் கருவியை உபயோகிக்க வேண்டும். இக்கருவி மிகவும் மெல்லியதாகவும், சில்க்நெட், சில்க்டேப் முதலியவைகள் உள்பட இதன் விலை ரூபா 2—8—0.

---

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.

# அமெரிக்கன் ஆகாயத் துப்பாக்கிகள்.

இனும்! 100 குண்டுகள் இனும்!!



அபாரசப்தம்! அபாயமில்லாதது!!

இந்த ஆகாயத் துப்பாக்கியைப் புதிதாக அமெரிக்காவிலிருந்து வரவழைத்திருக்கிறோம். இது 250 ரூபா விலையுள்ள துப்பாக்கிக்கு நிகரானது. இந்தத் துப்பாக்கியால் பட்சிகளை வெகு சுலபமாகச் சுட்டு வேட்டையாடலாம். இதற்குச் சர்க்கார் லைசென்ஸ் தேவை இல்லை. எவ்விடத்திலும், யாருடைய கையிலும் இருக்கலாம். இராக்காலங்களில் பிரயாணஞ் செய்கின்றவர்கள் திருடர்கள் அஞ்சும்படி செய்வதற்கு இந்தத் துப்பாக்கி மிகவும் உபயோகமானது. இது பெரிய சப்தம் செய்யக்கூடியது.

100 குண்டுகளுடன் துப்பாக்கி 1-க்கு விலை ரூபா 4.

தபால் சிலவு, பாக்கிங் சார்ஜ் ரூபா 1. வேறு.

தனியாக 100 குண்டுகளின் விலை அணா 8.

வேண்டியவர்கள் ரூபா 1. முன்பணமாக அனுப்பவேண்டியது.


இது ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கத்தக்கது.

---

மாதம் 100-ரூபா முதல் 500-ரூபா வரை சம்பாதிக்கக்கூடிய

## சிறிய சைஸ் தையல் இயந்திரம்

187513



இது சாதாரண பெரிய தையல் மெஷின்களைப்போலவே சிறிய சைசில் உள்ளது. இதை மேஜையின்பேரிலோ, நாற்காலியின்பேரிலோ வைத்து முடுக்கி எந்த விதமான தையல் வேலையும் செய்யலாம். தையல்காரர்களிடம் நீங்கள் போகவேண்டிய அவசியமே இல்லை. வீட்டிலுள்ள பெண்களே எல்லா தையல் வேலையும் செய்துவிடலாம். சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியன எதுவும் இலகுவில் தைக்கலாம். இந்த மெஷினில் ஒரு குழந்தையும் வேலை செய்யலாம். இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் போட்டு ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். 5 வருட காரண்டியுள்ளது.

இதன் விலை ரூபா 3-0-0.

---

விலாசம்:—கருணைநிதி டிபோ,

நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரீஜிஸ்டர்ட்.)

## "சகுந்தலா" கூந்தல் வளரும்

### பரிமளத் தைலம்

ஆழாக்கு எண்ணெய் அடங்கிய




டின் 1-க்கு விலை அணா 12.

இத்தைலத்தின் பரிமளம் எவருக்கும் இன்பத்தை யளிக்கும். இது கூந்தலை நீளமாக வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச் செய்யும் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்தி செய்யும். கண்ணில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தேக நமைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மனோ வியாகூலம், ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்துத் தேக ஆரோக்கியத்தைத் தந்து வாசனையை உண்டாக்கும். இந்தத் தைலம், பல வனமூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதில் ஒரு டின் தைலம் வாங்கிப் பார்த்தால் இதன் அருமை விளங்கும்.

# கிருஷ்ண சஞ்சீவி




தலைநோய், பாரிச வாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் இவைகளைத் தீர்ப்பதில் இது முதன்மை பெற்றது. நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியைத் தடவி நன்றாய் இரண்டு மூன்று நிமிஷங்கள் வரை தேய்த்தால், அது மாயமாய் ஓடிவிடும். இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கும் இதை உபயோகிக்கலாம். இதன் புட்டிகள் ஆயிரக் கணக்காகச் செலவழிந்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும், பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும். இதன் விலை புட்டி 1-க்கு அணா 8. டஜன் 1-க்கு ரூ. 5.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"




ஆனந்தபோதினி 1-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம், 13-ம், 14-ம், 15-ம், 16-ம் வருடப் புத்தகங்கள் முழு காலிகோவில் நேர்த்தியாக பைண்ட் செய்யப்பட்டவை.

ஒவ்வொன்றும் விலை ரூபா 1-6-0; தபால் கூலி பிரத்யேகம்.

ஒரு வருடத் தனி சஞ்சிகைகள் 12-ம் விலை ரூ. 1; தபால் கூலி வேறு.

1-வது வருஷ பைண்ட் புத்தகம் விலை ரூபா 1-12-0; தபால் கூலி வேறு.

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS.
6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.